விலை: 30.00
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 வைகாசி 06 ஞாயிற்றுக்கிழமை (20.05.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 152

## காயங்களுடனான நினைவுகள் ஒருபோதும் இறக்காது

**மே-18 இல் த ஹிந்து ஆசிரியர் தலையங்கம்**

(சென்னை)

தமிழர்களின் பெரும் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த அரசாங்கம், அவர்களை கைவிட்டுவிடக்கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளது.

த ஹிந்து நாளிதழில் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள ஆசிரியர் தலையங்கத்தில் இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைப் பெற்றுத்தருவதாக உறுதியளித்தே கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் ஆட்சி 15☛

## பிபிசி சர்வதேச ஊடகத்தில் பிரபாகரனின் பொன்மொழி

(லண்டன்)

பிரிட்டன் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் சர்வதேச ஊடகமான பிபிசி தனது தமிழ் சேவையில் தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பொன்மொழியை வெளியிட்டு உலகத் தமிழர்களை கௌரவித்துள்ளது.

பிபிசி தமிழ் சேவையில் தினமும் ஒரு அறிஞரின் பொன் 16☛




## நினைவேந்தலுக்கு ஒத்துழைத்தோருக்கு

**முதலமைச்சர் நன்றி தெரிவிப்பு**

(யாழ்ப்பாணம்)

மே18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை ஒன்றிணைந்து நடத்த ஒத்துழைத்த அனைவருக்கும் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் நன்றி தெரிவித்துள்ளார். 16☛

**5 பிள்ளைகளின் தந்தை**

## யமுனா ஏரியில் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பற்ற நிலையில் உள்ள நல்லூர் யமுனா ஏரியில் இருந்து குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நல்லூர் செம்மணி வீதியை சேர்ந்த 15☛

# இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட தமிழர்களுக்கு என்ன நடந்தது?

**தீக்காயத்துக்குள்ளான குடும்பஸ்தர்**

## சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

பெற்றோல் போத்தல் மீது தவறுதலாக தீக்குச்சி பட்டு தீப்பற்றியதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் ஐந்து நாட்களின் பின் சிகிச்சை பலனின்றி நேற்று யாழ். 16☛

## இலங்கை அரசு பதில் வழங்க வேண்டும்

**பிரித்தானியாவின் தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஷக் கோல்ட்ஸ்மித்**

**(லண்டன்) இறுதி யுத்தத்தில் இலங்கை இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட தமிழ் உறவுகளுக்கு என்ன நடந்தது என்பது பற்றி இலங்கை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும் என பிரித்தானியாவின் தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் உறுப்பினரான ஷக் கோல்ட்ஸ்மித் கோரிக்கை விடுத்துள்ளார்.** (15-ம் பக்கம் பார்க்க...)

## விபத்துக்குள்ளான இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளான இளைஞர் ஒருவர் 7 நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு பாண்டியன் குளம் 8 ஆம் கட்டையை 15☛

## சங்கிலி அறுத்தவர்கள் பித்தளை என்றவுடன் ஏமாற்றத்துடன் வீசினர்

**இமையாணன் உடுப்பிட்டியில் சம்பவம்**

(கரணவாய்)

இலக்கத்தகடு அற்ற மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் பெண் ஒருவரின் சங்கிலியை அறுத்ததுடன் அது பித்தளை சங்கிலி எனத் தெரிந்தவுடன் அதை வீசிவிட்டு சென்ற சம்பவம் ஒன்று இமையாணன் உடுப்பிட்டி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் அப்பகுதியைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் தண்ணீர் எடுப்பதற்கு சென்றுள்ளார்.

அச்சமயம் இலக்கத்தகடு அற்ற மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அப்பெண்ணின் கழுத்தில் இருந்த சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர். அது பித்தளைச் சங்கிலி என தெரியவந்தவுடன் அறுத்த சங்கிலியை அவ்விடத்திலேயே வீசிவிட்டு சென்றுள்ளனர். (ம-60)

**கியூபாவில் இடம்பெற்ற**

## விமான விபத்தில் 110 பேர் உயிரிழப்பு



(ஹவானா)

கியூபாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விமான விபத் 16☛

## முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு நீதி கிடைக்க வேண்டும்

**பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்கெலி**

(லண்டன்)

முள்ளிவாய்க்கால் கொடூரத்திற்கான நீதியை பெற்றுக்கொடுக்கும் முயற்சிகளை இரட்டிப்பாக்க வேண்டும் என பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் போல் ஸ்கெலி வலியுறுத்தியுள்ளார்.

தமிழர்களுக்கான அனைத்து கட்சி நாடாளுமன்றக் குழுவின் தலைவர் போல் ஸ்கெலி, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை முன்னிட்டு விடுத்துள்ள செய்தியில் இந்த கருத்தைக் கூறியுள்ளார்.

சிவில் யுத்தத்தின் இறுதிப் பகுதியில் முள்ளிவாய்க்காலில் உயிரைப் பறிகொடுத்த பல்லாயிரக்கணக்கான மக்கள் நேற்று 15☛

**இலங்கையின் தற்கால நிலைமை குறித்து**

## அரச பிரதிநிதியுடன் ஐ.நா ஆணையாளர் சந்திப்பு

(கொழும்பு)

ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஏ.எல்.ஏ. அசீஸ், ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் செய்ட் அல் ஹுசைனைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்பு 15☛



## ஐ.நா இலங்கை இராணுவம் மீது போர்க்குற்றம் சுமத்தவில்லை

**இராணுவ தின நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரி**

(கொழும்பு)

சில ஊடகங்களும் இனவாத அமைப்புக்களும் தவறாக குறிப்பிடுவதைப் போன்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளரால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளிலும் எமது பாதுகாப்பு படையினர் மீது போர்க் குற்றங்கள் சுமத்தப்படவில்லை.

வெளிநாடுகளில் வசிக்கும் அரசுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் எதிரான தமிழீழ விடு 15☛



# உயிர்த் தியாகம் செய்த இராணுவத்தை இனப்படுகொலையாளர்களாக சித்திரிப்பது

## மிகப்பெரிய துரோகம்-மகிந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் மக்களுக்கு சுதந்திரத்தையும் உயிர் வாழ்வதற்கான உரிமையையும் பெற்றுக் கொடுப்பதற்கு, தமது சொந்த வாழ்வை, தமது உடல் உறுப்புக்களை தியாகம் செய்து அர்ப்பணித்தவர்கள் அனைவருமே மகத்தான மனிதர்கள் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

எனினும் அத்தகைய ஒரு மகத்தான மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபட்ட வீரர்களை இனப்படுகொலையில் ஈடுபட்டவர்கள் போன்று, பயங்கரவாதத்தை ஆதரிப்பவர்கள் சித்திரிப்பதாக மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தினார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதனைக் கூறியுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கமும் அதனை இனப்படுகொலையாக ஏற்றுக் கொள்வது இந்த யுகத்தில் இடம்பெற்ற மிகப்பெரிய துரோகம் என்று அவர் கூறியுள்ளார்.

தமிழ் மக்கள் இன்று சுதந்திரமாக வடக்கில் வாழ்வதும், தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு இன்று யுத்தமற்ற அமைதி கிடைத்திருப்பதும் எமது இராணுவ வீரர்கள் செய்த அர்ப்பணிப்பு காரணமாகவே என்று அவர் கூறியுள்ளார்.

எனவே இலங்கை மக்களுக்கு மரண பயம் இன்றி வாழ்வதற்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த இராணுவ வீரர்களை நாங்கள் மிகவும் மரியாதையுடனும் பெருமையுடனும் நினைவு கூர வேண்டும் என்றும், அவர்களை பழிவாங்கும் முயற்சியை தோற்கடிப்பதற்காக நாம் முன்நிற்க வேண்டும் என்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். (ம)

# அடுத்த வாரத்தில் அதிக மழை பெய்யும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்க நிலை மேலும் வலுப்பெற்று வருவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த திணைக்களத்தின் ஊடக அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலை மேலும் வலுப்பெறுமாயின் நாட்டின் பல பாகங்களில், அடுத்த வாரத்தில் அதிக மழையுடனான காலநிலை நிலவும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அத்துடன் இன்று பிற்பகல் வேளை மழை பெய்வதற்கான சாத்தியகூறுகள் நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம்... அதற்கமைய, மத்திய, சப்ரகமுவ, ஊவா மற்றும் மேல் மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் 100 மில்லிமீற்றர் அளவில் கடும் மழை பெய்யக்கூடும் என்றும் காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, புத்தளம் முதல் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையிலும், மாத்தறை முதல் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பிராந்தியங்களில் காற்றின் வேகம் மணிக்கு 70 முதல் 80 கிலோமீற்றர் வேகத்தில் அதிகரித்து வீசக்கூடும் என காலநிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

கடற்றொழிலில் ஈடுபடுகின்றவர்கள் அவதானத்துடன் செயல்பட வேண்டும் என அந்த நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, அதிக மழையுடனான காலநிலை காரணமாக பல நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

தெதுரு ஓயா நீர்தேக்கத்தின் 4 வான் கதவுகளும் உடவலவ நீர்தேக்கத்தின் ஒரு வான் கதவும், கலாவெள குளத்தின் ஒரு வான் கதவும் திறக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ம)

# ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முப்படைத் தளபதிகள் கௌரவிப்பு

(கொழும்பு)

தரைப்படை, விமானப்படை மற்றும் கடற்படை என்பவற்றின் தளபதிகள் உட்பட முப்படைகளையும் சேர்ந்த 50 அதிகாரிகளுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று காலை "அதிவிசேட சேவா விபுஷண" பதக்கம் வழங்கி கௌரவித்துள்ளார்.

இந்நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

முப்படைகளையும் சேர்ந்த தற்போது சேவையில் இருக்கின்ற மற்றும் ஓய்வுபெற்ற 52 பேருக்கு இந்தப் பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

முதலில் இராணுவத் தளபதி லெப்டினென்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிரிமேவன் ரணசிங்க மற்றும் விமானப்படை தளபதி ஏயார் மார்ஷல் கபில ஜயம்பதி ஆகியோருக்கான பதக்கங்களை ஜனாதிபதி வழங்கி கௌரவித்துள்ளதாகவும் செயலக வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன. (ம)

# தவறுதலாக துப்பாக்கி வெடித்ததில் பொலிஸ் கான்ஸ்டபிள் உயிரிழப்பு

திருகோணமலை-ஹொரவப்பொத்தானை, வாகொல்லாகட பகுதியில் துப்பாக்கியொன்று தவறுதலாக செயற்பட்டதில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்த துப்பாக்கியொன்று தவறுதலாக வெடித்ததில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.

சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள், ஹொரவப்பொத்தானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற இந்த சம்பவத்தில் வாகொல்லகட பொலிஸ்சோதனை சாவடியில் கடமையாற்றும் உத்தியோகத்தரே உயிரிழந்துள்ளார். (ம)


**B+ அல்லது B- அல்லது O+ அல்லது O- குருதி வகை சிறுநீரகம் உடனடியாகத் தேவை**

55 வயதுடைய ஆண் ஒருவருக்கு B+ அல்லது B- அல்லது O+ அல்லது O- குருதி வகை சிறுநீரகம் உடனடியாகத் தேவை. வழங்கு பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். (25-35) வயதிற்கு உட்பட்ட ஆண்/ பெண் ஆகியோரின் சிறுநீரகம் தேவைப்படுகின்றது.

**தொடர்புகளுக்கு: 0771080875, 0770811624, 0754949839**

(4136)


# மரண அறிவித்தல்

## கந்தப்பு முருகேசு

(அம்மா வீட்டு முருகேசு-கரவெட்டி கிழக்கு)



பெரியதோட்டம் கரவெட்டி கிழக்கு கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு முருகேசு (அம்மா வீட்டு முருகேசு) 18.05.2018 அன்று காலமானார்.

அன்னார் கந்தப்பு-செல்லாச்சி தம்பதியினரின் ஏக புத்திரனும், வல்லிபுரம்-கனகம்மா தம்பதியினரின் ஏக புத்திரி இரஞ்சிதமலரின் அன்புக் கணவரும், வனிதா (ஆசிரியை-கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), சுகிர்தா (ஆசிரியை-யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம்), ரமேஸ் (ஆசிரியர்- கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை), மயூரிகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கஜேந்திரன் (ஆசிரியர்-வேம்படி மகளிர் கல்லூரி), நந்தகுமார் (ஆசிரியர்-யா/ஹாட்லிக் கல்லூரி), சிந்துஜா, மகிந்தன் (பொறியியலாளர்- லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், டதுசிகா, டர்மினி, கிஷோபன், புருசோத்தமன், கோவர்சன், அஸ்வின், லகீஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2018) ஞாயிறு மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரிய தோட்டம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. (சி-2661)

தகவல்:-மகன்-ரமேஸ் (0757351856)

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தலை எதிர்கொள்ளத் தயார்

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளதாகவும் அந்த தேர்தல் குறித்து அரசாங்கம் அறிவிக்கும் வரையில் தான் எதிர்பார்த்துள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு கூட்டு எதிரணியின் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ஷவை நியமிக்க நடவடிக்கை எடுப்பதாக கூறப்படுவது தொடர்பில் மகிந்த ராஜபக்ஷவிடம் வினவியதற்கே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அரசாங்கம் எந்தவித முன்னெடுப்புக்களுக்கும் வந்திராத நிலையில் ஜனாதிபதி வேட்பாளர் குறித்து அறிவிக்கத் தேவையில்லை. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அரசாங்கம் உறுதியான தீர்மானத்தை வெளியிட்டால், எமது வேட்பாளர் யார் என்பதை அறிவிப்போம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)


**வீடு வாடகைக்கு**

நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள மூன்று அறையுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு

**தொடர்புகளுக்கு:0771083481**

(சி-2660)

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

**அல்மராய் நேர்முகத் தேர்வுக்கு தோற்றிய 9 பேரும் தெரிவாகினர்!**

நீங்களும் இந்த அரிய வாய்ப்பைப் பெற!

**45,000 - 80,000/- உடன்**

மெக்கானிக், A/C டெக்னீஷியன், வெல்டர், வீட்டு & வாகன மின் இணைப்பாளர், பிளம்பர், விற்பனை உதவியாளர், சாரதிகள், தொழிலாளர்

வாகன சாரதிகளுக்கு வாசியான **வேலைவாய்ப்புக்கள்!**

| | | |
|---|---|---|
| மோட்டார் சைக்கிள் | டெலிவரி றைடேர்ஸ் | 63,000/- + |
| சிறிய ரக வாகனம் | டக்சி ட்றைவர் | 49,200/- + கமி |
| கன ரக வாகனம் | விற்பனை சாரதிகள் | 80,000/- + கமி |
| | ட்ரெய்லர் டிறைவர் | 70,000/- + OT |

(92649)

அரச அங்கீகாரம் பெற்ற வடக்கின் ஒரே வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்

பதிவுகளுக்கு 0777 324 004

SIKARAM ACADEMY — FAST TRACK to CAREERS — Sri Lankan Entrepreneur of the Year 2017

221 - 1/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம் 021 - 222 00 11 www.sikaram.lk

TGL SINCE 1999 Trans Gulf (Pvt) Ltd., 90, First Floor, Chatham Street, Colombo 1 www.tgl.lk

**உதவியாளர் தேவை**

கரவெட்டியில் வயோதிபத் தாயாரை பராமரிக்க பெண் உதவியாளர் தேவை.

**தொடர்பு: 0771130600**

(சி-2663)

**வேலைக்கு ஆள் தேவை**

முல்லைத்தீவு பகுதியில் தோட்ட வேலைக்கு ஆள் தேவை. கால்நடை வளர்ப்பில் ஆர்வமும் அனுபவமும் இருப்பதுடன் தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். ஆரம்ப சம்பளம் மாதம் 30,000/- வழங்குவதுடன் பிற சலுகைகளும் உண்டு.

**தொ.பே:0771681697, 0766205322** (சி-2658)


# கண்ணீர் அஞ்சலி

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜசிந்தா சசிலன் அவர்களின் அன்புத் தந்தையார்



## செல்லையா சுந்தரலிங்கம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

(சி-2662)

பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும் ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி

# "புலிகளின் நிழல்கள் மக்கள் மத்தியில் பிரிவினைவாதத்தை தூண்டிவிடுகிறது"

## கமால் குணரட்ன கவலை



(கொழும்பு)

"தமிழீழ விடுதலைப்புலிகளின் நிழல்கள் இன்று பல்வேறு வகையில் மக்கள் மத்தியில் பிரிவினைவாதத்தைத் தூண்டி விடுகின்றன" என இறுதிக்கட்ட போரின் பின்னரான தற்போதைய நிலைமை குறித்து ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்துள்ளார்.

"வட்டுக்கோட்டை பிரகடனத்துடன் தீவிரமடைந்த பிரிவினைவாதம் தற்போது மீண்டும் நாட்டில் தலைத் தூக்கியுள்ளது. இவை குறித்து அரசாங்கம் கவனத்தில் கொள்ளாவிடின் ஆபத்து ஏற்படுவதைத் தடுக்க முடியாது.

மூன்று தசாப்தகாலமாக நாட்டில் காணப்பட்ட போரை 2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி முடிவிற்கு கொண்டு வந்தோம். பயங்கரவாதத்தை முழுமையாக அழித்த எம்மால் பிரிவினைவாதத்தை அழிக்க முடியாமல் போனது. இறுதிக்கட்ட போரில் சுமார் 5900 இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

மேலும் 29,000 பேர் காயமடைந்ததுடன் 10,000 இற்கும் மேற்பட்டோர் கை, கால்களை இழந்து அங்கவீனமானார்கள்.

உலகப்போரில் கூட இவ்வாறானதொரு இழப்பு குறுகிய காலத்திற்குள் இராணுவத்திற்கு ஏற்பட்டதில்லை. அவ்வாறு பல தியாகங்களுக்கு மத்தியில் பெற்றுக் கொள்ளப்பட்ட வெற்றி இன்று சவாலுக்கு உட்பட்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் அப்பாவி மக்களை மீண்டும் தூண்டி விட்டு அழிவுப்பாதையில் பிரிவினைவாத சக்திகள் வழிநடத்துகின்றன.

விடுதலை புலிகளின் நிழல்கள் இன்று பல்வேறு வகையில் மக்கள் மத்தியில் பிரிவினைவாதத்தை தூண்டி விட செயற்படுகின்றன. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட வடக்கில் தற்போது தீவிர போக்குடன் செயற்படும் அரசியல் சுயநலவாதிகளினால் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள ஆபத்தினை நினைக்கும் போது கவலையளிக்கின்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் போரில் உயிரிழந்த விடுதலை புலிகளின் உறுப்பினர்களை நினைவு கூரும் வகையிலேயே காணப்பட்டது. பிரிவினைவாத அரசியல் சக்திகள் அப்பாவி மக்களை தூண்டிவிடுகின்றனர்.

இதற்கு மேலும் வலுச் சேர்க்கும் வகையில் தற்போதைய அரசாங்கமும் செயற்படுகின்றது. மேற்குலகத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலேயே தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

மறுபுறம் பிரிவினைவாதக் கொள்கைளை கொண்ட புலம்பெயர் தமிழர்களின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கிலான சூழலே தற்போது நாட்டில் காணப்படுகின்றது.

எனவே இதனை சிறிய விடயமாகக் கருத முடியாது. இவை குறித்து கவனம் செலுத்தாது அரசாங்கம் புதிய அரசியலமைப்பு குறித்து பேசுகின்றது. எனவே நாட்டின் முன் தற்போதுள்ள சவால்களை கருத்தில் கொண்டு செயற்படாவிட்டால் மீண்டும் அமைதியற்ற சூழலே நாட்டில் உருவாகும்" எனத் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)

---

### இராணுவம் மீது குற்றம் சுமத்த இடமளிக்க முடியாது

## வடக்கில் மீண்டும் ஆயுத மோதலை உருவாக்க சிறு குழுவினர் முயற்சி!

### அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்

(கொழும்பு)

வடக்கில் மீண்டும் ஆயுத கலாசாரத்தை உருவாக்கி அதன் மூலமாக வடக்கு மக்களை இருட்டில் தள்ளும் முயற்சிகளையே இன்று சிலர் முன்னெடுத்து வருகின்றனர் எனவும் விடுதலைப்புலிகளுக்கு ஒப்பாக இராணுவம் மீது குற்றம்சுமத்த இடமளிக்க முடியாது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இராணுவ நிகழ்வொன்றில்கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மே 18 எம் அனைவருக்கும் முக்கியமான தினமாகும். அதேபோல கடந்த 2009 ஆம் ஆண்டு இந்தத் தினம் எம்மால் மறக்க முடியாது. யுத்த களத்தில் செயற்படாத போதிலும் மக்களுடன் இணைந்து யுத்த வெற்றிக்காக பாடுபட்ட நபர்களில் நாமும் சிலர்.

எமது நாட்டு மக்களுக்கு எந்த வித அச்சமும் இன்றி தைரியமாக நடமாடவும் வடக்கு,கிழக்கில் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் உருவானது. பல இலட்சம் தமிழ் மக்கள் சிறைபிடிக் கப்பட்டு ஆயுதமுனையில் போருக்கு அனுப்பப்பட்டு தீவிரவாதிகள் என்ற முத்திரை பொறிக்கப்பட்டது.

வலுக்கட்டாயமாக பொது மக்களை போருக்கு அனுப்பியமை சர்வதேச உடன்படிக்கைக்கு அமைய போர்க்குற்றமாகும். அவ்வாறான யுத்தக் குற்றத்தை விடுதலைப்புலிகள் முன்னெடுத்தனர். எனினும் பொதுமக்களின் ஜனநாயக உரிமைகளை எமது பாதுகாப்பு படையினர் பாதுகாத்து யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்தனர்.

இன்று தமிழ் அரசியல் கைதிகள் குறித்து பலர் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். சிறைகளில் தமிழ் அரசியல் கைதிகள் உள்ளனர் என கூறுகின்றனர். இந்த நாட்டில் ஒரு தமிழ் அரசியல் கைதியேனும் சிறைகளில் இல்லை. 56 விடுதலைப்புலிகளின் சந்தேக நபர்கள் சிறைகளில் உள்ளனர். அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. அதற்கும் அப்பால் மேலும் 9 பேர் உள்ளனர். மொத்தமாக 65 பேர் அவர்கள் குறித்து வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன.

அதேபோல் பாதுகாப்பு தரப்பிலும் பல்வேறு பேர் மீது வழக்கு தொடரப்பட்டு சிறையில் உள்ளனர். இன்று சிறையில் உள்ள விடுதலைப்புலி கைதிகளுக்கு அப்பால் பல்வேறு பயங்கரவாத குற்றச் செயல்களில் ஈடுபட்ட விடுதலைப்புலிகள் எந்தவித தடைகளும் இன்றி நாட்டில் சுதந்திரமாக செயற்பட்டு வருகின்றனர். இராணுவ கைதிகளும் சிறையில் உள்ளனர். அவர்கள் எவரோ ஒரு சிலரது கட்டளைக்கு அமைய குற்றம் செய்தவர்கள்.

மேலும் இரண்டு தரப்பிலும் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பறிபோனது. எவ்வாறு இருப்பினும் இந்த பிரச்சினையில் ஒரு பக்க நடவடிக்கைகளை எடுக்க இயலாது. நியாயம் இரண்டு பக்கமும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

வடக்கில் மீண்டும் ஆயுத மோதல் ஒன்றினை உருவாக்கி அதன் மூலம் ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் இருட்டில் தள்ள ஒரு சிறு குழுவினர் முயற்சித்து வருகின்றனர். ஆகவே இவ்வாறான நடவடிக்கைகளுக்கு இடமளிக்க முடியாது என அவர்மேலும் தெரிவித்தார். (இ)

---

## இராசி பலன்

**மீனம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், இல்லத்தில் இனிய சம் பவங்கள் நடைபெறுவதற் கான வாய்ப்புண்டு பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும்.

**மேடம்:** பெற்றோரின் ஆதரவு கூடும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்:** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், பொது வாழ்வில் கௌரவம், அந்தஸ்து உயரும், தேக நலனில் கொஞ்சம் அக்கறை தேவை.

**மிதுனம்:** குடும்பத்தில் சந்தோசம் அதிகரிக்கும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், தொழிலை விரிவுபடுத்தும் சிந்தனை மேலோங்கும், போசன சுகமுண்டு.

**கும்பம்:** உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், ஆரோக்கியமான நாள், போசன சுகமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| | புத | சூரி | சுக் |
| | இராசி பலன் | | சந். ராகு |
| செவ். கேது | கிரகநிலை<br>சந்திராஸ்டமம்<br>பூராடம் | | |
| சனி | | குரு | |

**20.05.2018**

வைகாசி 06, ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு

பஞ்சமி காலை 7.13 மணிவரை

சஷ்டி பின்னிரவு 4.47 மணிவரை

பூசம் பின்னிரவு 2.58 மணிவரை

சுபநேரம் 8.52-10.22 மணிவரை

இராகுகாலம் 4.22-5.52 மணிவரை

சஷ்டி விரதம்

வளவன்

**கடகம்:** ஆதவன் வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், கொடுத்த வாக்கை காப்பாற்ற முற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மகரம்:** நட்பு வட்டம் விரிவடையும் நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்:** உறவினர்களைக் காண பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை ஏற்படலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**தனுசு:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**விருச்சிகம்:** ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறும் வாய்ப்புண்டு, புதிய திட்டங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு. ரோக பயமுண்டு.

**துலாம்:** முத்தான வாய்ப்புகள் உங்களைத் தேடி வரலாம், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கப் பெறுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி:** செல்வநிலை உயரும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன நன்மையுண்டு.







## இந்தியன் பிறிமியர் லீக் - 2018 புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| Q1 | சன்ரைசர்ஸ் ஹைதராபாத் | 14 | 9 | 5 | 18 |
| Q2 | சென்னை சுப்பர் கிங்ஸ் | 13 | 8 | 5 | 16 |
| 3 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 14 | 8 | 6 | 16 |
| 4 | ராஜஸ்தான் றோயல்ஸ் | 14 | 7 | 7 | 14 |
| 5 | மும்பை இந்தியன்ஸ் | 13 | 6 | 7 | 12 |
| 6 | பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 14 | 6 | 8 | 12 |
| 7 | கிங்ஸ் XI பஞ்சாப் | 13 | 6 | 7 | 12 |
| 8 | டில்லி டேர்டெவில்ஸ் | 13 | 4 | 9 | 8 |

# பிளே-ஓப் சுற்றில் கொல்கத்தா



ஐ.பி.எல்., தொடரின் 'பிளே ஓப்' சுற்றுக்கு முன்னேறியது கொல்கத்தா. நேற்று நடந்த லீக் போட்டியில ஹைதராபாத்தை 5 விக்கெட்டுக்களால் வீழ்த்தியது.

இந்தியாவில் 11ஆவது சீசன் ஐ.பி.எல்., தொடர் நடக்கிறது. நேற்று நடந்த 54 ஆவது லீக் போட்டியில் 'பிளே ஆப்' சுற்றுக்கு தகுதி பெற்ற ஹைதராபாத் அணி, கொல்கத்தாவை சந்தித்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணி யின் தலைவர் வில்லியம்சன் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**தவான் நம்பிக்கை**

ஹைதராபாத் அணிக்கு ஷிகர் தவான், கோஸ்வாமி ஜோடி ஆரம்பம் வழங்கியது. ராணா வீசிய போட்டியின் முதல் பந்தில் பவுண்டரி அடித்து ஓட்டக் கணக்கைத் ஆரம்பித்த தவான், பிரசித் ஓவரில் 2 பவுண்டரி அடித்தார். ரசல் ஓவரில் கோஸ்வாமி ஒரு சிக்சர், 2 பவுண்டரி அடித்தார். இவர்களது விளாசல் தொடர 7 ஓவர்களில் 70 ஓட்டங்கள் எடுத்தது. முதல் விக்கெட்டுக்கு 79 ஓட்டங்கள் சேர்த்த போது கோஸ்வாமி (35) ஆட்டமிழந்தார்.

**விக்கெட் சரிவு**

தவானுடன் இணைந்த வில்லியம்சன், குல்தீப் பந்தை சிக்சருக்கு விரட்டினார். தொடர்ந்து சியர்லஸ் ஓவரில் 2 சிக்சர் அடித்த இவர் 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 45 ஓட்டங்களில் தப்பிய தவான் (50) அரைச்சதம் அடித்து பிரசித் 'வேகத்தில்' வீழ்ந்தார். யூசுப் பதானை (2) சுனில் நரைன் வெளியேற்றினார்.

அடுத்து வந்த பிராத்வைட் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பிரசித் பந்தில் மணிஷ் பாண்டே ஒரு சிக்சர் அடித்து மிரட்டினார். கடைசி ஓவரில் மணிஷ் பாண்டே (25), சகிப் அல் ஹசன் (10), ரஷித் (0), புவனேஷ்வர் (0) ஆட்டமிழந்தனர்.

20 ஓவர்களில் ஹைதராபாத் 9 விக்கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் கொல்கத்தா சார்பில் பிரசித் அதிகபட்சம் 4 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

**கிறிஸ் லின் அபாரம்**

கொல்கத்தா அணிக்கு சுனில் நரைன் (29), அரைச சதம் அடித்த கிறிஸ் லின் (55) ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. உத்தப்பா 45 ஓட்டங்கள் எடுத்தார். ரசல் (4), ராணா (7) ஏமாற்றிய போதும் அணித் தலைவர் தினேஷ் கார்த்திக் (26) அணியை வெற்றிப் பாதைக்கு கொண்டு சென்றார்.

கொல்கத்தா 19.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றதுடன், 16 புள்ளிகளுடன (14ல் 8 வெற்றி) 'பிளே ஓப்' சுற்றுக்கு சென்றது.

# வெளியேறியது ஹோலியின் பெங்களூர்

ஐ.பி.எல்., தொடருக்கும் ஹோலிக்கும் ராசியில்லை. இவரது தலைமையிலான பெங்களூர் அணி 'பிளே-ஓப்' வாய்ப்பை இழந்து, மீண்டும் கிண்ணம் வெல்லும் வாய்ப்பை கோட்டைவிட்டது.

இந்தியாவில் நடக்கும் 11ஆவது ஐ.பி.எல்., தொடர் இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. நேற்று, மாலை ஜெய்ப்பூரில் நடந்த 53ஆவது லீக் போட்டியில் கட்டாய வெற்றியை நோக்கி பெங்களூர் - ராஜஸ்தான் அணிகள் களமிறங்கின.

நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணியின் தலைவர் ரகானே முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**திரிபாதி அரைச்சதம்**

ராஜஸ்தான் அணிக்கு திரிபாதி, அணித் தலைவர் ரகானே அசத்தினர். திரிபாதி இந்த சீசனில்' முதல் அரைச்சதத்தை பதிவு செய்தார். உமேஷ் 14ஆவது ஓவரில் 'வேகத்தில்' வேட்டு வைத்தார். முதலிரண்டு பந்துகளில் முறையே ரகானே (33), சாம்சனை (0) ஆட்டமிழக்கச் செய்து ஆர்ப்பரித்தார். கிளாசன் (32) மூன்று பவுண்டரிகள் விளாச, அணி 150 ஓட்டங்களை எட்டியது.

சௌதியின் கடைசி ஓவரில் கௌதம் (14) அடுத்தடுத்து சிக்சர் பறக்கவிட்டார்.

20 ஓவர்கள் முடிவில், ராஜஸ்தான் அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்கள் எடுத்தது. திரிபாதி (80) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**ஹோலி ஏமாற்றம்**

எட்டிவிடும் இலக்கை துரத்திய பெங்களூர் அணிக்கு பார்த்திவ் இரண்டு சிக்சர் அடித்து நம்பிக்கை கொடுத்தார். கௌதம் பந்தில் ஹோலி (4) ஆட்டமிழந்து அதிர்ச்சி கொடுத்தார். ஸ்ரேயாஸ் கோபால் 'சுழல்'



வலையில் பார்த்திவ் (33), மொயீன் அலி (1) சரணடைந்தனர். டிவில்லியர்ஸ் (53) அரைச்சதம் அடித்து வெளியேறினார்.

இறுதியில் பெங்களூர் அணி 19.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 134 ஓட்டங்களை மட்டும் எடுத்து 30 ஓட்டங்களால் வீழ்ந்தது.

இதுவரை, 14 லீக் போட்டியில் 6ல் மட்டுமே வென்ற (12 புள்ளி) பெங்களூர் 'பிளே-ஓப்' வாய்ப்பை இழந்தது.

# அஷ்வினா? ரோகித்தா?

## தீர்க்கமான போட்டியில் எதிரெதிர் களங்களில் மோதல்

ஐ.பி.எல்., தொடரின் கடைசி லீக் போட்டியில் இன்று தோனியின் சென்னை, அஷ்வினின் பஞ்சாப்பை சந்திக்கிறது.

இந்தியாவில் 11ஆவது ஐ.பி.எல்., தொடர் நடக்கிறது. இதில் இரு ஆண்டு தடைக்குப் பின் களமிறங்கிய சென்னை அணி இது வரை பங்கேற்ற 13 போட்டிகளில் 8 வெற்றிகளுடன் 16 புள்ளிகள் பெற்று 'பிளே ஓப்' சுற்றுக்கு சென்று விட்டது.

துடுப்பாட்டத்தில் அனுபவ வோட்சன் (438 ஓட்.,), ஒரு சதம், 3 அரைச்சதம் அடித்த அம்பதி ராயுடு (585) அணிக்கு நல்ல ஆரம்பம் கொடுக்கின்றனர். அணித் தலைவர் தோனி (430) இன்று துடுப்பாட்டத்தில் கைகொடுத்தால் வெற்றி எளிதாகலாம்.

பின்வரிசையில் 'சகல துறை வீரர்' பிராவோ (134 ஓட்., 9 விக்.,), ஜடேஜாவும் (86 ஓட்., 8 விக்.,) கைகொடுகின்றனர். ரெய்னா (330) தடுமாற்றம் தொடர்வது சென்னை அணிக்கு சோகம்தான்.

**பந்துவீச்சு முன்னேற்றமா?**

பந்துவீச்சில் ஷர்துல் தாகூர் (12 விக்.,), தீபக் சகார் (8) கூட்டணியுடன் லுங்கிடி (5 விக்.,) இணைந்தது சென்னை அணிக்கு ஆறுதல் கொடுக்கிறது. சுழற்பந்து வீச்சில் ஜடேஜா (8), ஹர்பஜன் சிங் (7) அதிக விக்கெட் வீழ்த்தினால் நல்லது. டில்லி அணிக்கு எதிராக கடைசி ஓவரில் பிராவோ 26 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்தது ரசிகர்களுக்கு அதிர்ச்சி.

**பெரிய வெற்றி**

தொடரின் ஆரம்பத்தில் சிறப்பான வெற்றிகளுடன் முன்னணியில் இருந்தது பஞ்சாப். போகப் போக என்ன ஆனதோ தெரியவில்லை. தொடர்ச்சியான சொதப்பல்களால் 13ல் 6 வெற்றி மட்டும் பெற்று பட்டியலில் 7 ஆவது இடத்தில் உள்ளது.

இன்று மிகப்பெரிய வெற்றி பெற்றால் மட்டுமே அடுத்த சுற்று குறித்து யோசிக்கலாம். தொடக்க வீரர் லோகேஷ் ராகுல் (652 ஓட்.,) ஒவ்வொரு போட்டியிலும் தனி வீரராக போராடுகிறார். மற்றபடி கெய்ல் (368), கருண நாயர் (247) நிலையற்ற ஆட்டத்தை தருகின்றனர்.

பந்துவீச்சில் 24 விக்கெடடுக்கள் சாய்த்த ஆன்ட்ரூ ரை மட்டும் ஆறுதல் கொடுக்கிறார். 'வேகத்தில்' ராஜ்பூட் (9), 'சுழலல்' அஷ்வின் (8) தொடர்ந்து மோசமான செயல்பாட்டை வெளிப்படுத்துகின்றனர்.

**தேவை ஒரு வெற்றி**

இன்று மாலை நடக்கும் 56ஆவது ஐ.பி.எல்., லீக் போட்டியில் டில்லி, 'நடப்பு சம்பியன்' மும்பை களமிறங்குகின்றன.

தொடர்ச்சியான தோல்விகளால் துவண்டு கிடந்த மும்பை கடைசியாக களமிறங்கிய 5 போட்டிகளில் 4ல் வென்றது. இன்று வெற்றி பெற்றால் 3 அல்லது 4வது இடத்தை பிடித்து அடுத்த சுற்றுக்கு செல்லலாம்.

டில்லியை பொறுத்த வரை சென்னை அணியை வீழ்த்திய உற்சாகத்தில் உள்ளது. இன்று மும்பையை வீழ்த்தி ஆறுதல் வெற்றிக்கு முயற்சிக்கலாம்.

## 'ஃபிபா' கால்பந்து கவுண்ட்டவுண் 25

# மேற்கு ஜேர்மனி அபாரம்

சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (ஃபிபா) தொடங்கி 50 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு, அதன் தலைமையகமான சுவிட்ஸர்லாந்தில் ஐந்தாவது உலக கிண்ண கால்பந்து தொடர், 1954ஆம் ஆண்டு ஜூன் 16ஆம் திகதி முதல் ஜூலை 4ஆம் திகதி வரை நடந்தது.

மொத்தம் 16 அணிகள் பங்கேற்றன. ஆசிய அணிகளில் தென் கொரியாவுக்கு வாய்ப்பு கிடைத்தது.

இத்தொடரில், லீக் சுற்றுப் போட்டிகள் 'ரவுண்ட்-ரொபின்' முறையில் நடத்தப்பட்டன. காலிறுதி, அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் 'நொக்-அவுட்' முறையில் நடைபெற்றன. லீக் சுற்றில் 4 பிரிவுகளாக அணிகள் பிரிக்கப்பட்டன.

**இத்தாலி அதிர்ச்சி**

லீக் சுற்றின் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களை பெற்ற பிரேசில், யுகோஸ்லேவியா, ஹங்கேரி, மேற்கு ஜேர்மனி, உருகுவே, ஆஸ்திரியா, இங்கிலாந்து மற்றும் சுவிட்ஸர்லாந்து அணிகள் காலிறுதிக்கு தகுதி பெற்றன.

அதிகம் எதிர்பார்க்கப்பட்ட பிரான்ஸ், இத்தாலி அணிகள் லீக் சுற்றுடன் வெளியேறி பெரும் ஏமாற்றம் அளித்தன.



காலிறுதிப் போட்டிகளின் முடிவில் ஹங்கேரி, உருகுவே, மேற்கு ஜேர்மனி, ஆஸதிரியா அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின.

இதில், ஹங்கேரி (4-2) உருகுவே அணியையும், மேற்கு ஜேர்மனி (6-1) ஆஸ்திரியாவையும் வீழ்த்தி, இறுதிப் போட்டிக்கு முன்னேறின.

**பரபரப்பான மோதல்**

பரபரப்பாக நடந்த இறுதிப் போட்டியில் ஹங்கேரி, மேற்கு ஜேர்மனி அணிகள் கிண்ணம் வெல்ல போராடின.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா 2 கோல்கள் அடித்தன. பின்னர் கூடுதல் நேரத்தில் ரான், ஒரு கோல் அடிக்க, 3-2 என்ற கோல் கணக்கில் ஹங்கேரியை வீழ்த்தி முதன்முறையாக மேற்கு ஜேர்மனி அணி சம்பியன் பட்டம் வென்றது. இரண்டாவது இடத்தை ஹங்கேரி பெற்றது.

மூன்றாவது இடத்துக்கான போட்டியில், ஆஸ்திரியா (3-1) உருகுவே அணியை வீழ்த்தியது.

ஹங்கேரி அணியின் சண்டோர் காக்சிஸ் 11 கோல்கள் அடித்து 'தங்கக் காலணி' விருதை வென்றார்.

**"பிரி கிக்"**

முதல் அணி: கடந்த 1930 முதல் 2014 வரை என மொத்தம் நடந்த 20 உலகக் கிண்ண தொடர்களிலும் பங்கேற்ற ஒரே அணி பிரேசில் மட்டும்தான். இப்போது 21ஆவது முறையாக விளையாடவுள்ளது.

NLB
தேசிய லொத்தர்



## நாட்டின் வளர்ச்சியே உங்கள் கைகளை நம்பித்தான்

தினமும் கோடீஸ்வரர்கள், இலட்சாதிபதிகளுடன் இலட்சக்கணக்கான வெற்றியாளர்களைத் தோற்றுவிக்கும் தேசிய லொத்தர் சபை இந்த நாட்டின் முன்னேற்றம் மற்றும் நிலையான அபிவிருத்தியின் பின்னணியில் என்றும் இருந்தது.

பெரு நகரங்கள் மற்றும் கிராமங்களைக் கட்டியெழுப்புவதன் மூலம் நாடு முன்னேறுவது நீங்கள் வழங்கும் சிறிய ரூபா.20/- பங்களிப்பின் மூலமே.

# தேசிய லொத்தர் சபையின் இவ்வார லொத்தர் வெற்றி விபரங்கள்

### 2018.05.11

வெற்றி இலக்கங்கள்

| லொத்தர் | சீட்டிழுப்பு | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|
| මහජන සම්පත | 3655 | V 1 6 9 8 8 5 |
| සම්පත් රේඛා | 816 | J 02 28 45 68 64; 2nd சான்ஸ் 17 45 |
| ගොවි සෙත | 1756 | Y 01 18 52 58 |
| Mega Power | 225 | J; சுப்பர் இலக்கம் 7; 18 30 47 58 |

இத் தினத்தில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை: **593,528**
இத் தினத்தில் வெல்லப்பட்ட முழுப் பரிசுத் தொகை: **ரூபா.23,494,170**

### 2018.05.12

வெற்றி இலக்கங்கள்

| லொத்தர் | சீட்டிழுப்பு | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|
| ජාතික සම්පත | 838 | M 9 7 2 8 4 2 |
| සුපිරි වාසනා | 1324 | சுப்பர் இலக்கம் 18; 07 24 35 37; முதல் போனஸ் இல 30; இரண்டாவது போனஸ் இல 50 |
| ගොවි සෙත | 1757 | X 22 23 45 53 |
| සෙවණ | 082 | O 02 30 49 68 |

இத் தினத்தில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை: **454,630**
இத் தினத்தில் வெல்லப்பட்ட முழுப் பரிசுத் தொகை: **ரூபா.16,578,380**

### 2018.05.13

வெற்றி இலக்கங்கள்

| லொத்தர் | சீட்டிழுப்பு | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|
| මහජන සම්පත | 3656 | A 1 5 0 4 2 9 |
| ගොවි සෙත | 1758 | D 14 40 58 64 |
| නීරෝගා | 393 | மகரம் 04 56 60 63; போனஸ் இலக்கம் 41 |

இத் தினத்தில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை: **371,886**
இத் தினத்தில் வெல்லப்பட்ட முழுப் பரிசுத் தொகை: **ரூபா.17,068,210**

### 2018.05.14

வெற்றி இலக்கங்கள்

| லொத்தர் | சீட்டிழுப்பு | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|
| මහජන සම්පත | 3657 | A 4 0 1 5 6 4 |
| ගොවි සෙත | 1759 | Y 17 54 62 68 |
| Double Dreams | 102 | P 03 16 37 |
| Mega Power | 226 | T; சுப்பர் இலக்கம் 16; 06 15 24 30 |

இத் தினத்தில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை: **535,555**
இத் தினத்தில் வெல்லப்பட்ட முழுப் பரிசுத் தொகை: **ரூபா.23,095,640**

### 2018.05.15

வெற்றி இலக்கங்கள்

| லொத்தர் | சீட்டிழுப்பு | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|
| මහජන සම්පත | 3658 | O 2 2 1 7 7 8 |
| සෙවණ | 083 | X 35 43 54 56 |
| නීරෝගා | 394 | மிதுனம் 01 14 58 68; போனஸ் இலக்கம் 55 |
| ගොවි සෙත | 1760 | Q 35 70 75 78 |

இத் தினத்தில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை: **539,673**
இத் தினத்தில் வெல்லப்பட்ட முழுப் பரிசுத் தொகை: **ரூபா.41,546,174**

### 2018.05.16

வெற்றி இலக்கங்கள்

| லொத்தர் | சீட்டிழுப்பு | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|
| ජාතික සම්පත | 839 | N 4 1 3 5 1 5 |
| සුපිරි වාසනා | 1325 | சுப்பர் இலக்கம் 20; 11 24 31 43; முதல் போனஸ் இல 01; இரண்டாவது போனஸ் இல 19 |
| ගොවි සෙත | 1761 | P 08 13 42 65 |
| Mega Power | 227 | Q; சுப்பர் இலக்கம் 22; 44 55 77 79 |

இத் தினத்தில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை: **538,280**
இத் தினத்தில் வெல்லப்பட்ட முழுப் பரிசுத் தொகை: **ரூபா.17,528,090**

### 2018.05.17

வெற்றி இலக்கங்கள்

| லொத்தர் | சீட்டிழுப்பு | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|
| මහජන සම්පත | 3659 | K 5 6 4 6 8 6 |
| වාසනා සම්පත | 1492 | SGO 17 38 51 62; போனஸ் இலக்கம் 65 |
| ගොවි සෙත | 1762 | G 28 61 72 78 |
| නීරෝගා | 395 | மீனம் 15 26 49 56; போனஸ் இலக்கம் 64 |

இத் தினத்தில் வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை: **567,061**
இத் தினத்தில் வெல்லப்பட்ட முழுப் பரிசுத் தொகை: **ரூபா.21,033,610**



(சி-187)


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
234/2, ...

# மே 18 புனிதமான பிரதிபலிப்பு நாள்

## "மற்றவர்கள் வலியை இதயம் திறந்து உணர்வோம்"
## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலன்று சங்கா டுவிட்

(கொழும்பு)

முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தவர்களுக்கு உலகம் முழுவதும் அஞ்சலி செலுத் தப்பட்டது. இந்நிலையில் கிரிக்கெட் இலங்கை அணி யின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார டுவிட்டரில் தெரிவித்த கருத்து தமிழர் மத்தியில் பெரும் வரவே ற்பை பெற்றுள்ளது.




"மே 18 புனிதமான பிரதி பலிப்புக்கு ஒரு நாள். யுத்த த்தில் வாழ்க்கையை இழந்த இலங்கையர்களை நினை வுபடுத்தி பார்ப்பதற்கு. எங்கள் உள்ளத்தின் தீர்ப் புகளை சற்று விலக்கி வைத்து விட்டு மற்றவர்களின் வலியை இதயம் திறந்து உணர்ந்து கொள்வதற்கான நாள்.

ஒருவருக்கொருவர் திற ந்த மனப்பாங்குடன் இருக்க வேண்டும். அப்போதுதான் வரலாற்றில் இது திரும்பவும் நடக்காது" என முன்னாள் கிரிக்கெட் வீரர் குமார் சங்கக் கார டுவிட்டரில் பதிவிட்டுள் ளார்.

முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் தினம் அனுஷ்டிக் கப்பட்டு வரும் நிலையில், தென்னிலங்கையில் பல் வேறு இடங்களில் விடுத லைப் புலிகளுக்கு நினைவு தினம் நடப்பதாக எதிர்ப்புக ளும் சர்ச்சைகளும் உருவா கியிருந்தன.

இந்த நிலையில் குமார் சங்கக்காரவின் குறித்த கரு த்தானது இனவாதம் பேசும் அனைத்துத் தரப்பினருக்கும் ஒருபாடமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# வீதிப் புனரமைப்புக்கு காணி சுவீகரிப்பு

(யாழ்ப்பாணம்)

புலோலி-கொடிகாமம்-கச் சாய் வீதி புனரமைப்பு வேலை களுக்கான காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் பருத்தித் துறை, கரவெட்டி,சாவகச்சேரி பிரதேச செயலகங்களால் தற் போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வீதிப் புனரமைப்பு வேலைகளுக்காக வீதியின் இருமருங்கிலுமுள்ள காணி உரிமையாளர்கள் தமது காணியின் பகுதிகளை மன முவந்து வழங்குவதற்கு முன் வந்துள்ளனர்.

இதனால் வீதியின் இரு மருங்கிலும் புனரமைப்பு வேலைகள் காரணமாக தங்க ளது காணிகள், மதில்கள் மற்றும் வேலிகளை இழக்கும் காணி உரிமையாளர்களுக் கான நட்டஈடு வழங்கும் நட வடிக்கைகளும் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

இதன் ஓர் அங்கமாக சுவீ கரிப்பு தொடர்பான விசார ணைகள் பருத்தித்துறை பிர தேச செயலகத்தால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட 147 காணி உரிமையாளர்களிடம் இருந்து வீதி புனரமைப்பிற் காக காணியின் பகுதிகள் சுவீ கரிக்கப்பட தீர்மானிக்கப்பட் டுள்ளது. தற்போது வரை பரு த்தித்துறைபிரதேசசெயலகபகு திக்குட்பட்ட 106 காணி உரிமையாளர்கள் விசாரணை க்கு சமுகமளித்துள்ளனர்.

விசாரணைக்கு சமுகம ளித்த காணி உரிமையாளர்க ளுக்கான நட்டஈடு காசோலை கள் தற்போது கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வருகின்றன.

இதன்மூலம் காணி உரி மையாளர்கள்நன்மை அடைந் துள்ளதுடன் இப் பிரதேசத்திற் கான முக்கிய வீதி விரைவில் புனரமைப்புசெய்யப்படும்நிலை ஏற்பட்டுள்ளது என பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ)

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டி வேவில் அருள் மிகு ஸ்ரீ வீரகத்தி விக்னேஸ் வர சுவாமி தேவஸ்தான மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகும்.

25ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 6 மணிக்கு வன்னிச்சியம்மன் ஆலய த்தில் வேட்டைத்திருவிழாவும் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிறு இரவு 7 மணிக்கு சப்பறத்திருவிழாவும் மறு நாள் முற்பகல் 11 மணியள வில் தேர்த்திருவிழாவும் எதிர்வ ரும் 29 ஆம் திகதி செவ்வாய் க்கிழமை காலை 8.30 மணி க்கு வல்வை ஊறணி சமுத் திரத்தில் தீர்த்தத் திரு விழாவும் இடம்பெறும். (இ)

# திருக்குறள் தேர்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங் கம்க.பொ.த. உயர்தரத்தில்தமிழ் கற்கும்மாணவர்களுக்காக நட த்தும்திருக்குறள் தேர்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப் பாணப் பல்கலைக்கழக முகா மைத்துவ மண்டபம், வணி கத்துறை மண்டபம், இரசாய னவியல் துறை மண்டபம், மருத்துவபீடப் பரீட்சை மண் டபம் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

தேர்வில் 700 இற்கும் மேற்பட்ட உயர்தரத்தில் தமிழ் கற்கும் மாணவர்கள் தோற் றவுள்ளதாகவும் தேர்வு தொட ங்குவதற்கு அரை மணி நேர த்திற்கு முன்னரே குறித்த நிலையத்திற்குச் சமுகமளி க்குமாறும் தமிழ்ச்சங்கத்தி னர் அறிவித்துள்ளனர். (இ)

# கலாசார மத்திய நிலையம் வரணியில் இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

உயர்கல்வி மற்றும் கலா சார அலுவல்கள் அமைச்சி னால் வரணி சுட்டிபுரம் பகு தியில் நிர்மாணிக்கப்பட்ட தென்மராட்சி கலாசார மத் திய நிலையம் இன்று ஞாயி ற்றுக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு திறந்து வைக்கப் படும்.

இந்நிகழ்வில் உயர் கல்வி மற்றும் கலாசார அலு வல்கள் அமைச்சர் விஜய தாச ராஜபக்ஷ பிரதம விரு ந்தினராக கலந்துகொண்டு கலாசார மத்திய நிலை கட்டடத்தை திறந்து வைப் பார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், இராஜாங்க அமைச்சர்களான மஹிந்த லால் கிரேரு, திருமதி விஜய கலா மகேஸ்வரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் களான எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் இராமநாதன், மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர். (இ-7)

# கமக்கார அமைப்பிற்கு புதிய நிர்வாகிகள் தெரிவு

(வரணி)

தென்மராட்சி கமநல சேவை நிலையப் பிரிவுக்குட் பட்ட மாசேரி கமக்கார அமை ப்பின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் அண்மை யில் மாசேரி கிராம அபிவிரு த்திச் சங்க மண்டபத்தில் இடம் பெற்றது.

தென்மராட்சிகமநலசேவை நிலையத்தின்பெரும்பாகஉத்தி யோகத்தர் கலந்து கொண்டு புதிய நிர்வாகத் தெரிவினை மேற்கொண்டார்.

இதில்செயலாளராகசி.அரு ணாசலமும் தலைவராக சி.சுப் பிரமணியமும் பொருளாள ராக பா.புவிதாவும் உபதலை வராக வே.திருச்செல்வமும் உப செயலாளராக நா.வல்லி புரமும் நிர்வாக சபை உறுப் பினர்களாக கு.பரமேஸ்வரி யும் நீ.கணேசனும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-103)

# மஹோற்சவ பெருவிழா

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு சந்திரபுரம் ஸ்ரீ மகா முத்து மாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். எதிர்வரும் 27ஆம் திகதி சப்பறத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தேர்த்திருவிழா வும் 29 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ)

# ஈழவன் பிரபாகரன் உடல் அடக்கம்

(பேர்லின்)

ஜேர்மன் நாட்டில் கடந்த 10 ஆம் திகதி உயிரிழந்த இளம் உதைப்பந்தாட்ட வீரர் ஈழவன் பிரபாகரனின் பூத வுடலுக்கு ஆயிரக் கணக் கான மக்களின் கண்ணீரு க்கு மத்தியில் இறுதி அஞ்சலி நிகழ்வு Sudfriedhof, Marienburger, Strasse 90E, 31141 Hildersheim என் னும் இடத்தில் நடைபெற்று ள்ளது.



புலம்பெயர் தமிழரான ஈழ வனின் பூத உடலுக்கு ஜேர்ம னிய மக்கள் கண்ணீருடன் இறுதி அஞ்சலி செலுத்தியுள் ளனர்.

இந்த இறுதி அஞ்சலி நிகழ்வில் வெள்ளை இனத்த வர்கள் அனைவரும் கண்ணீர் விட்டு அழுத காட்சி அனைவ ரையும் நெகிழ வைத்துள் ளது.

அத்துடன், ஈழவன் விளை யாடிக் கொண்டிருந்த Braunschweig கழகம், இறுதிச் சடங்குக்கான அனைத்து செல வுகளையும் ஏற்றுக்கொண் டுள்ளது.

பிரசித்தி பெற்ற தேசிய கால்பந்தாட்ட வீரர்கள் பலர் தங்களது இரங்கல் செய்தியை வழங்கியிருந்தனர். (இ)



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப் பட்ட கலாசார போட்டியில் சுழிபுரம் மத்தி இளைஞர் கழகம் சார்பாக பங்குபற்றிய அணியினர் புத்தாக்க நடனத்தில் முதலாம் இடத்தினை பெற்று ள்ளனர். இவர்களை ஆசிரியர் திருமதி கண்ண தாசன் ஸ்ரீதேவி நெறிப்படுத்தினார்.

# பொதுக்கூட்டம்


(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத் தின் விசேட பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற் பகல் 3.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நிலையத் தலை வர் கு.ஜனார்த்தனன் தலை மையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் சனசமூக நிலையக் கொடி, நிலையத்துக் கான கீதம் என்பன தயாரிக்க அங்கத்தவர்களின் ஆலோச னையைப் பெற நிர்வாகத் தினர் எதிர்பார்த்துள்ளனர்.(இ)

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளில்

# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக பிரான்சில் இணையத்தளம் அறிமுகம்




(பாரிஸ்)

முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையின்9 ஆம்ஆண்டு நினைவேந்தல்நாளில்காணா மலாக்கப்பட்டோர் பற்றிய தகவல்கள் திரட்டும் வகை யில் இணையத்தளம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழர் தேசத்தின் மீதான இலங்கைப் படைகளின் ஆக் கிரமிப்பு தமிழின அழிப்பின் போது 146, 679 பேர் காணா மலாக்கப்பட்டதாக கூறப்படு கின்றது.

இந்த நிலையில், தமிழர் தாயகத்தில் காணாமலாக் கப்பட்டவர்களது உறவினர் கள் 450 ஆவது நாட்களைக் கடந்து அறவழியில் தமது போராட்டத்தை முன்னெடு த்து வரும் நிலையில், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தி னால் http://youarenotforgotten.org/ என்ற இந்த இணையத்தளம் அறிமுகப்ப டுத்தப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையினை நினை வேந்தி நேற்று முன்தினம் பிரான்சின் ஆர்ஜென்தெய் பகுதியில் நடப்பட்டுள்ள நினை வேந்தல் மரத்தின் வணக்க நிகழ்வில் மக்கள் முன்னி லையில் இந்த இணையத் தளம் அறிமுகம் செய்யப்பட்டு ள்ளது. (இ)

# யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர்

## உயர்திரு. நவரத்தினம் ஜெயகுமாரன் அவர்களின்

## மணிவிழாச் சிறப்பு மலர்-20.05.2018



### "ஆச்சர்ய தேவா பவ" (தைத்ரிய உப நிஷதி) "தய்வமாகப் போற்றுக" ஆசிச்செய்தி

இத்தகைய தெய்வீகமான புனிதப் பணியில் இணைந்து பணியாற்றிய அதிபர் திருநவரத்தினம் ஜெயகுமாரன் ஐயா அவர்கள் 16.05.2018 இல் தனது 29 வருட ஆசிரிய சேவை பூர்த்தியில் ஓய்வுபெறவுள்ளார். தனது ஆசி ரிய சேவையில் பல்லாயிரக்கணக்கான மாணவச் செல்வங்களுக்குக் கல்விச் செல்வத்தை வழங்கி வழிகாட்டியுள்ளார். தற்பொழுது டிறிபேக் கல்லூரியின் அதிபராகக் கடமை புரியும் ஐயா அவர்கள் கல்லூரியின் முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டு அதனை முன் னேற்றியுள்ளார். அத்துடன் ஆலயத் தொண்டுகளில் ஈடுபட்டு வந் தமை பாராட்டுக்குரியதாகும். ஓய்வுக்காலத்திலும் தொடர்ந்து ஆன்மீகப் பணிகளில் ஈடுபட்டு அமைதியைப்பெற இறைவன் அருள்புரிவாராக. ஐயா அவர்களின் மணிவிழாவை முன்னிட்டு வெளிவரவுள்ள மலர் சிறப்பாக வெளிவரவும் விழா சிறப்பாக நடைபெறவும் ஆசி வேண்டி எல்லாம் வல்ல பரம்பொருளையும் பூஜ்ய குருதேவரையும் பிரார்த் திக்கின்றோம்.

**ஸ்வாமி சிதாகாசானந்தா, சின்மயா மிஷன்,**
**இல. 9, செட்டித்தெரு , யாழ்ப்பாணம்.**



### செயல் வீரர்

இன்றைய யதார்த்த சூழலில் அதிபர் பதவி வகிப்பது என்பது மிகவும் கடினமான பணியாக கருதப்படுகின்றது. எத்தனையோ சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலையில் தன் ஆளுமை யாலும் தற்துணிவினாலும் அவற்றை சாதித்து வெற்றி கண்டவர். யா/மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்தில் அதிபராக இருந்த வேளை ஒவ்வொரு வருடமும் தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் சமூகவியல் போட்டியில் அப்பாடசாலை மாணவர்கள் தேசிய மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்று எமது வலயத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

எளிமையானதோற்றம், இனிமையானபேச்சு, எடுத்தசெயலைசெவ்வனே ஆற்றும் செயற்றிறன், எல்லோரையும் மகிழ்விக்கின்ற மனப் பாங்கு அனைத்தையும் தன்வசப்படுத்திய பெருமை இவரைச் சாரும். இவரது ஓய்வுக்காலம் சிறக்க நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இந்த அவனியில் வாழ்ந்து எமது சமூகத்திற்கு சேவையாற்ற வேண்டும் என்று எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வாழ்த்தி அமை கின்றேன்.

**அதிபர் ந.சர்வேஸ்வரன் யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி**
**அதிபர்கள் சங்கத் தலைவர்.**



### வாழ்த்துச் செய்தி

யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் நவரத்தினம் ஜெயகுமாரன் அவர்களது மணிவிழாவையொட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். சாவகச்சேரி கல்விப் பாரம்பரியம் டிறிபேக் கல்லூரியில் இருந்தே முகிழ்ந்தது என்றால் அதற்கு வரலாறு சான்று பகரும். அதிலும் குறிப்பாக கடந்த காலங்களில் சாவகச்சேரிக்கென்று தனியான தொரு ஆங்கிலப் பாரம்பரியம் இருந்தது. ஒரு காலத்தில் சாவகச்சேரி டிறி பேக கல்லூரியின் சுற்று வட்டாரத்தை கொழும்பு கறுவாக்காட்டுடன் ஒப்பிட்டுப் பேசப்பட்டதையும் நான் அறிந்திருந்தேன். அமெரிக்க மிசனறியினரின் கொடையாக எமது தென்மராட்சி மண்ணுக்கு கிடைத்த இந்தப் பாடசாலையின் புகழ்பூத்த அதிபர்களாகப் பலர் இருந்திருக்கின்றனர். அத்தகைய அதிபர்கள் வரிசையில் திரு.நவரத்தினம் ஜெயகுமாரன் அவர்கள் தனித்துவமான தொரு இடத்தை பிடித்துக் கொண்டுள்ளார் என்றால் மிகையாகாது.

இது தவிரவும் பழைய மாணவர்களை ஒன்றிணைத்தல் பாடசாலை நிர்வாகத்திலும் நிதி விடயங்களிலும் வெளிப்படைத் தன்மை என்பன அவரை ஒரு தனித்துவமான முகாமைத்துவ ஆற்றல் உள்ளவராகக் வெளிக்காட்டியிருந்தது. இத்தகைய பண்புகள் நிறை ந்த அதிபர் வெகு காலத்திற்கு முன்னரே இந்தப் பாடசாலைக்கு அதிபராகக் கிடைத்திருக்க வேண்டியவர் ஆயினும் மூன்று வருடங்கள் மாத்திரமே அவர் இந்தக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றக் கிடைத்தது அவரது ஆளுமையின் முழுப் பரிணாமத்தையும் கல்லூரிச் சமூகம் கண்டு கொள்ள முடியாது போனமை துரதிர்ஷ்டவசமானது. அதிபர் திரு.நவரத்தினம் ஜெயகுமாரன் அவர்களது ஓய்வுக்காலம் சிறக்கவும் சமூகப் பணியில் அவர் மிளிரவும் வாழ்த்தி அமைகின்றேன்.

**கேசவன் சயந்தன் சட்டத்தரணி,**
**வடக்கு மாகாண சபை உறுப்பினர்.**



### புன்னாலைக்கட்டுவன் மைந்தனை மனமகிழ்ந்து வாழ்த்துவோம்

புன்னகை குறையாத முகம், மகிழ்ச்சி நிறைந்த மனம், புன்னாலைக்கட்டுவன் புகழ் பரப்பிடும் மண்ணரின் மைந்தன் திருவாளர் ந.ஜெயகுமாரன் அவர்களை மணிவிழா கொண்டாடும் நாளில் மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றது யா/டிறிபேக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கமும் பாடசாலை சமூகத்தினரும். எமது பாடசாலையின் பெற்றோரிடமும் மாணவர்களிடமும் சிநேகபூர்வமான உறவால் உள்ளத்தை தொட்டவர்.

இவருடைய காலப்பகுதியில் எமது பாடசாலை பல வளர்ச்சிகளை மேலும் கண்டது. கல்வித்தரத்தில் வளர்ச்சி, மாணவர்கள் எண்ணிக்கை உயர்ச்சி, ஆசிரியர்கள், மாணவர்கள், மனமகிழ்ச்சி, பழைய மாணவர்கள் நெகிழ்ச்சி அனைவருக்கும் இது பெரும் மகிழ்ச்சி.

எமது பாடசாலை வளர்ந்து வரும் வேளையில் பல சவால்களை நேர்கொண்டது. அதிபர் திருவாளர் ந.ஜெயகுமாரன் அவர்களுடைய சேவை மேலும் சிறக்க அவருடைய குடும்பத்தினருடன் சீரும் சிறப்புமாக வாழ இறையாசி வேண்டி மணிவிழா நாயகன் பணி போற்றி யா/டிறி பேக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க சார்பில் மனமார்ந்து வாழ்த்துகின்றேன்.

**திரு.சண்முகநாதன் மனோகரன் செயலாளர்**
**பழைய மாணவர் சங்கம்**
**யா/டிறிபேக்கல்லூரி சாவகச்சேரி.**



ஆசிரியர் -யா/ஈவினை அ.த.கபாடசாலை
15.12.1989-01.02.1993
கோப்பாய் ஆசிரிய கலாசாலை
02.02.1993-31.12.1994
ஆசிரியர் யா/ஈவினை அ.த.கபாடசாலை
01.01.1995-02.04.2000
அதிபர் யா/ஈவினை அ.த.கபாடசாலை
03.04.2000-31.12.2002
அதிபர் யா/மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம்
01.01.2003-24.10.2004
அதிபர் யா/சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலை
25.10.2004-22.09.2009
அதிபர் யா/மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம்
23.09.2009-01.07.2015
அதிபர் யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
02.07.2015- 16.05.2018



### மாண்புடனே வாழியவே!

கல்விக்கோர் கலங்கரையே! கலைமகளின் திருமகனே!
காலத்தின் ஒளிவிளக்கே கண்ணியத்தின் தலைமகனே!
நல்கிய சேவையெலாம் நானிலத்தோர் அறி வரன்றோ!
அள்ளியுன் புகழ் சொரிய அன்புடையீர் வாழியவே!

பட்டங்கள் பல பெற்றீர் பாரினிலே! புகழ்பூத்தீர்!
சட்டம்பி வேலைதனைச் சாதனையாய் நிகழ்த்தி நின்றீர்!
திட்டங்கள் பல தீட்டித் திறம்படவே! சேவை செய்தீர்!
கட்டுடல் கலையாத கர்மவீரரே! வாழியவே!

கல்லூரி அதிபராகி சுச்சிதமாய்ப் பணி செய்தீர்!
எல்லோரின் இதயமெங்கும் இடம்பிடித்து வாழ்ந்து வந்தீர்!
நல்லோர்கள் ஆசியினால் நலமுடனே! சேவை செய்தீர்!
எல்லோரும் வாழ்த்துகின்றோம் என்றென்றும் வாழியவே!

அகவை அறுபதிலே அகம் மகிழ ஓய்வு பெற்றீர்
உவகை மிகக்கொண்டோம் உம்முடைய சேவையினால்
இகபர சௌபாக்கியம் என்றென்றும் நீர் பெற்றே!
மகராசன் போலவே! மாண்புடனே! வாழியவே!

**வாழ்த்துபவர்:**
**N.P.ஸ்ரீந்திரன்**
**ஆசிரிய ஆலோசகர்,**
**பழைய மாணவன்.**

### வாழ்த்துச் செய்தி



பெருமதிப்பிற்குரிய எமது கல்லூரி அதிபர் திரு. ந. ஜெயகுமாரன் பற்றி வாழ்த்துவது என்றால் வாழ்த்திக் கொண்டே போகலாம். அவ்வாறான ஒரு பெருந்தகையாளன். அன்பின் உறைவிடம். பண்பின் சிகரம். பொறுமையின் பொக்கிஷம். பாடசாலைப் பணியை திறம்படச் செய்த பெரியவர். பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் என்ற வகையில் எத்தேவையென்றாலும் அபிவிருத்திச் சங்கத்திற்கு தெரியாமல் எதுவும் செய்ய முன்வரமாட்டார். சகட்டம்கூடி கலந்துரையாடி தமது பணியை முன்னெடுப்பார். உடனுக்குடன் பாடசாலையின் தேவையை நிறைவு செய்தவர். இவர் இப்பாடசாலைக்கு வந்து குறுகிய காலங்களானாலும் நிறைவான பணியைச் செய்து பாடசாலையை மேம்பாடு அடையச் செய்தவர். இவற்றுக்கு காரணமாய் இருப்பது இவரின் தற்துணிவாகும். எல்லோருடன் பழகும் சுபாவம் உடையவர். தற்பெருமை இல்லாதவர். எளிமையானவர் மாணவர்களுடன் அன்பாகப்பழகும் சுபாவம் உடையவர். மென்மையான உள்ளம் கொண்டவர் எல்லோருடைய உள்ளங்களிலும் இடம்பிடித்த மகான். அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து தமது பணிகளை முன்னெடுத்துக் கொண்டு தமது காரியங்களைச் செய்வார்.

மாணவர்களுடைய ஒழுக்கத்தில் அதிக அக்கறை உடையவர். செயற்றிறன் உடைய அதிபர். ஓய்வு பெற வேண்டிய நிர்ப்பந்தம் கவலைக்குரிய விடயமாகும். இன்னும் எமது பாடசாலைக்கு ஒத்துழைப்பு வழங்குவார். வழங்க வேண்டுமெனவும் ஓய்வுக் காலத்தில் நோய்களின்றி நீண்டகாலம் குடும்பத்தோடு சிறப்பாக வாழ வேண்டும் என வாழ்த்தி நிற்கின்றோம்.

**திருமதி ராதிகா சுதாகரன்**
**செயலாளர், பாடசாலை அபிவிருத்திக்குழு**
**யா/டிறிபேக்கல்லூரி சாவகச்சேரி.**

### வாழ்த்துச்செய்தி



கல்விப் பணியுடன், சமய, சமூகப் பணிகளுக்கு உழைக்க வாழ்த்துக்கள்...!

யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி அகவை 60 இல் தனது கல்விச் சேவையை நிறைவு செய்யும் திரு.நவரத்தினம் ஜெயகுமாரன் அவர்களின் மணிவிழா சிறப்புற வாழ்த்துகின்றேன். கடந்த 29 வருடங்களாகக் கல்விச் சேவையில் ஆசிரியராக, அதிபராகத் தன்னை அர்ப்பணித்து பாடசாலையின் ஆசிரியர்களையும், மாணவர்களையும் சிறந்த முறையில் வழிநடத்தி உரிய ஆலோசனைகளை வழங்கி, மாணவர் களின் கல்வி வளர்ச்சி மேலோங்க உழைத்தவர். 2016,2017 ஆம் ஆண் டுகளில் க.பொ.த. சாதாரணதரம், உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் டிறிபேக் கல்லூரி மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கான பல்வேறு வழிகாட்டல்களை மேற்கொண்டதுடன், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்கள் சாதனை படைக்க உழைத்தவர்.

திரு.நவரத்தினம் ஜெயகுமாரன் அவர்கள் அகவை 60 இல் அதிபர் பதவியில் இருந்து ஓய்வுபெற்றாலும் அவரால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமூக, சமய பணிகள் மேலும் தொடர வேண்டும் என வாழ்த்துகின்றேன். மேலும் அவர் தனது ஓய்வுக்காலத்தில் எல்லா நலன்களும் சீரும் பெற்று குடும்பத்தாருடன் பல ஆண்டுகள் நலமே வாழ வாழ்த்துக்கின்றேன்.

**கலாநிதி. கந்தையா சர்வேஸ்வரன்**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர், வடமாகாணம்.**

### வாழ்த்துச் செய்தி



ஆசிரியராய், அதிபராய் 29 வருடங்கள் கல்விச் சேவை செய்த திரு.ந.ஜெயகுமாரன் அவர்கள் டிறிபேக் கல்லூரியினது வளர்ச்சியில் அயராது அர்ப்பணிப்புடன் பணியாற்றியவராவார். இப்பாடசாலை மாணவர்கள் கல்வியிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் பல சாதனைகளைப் படைத்து வருகின்றனர்.

கல்வித் துறைக்குப் பெரும் பணியாற்றி ஓய்வுபெறும் திரு.ந.ஜெயகுமாரன் அவர்களது ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துவதுடன் அவர் தனது சேவைக்காலத்தில் ஆற்றிய பணிகளுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செ.உதயகுமார்**
**மாகாணக்கல்விப்பணிப்பாளர்,**
**வடக்கு மாகாணம்.**

### உதவிக்கரம் நீட்டும் உத்தமர்



கல்விப்புலத்திலே நீண்டகாலம் ஆசிரியராக, அதிபராக கல்விப்பணியாற்றி மனநிறைவோடு ஓய்வு பெறும் திரு.ந.ஜெயகுமாரன் அவர்கள் டிறிபேக் கல்லூரியில் தனக்கென ஒரு முத்திரையை பதித்தவர். ஒரு தனித்துவமான இயல்புக்குரியவர் என்றால் அது மிகையல்ல. வலயக் கல்வி அலுவலகமோ அல்லது கோட்டக்கல்வி அலுவலகமோ முன்னெடுக்கும் எந்தச் செயற்பாடுகளுக்கும் தனது பாடசாலை வளங்களையும் சரி தனிப் பட்ட உடைமைகளையும் சரி தாராள மனதோடு வழங்கி வரும் பெருமகன்.

அதேபோல தனிப்பட்ட ரீதியிலும் தன்னுடன் நெருக்கமானவர்களின் நிகழ்வுகளில் பல்வேறு பங்களிப்புக்களை வழங்கி வரும் பண்பு அவருக்கே தனித்துவமானது.

தான் சரியென நினைப்பதை நிறைவேற்றக்கூடிய ஆற்றலும் துணிவும் திரு.ந.ஜெயகுமாரன் அவர்களுக்கு உண்டு. எல்லோருடனும் நண்பனாக பழகக்கூடிய எளிமை உள்ளம் கொண்டவர். காலத்தின் கட்டளையின்பேரில் ஓய்வுபெற வேண்டி ஏற்பட்டாலும் அவருடைய உற்ற நேரத்தில் உதவும் பண்புகள் தொடரவும் அவரது ஓய்வுக்காலம் சிறக்கவும் இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**திரு.வ.நடராசா, கோட்டக்கல் அலுவலர்,**
**கோட்டக்கல்வி அலுவலகம், சாவகச்சேரி.**

### மணிவிழா நாயகனை வாழ்த்துகிறேன்



உயர்திரு. ஜெயகுமாரன் அவர்கள் தென்மராட்சியில் மீசாலை விக்கினேஸ்வரா ம.வி., சாவகச்சேரி றோ.க.த.பாடசாலை, மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம், சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி ஆகிய பாடசாலைகளில் அதிபராகக் கடமையாற்றிய காலங்களில் நான் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியிலும் கோட்டக்கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றியமையால் அவரது செயற்பாடுகளை நன்கு அறிவேன். தான் அதிபராக கடமையாற்றிய எல்லாப் பாடசாலைகளையும் முன்னேற்றுவதற்காக அரும்பாடுபட்டதுடன் அப்பாடசாலை சமூகத் தினருடன் மிகவும் இறுக்கமான உறவைப் பேணி பாடசாலைகளை பௌதீக வளரீதியாக முன்னேற்றியுள்ளார். அதேவேளை திணைக் கள அதிகாரிகளுடனும் நல்லுறவைப் பேணி பாடசாலைத் தேவை களை நிறைவேற்றுவதற்கும் பின்நிற்கவில்லை.

ஆசிரியராக ஆரம்பித்த கல்விப் பணி இவரது முயற்சியாலும் கடுமையான உழைப்பாலும் அதிபர் தரம் 1 வரை படிப்படியாக உயர்வடைந்து டிறிபேக் கல்லூரியின் முதல்வராக பதவி வகித்துள்ளார். கல்விப்பணியுடன் சமயப்பணிகளும் சமூகப்பணிகளும் ஆற்றிவரும் இவர் நண்பர்களது, உறவினர்களது எல்லா நிகழ்வுகளிலும் முன்னின்று உதவிடும் நற்பண்பை யாராலும் மறந்துவிடமுடியாது. எதிர்காலத்திலும் இவரது நற்பணி தொடர இறைவனை பிரார்த்திப்பதுடன் மனம் நிறைந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கு.சிவானந்தம்**
**ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர்,**
**தென்மராட்சி.**

மலர் அமைப்பு:- மணிவிழாக்குழு


(4-2652)

# 'தமிழீழம் மலர வேண்டும்'

# இராமேஸ்வரத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

## பாலச்சந்திரனின் படம் படகில் படுகொலை பூமிக்கு அனுப்பப்பட்டது







(இராமேஸ்வரம்)

இலங்கை இறுதிக்கட்ட யுத்தத்தில் உயிரிழந்த மக்களுக்காக தமிழர் நலம் பேரியக்கம் சார்பில் நேற்று முன்தினம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை முன்னிட்டு மே 18 ஆம் திகதியான நேற்று முன்தினம் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள தமிழ் அமைப்புக்கள் மற்றும் பொது மக்கள் ஒன்றிணைந்து அஞ்சலி செலுத்தினர்.

அந்த வகையில் தமிழர் நலம் பேரியக்கம் மற்றும் தமிழர் ஒன்று கூடல் நினைவேந்தல் நிகழ்வில் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனின் புகைப்படத்தை படகு வடிவில் அமைத்து அதனை இராமேஸ்வரம் அக்னி தீர்த்தக் கடலில் சுடரேற்றி முள்ளிவாய்க்கால் நோக்கி மிதக்க விட்டுள்ளனர்.

அச் சந்தர்ப்பத்தில் அங்கு கூடியிருந்த இளைஞர்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் அனைவரும் தங்களது கைத்தொலைப்பேசிகளிலுள்ள விளக்குகளை வானத்தை நோக்கி அசைத்து இறுதிக் கட்டப் போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து மெழுகுவர்த்தி ஏற்றியும் கடலில் பூக்களை தூவியும் அஞ்சலி செலுத்தினர்.

இந் நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் "ஈழத்தில் உயிர் நீத்த அப்பாவி தமிழ் மக்களுக்கு உரிய நீதி வேண்டும்" "மீண்டும் தமிழ் ஈழம் மலர வேண்டும்" என கோஷங்களை எழுப்பினர். (இ)

## எண்பது அடி பள்ளத்தில் வான் வீழ்ந்து விபத்து

### 3 பேர் காயம்



(பதுளை)

பதுளை-ஹாலிஎல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலிமடை - பதுளை பிரதான வீதியில் வான் ஒன்று 80 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் மூவர் காயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்த மூவரும் பதுளை மாவட்ட வைத்தியசாலையில் கிசிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து மரணச் சடங்கு வீடு ஒன்றுக்கு சென்று கொண்டிருந்த வான் நுவரெலியா - வெலிமடை வழியாக சென்று கொண்டிருக்கும் போதே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் பதுளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## வலி. வடக்கு குரும்பசிட்டியிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

(கிளிநொச்சி)

தமிழர் சம உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் வலிகாமம் வடக்கிலுள்ள அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடம் பெற்றது. வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் அ.சுந்தரேசன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பிரதான நிகழ்வுகள் நேற்று முன்தினம் காலை முள்ளிவாய்க்காலில் இடம் பெற்றன. இதனைத் தொடர்ந்து ஏனைய இடங்களில் பிற்பகல் வேளைகளில் நினைவேந்தல் இடம்பெற்றது.

குரும்பசிட்டியில் நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் நினைவேந்தல் இடம்பெற்றது. இதில் வன்னி யுத்தத்தில் தனது குடும்ப உறுப்பினர்களில் இருவரை இழந்த எஸ்.நடராசா பிரதான சுடரை ஏற்றினார். தொடர்ந்து ஏனையோர் கைகளில் மெழுகுவர்த்தி தீபம் ஏற்றி அக வணக்கம் செலுத்தினர்.

இந் நிகழ்வில் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் தா.நிகேதன், வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ந.பொன்ராசா ஆகியோரும் பிரதேச மக்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை முன்னிட்டு தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு எதிர்வரும்வியாழக்கிழமை உலருணவுப் பொருட்கள்



வழங்கப்படவுள்ளன என பிரதேச சபை உறுப்பினர் சுந்தரேசன் தெரிவித்தார். (இ-9)


### யாழ். வணிகர் கழகம்

### வருடாந்த பொதுக் கூட்டம்

2018ஆம் வருடத்திற்கான வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நடைபெறவுள்ளது.பிரேரணைகள் 31.05.2018ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

திகதி : 09.06.2018 சனிக்கிழமை

நேரம் : காலை 9.30 மணி

இடம் : யாழ்.வணிகர் கழகப் பணிமனை, 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ். வணிகர் கழகம். செயலாளர்


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 70 | 60 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 110 | 95 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 70 | 60 | 120 | 70 |
| தக்காளி | 180 | 160 | 140 | 120 | 240 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 50 | 30 | 40 | 35 |
| கோவா | 100 | 100 | 80 | 50 | 100 | 80 |
| கரட் | 150 | 160 | 140 | 80 | 240 | 250 |
| பூசணி | 40 | 30 | 20 | 20 | 40 | 30 |
| புடோல் | 100 | 60 | 60 | 50 | 120 | 80 |
| வாழைக்காய் | 50 | 30 | 40 | 35 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 150 | 200 | 180 | 140 | 160 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 80 | 100 | 100 |
| பாகற்காய் | 160 | 120 | 100 | 100 | 140 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 80 | 70 | 120 | 70 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 60 | — | 80 | 70 |
| பயற்றங்காய் | 120 | 120 | 80 | 70 | 120 | 120 |
| லீக்ஸ் | 200 | 250 | 220 | 180 | 240 | 200 |
| பீற்றூட் | 60 | 60 | 60 | 30 | 80 | 60 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 | 50 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 220 | 160 | 140 | 130 | 240 | 220 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 50 | 240 | 200 |
| கத்தரிதம்புள்ள | 70 | — | 60 | 50 | 80 | 50 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 30 | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 120 | 200 | 220 | 200 | 300 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-70 | 60-70 | 25-70 | 50-75 | 80 |
| இராசவள்ளி | 200 | — | 170 | — | 80 | 180 |
| வெங்காயப்பூ | 300 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | — | 120 | 30 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 50 | — | 50 | 10 | 30 | 35 |
| வல்லாரை | 15 | — | 20 | 10 | 20 | 35 |
| ஈரப்பலா | 80 | — | 80 | — | — | 200 |


## விழிநீர் சொரிகின்றோம்

சியாமளா ஜெனார்த்தனின் அன்புச் சகோதரன்

அமரர்.

### கோபாலபிள்ளை குகன்

தாய் மடியில்: 1985.10.30

காலன் பிடியில்: 2018.05.18



அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!!!

பிரிவால் துயருறும்,
விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள்
கல்விமாணிப் பட்டக்கற்கை நெறி(2017-2020)
கோப்பாய் ஆசிரிய கலாசாலை நிலையம்.

(4132)

# Recharge TRAVELS

*"The best way to see Sri Lanka!"*

## உங்களை நாடி வரும் உறவுகளின் பாதுகாப்பான, சொகுசான பயணத்திற்கு நீங்கள் நாடவேண்டிய நிறுவனம்!

## றீசார்ச் ட்ரவல்ஸ் மட்டுமே

# 07777 21 999

## யாழிலிருந்து கொழும்பிற்கு ஒருவழிக் கட்டணம்

CAR 15,000/=

KDH VAN 20,000/=

HIGH ROOF 25,000/=

MINI BUS 30,000/=



## பாதுகாப்பான சொகுசான பயணத்திற்கு நாடுங்கள்

SRI LANKA TOURISM APPROVED

2017 CERTIFICATE of EXCELLENCE tripadvisor

இலங்கை அரசாங்கத்தால் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

24x7 Customer Support Hours

*Budget Taxi *City Transfer *Airport Transfer
*Wedding Car *Jaffna Day Tour

# 21 437 9999

| HEAD OFFICE | 24 HRS BOOKING | OPERATION | BRANCH |
|---|---|---|---|
| 68, Lorenz Road, Bambalapitiya Colombo-04. | 103, W.A. Silva Mawatha, Wellawatte Colombo-06. | 825/1, Munidasa Kumaratunga Mw, Katunayake. | 1st floor, Cargills square Jaffna |

Piccaso

(சி-186)

# புலிகள் நினைவுகூரப்படுவதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை

## அமைச்சர் மனோ கூறியதாக சிங்கள ஊடகம் செய்தி



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் நினைவுகூரப்படுவதனை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என தேசிய ஒருமைப்பாடு, சகவாழ்வு மற்றும் அரசகரும மொழி அமைச்சர் மனோ கணேசன் சிங்கள பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகையொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

போரில் உயிர் நீத்த பொது மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதாகக் கூறிக் கொண்டு பயங்கரவாதிகளை நினைவு கூர்வதற்கும் மாவீரர் நிகழ்வுகளை நடத்துவதற்கும் எவரேனும்செயற்பட்டால் அதனை நான் எதிர்க்கின்றேன்.

அதேவேளை, கடந்த 30 ஆண்டு காலப் போரின் போது வடக்கிலும் தெற்கிலும் உயிரிழந்த சாதாரண பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு எவரும் சவால் விடுக்க முடியாது.

போரில் உயிர் நீத்தவர்களை நினைவுகூர்ந்து நிகழ்வுகளை செய்வோர் அவர்களின் உறவினர்கள் என்ற காரணத்தினால் அவர்களுக்கு இடையூறு ஏற்படுத்துவது ஏற்புடையதல்ல.

போரில் உயிர் நீத்தவர்களை நினைவுகூர்வதாகக் கூறிக் கொண்டு சில இடங்களில் புலிகளுக்கு நினைவஞ்சலி நிகழ்வுகளை நடத்த சிலர் முயற்சிப்பதாக எனக்குத் தகவல் கிடைத்துள்ளது.

நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டதில்லை என மனோ கணேசன் கூறியதாக சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, அமைச்சர் மனோகணேசன் தனது முகப்புத்தகத்தளத்தில் மரணித்தோர் நினைவும் எதிர்காலமும் இந்த நொடியில் என் மனதில் என்ற பதிவொன்றை நேற்று முன்தினம் இட்டுள்ளார்.

அந்தப் பதிவில், கொடிய போரில் மரணித்த என் தாய் நாட்டு உறவுகளுக்கு என் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறந்தோரில் கணிசமானோர் தமிழ் புலிகள் என சிங்களம் சொல்வதை ஒரு வாதத்திற்கு உண்மை என்று சொன்னாலும் கூட, அவர்கள் முதலில் இலங்கையர்கள்.

அவர்களது, அன்னையர், தந்தையர், மனைவியர், உறவினர்களுக்கு தம் இறந்த உறவுகளை நினைவு கூர (மனித) உரிமை உண்டு.

இலங்கையில் போர் இரு நாடுகளுக்கு இடையில் நடந்த போர் அல்ல.

அடுத்தது, புலிகள் ஆயுதம் தூக்க ஆரம்பித்தது அரசியல் நோக்கங்களுக்காக என்பதும் அதே மாதிரியான அரசியல் காரணங்களாலேயே தெற்கில் ஜே.வி.பியும் ஆயுதம் தூக்கியது என்பதும் அடிப்படை உண்மைகள்.

இரண்டு இயக்கங்களும் சட்டப்படி தெரிவு செய்யப்பட்ட இலங்கை அரசுக்கு எதிராகவே ஆயுதம் தூக்கின.

தெற்கில் அது "கிளர்ச்சி" என்றும் வடக்கில் அது "பயங்கரவாதம்" என்றும் சொல்லப்பட்டது. இதன்மூலம் அப்போதே இந்த இரட்டை அளவுக்கோல் பாரபட்சம் ஆரம்பமாகியது.

இரண்டு இயக்கங்களின் போராட்டங்களுக்கு எதிராகவும் தெற்கிலும் வடக்கிலும் அரசபயங்கரவாதம்நாடு முழுக்க யுத்த களத்துக்கு வெளியேயும் தலை தூக்கி ஆடியது. (அந்த அரச பயங்கரவாதத்தை எதிர்கொண்டவன் என்ற முறையில் அது எனக்கு நன்கு தெரியும்)

ஜே.வி.பி. தடை செய்யப்பட்டு, இன்று தடை நீக்கப்பட்ட ஒரு இயக்கம்.

புலிகள் மீதான தடை இன்னமும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நீக்கப்படவில்லை. இதன் அடிப்படையில், ஜே.வி.பி. தன் இறந்த தோழர்களை முன்னிறுத்தி, கார்த்திகை வீரர்கள் தினங்களை வருடத்துக்கு இரண்டு முறை கொண்டாடுகிறது.

இதே உரிமைகளை தமிழரும் புலிகள் இயக்கமும் பெற வேண்டும். இதற்காக தமிழ் சமூகமும் புலிகள் இயக்கமும் என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி அரசியல் ரீதியாக யோசிக்க வேண்டும்.

வருடாவருடம் யுத்தம் நிறைவுக்கு வந்த இந்த மே மாதத்தில் நாடு முழுக்க பதற்ற நிலைமையை ஏற்படுத்தி அரசியல் செய்யும் நிலைமைகளை முடிவுக்குக்கொண்டு வர இருதரப்பிலும் பொறுப்புள்ளோர் ஆவன செய்ய வேண்டும்.

இதன் முதற்கட்டமாகவே, தெற்கத்திய தீவிரவாதிகளின் எதிர்ப்பின் மத்தியிலும் அதிகாரபூர்வ இராணுவ வெற்றி விழாவை நமது அரசு நிறுத்தியுள்ளது என்ற உண்மை தமிழ் தரப்பால் புரிந்துகொள்ளப்பட வேண்டும் என அந்தப் பதிவில் தெரிக்கப்பட்டுள்ளது. (இ)

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபையின் 2017ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரனால் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட மீசாலை வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்ட சீமா விளையாட்டுக் கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாண விளையாட்டுத் திணைக்கள வளாகத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் திருமதி அனந்தி சசிதரன் கலந்து கொண்டு கழக அங்கத்தவர்களிடம் குறித்த பொருட்களை வழங்கினார். (இ)

## பிணைமுறி விவகாரம்

## மீள் பரிசீலனை மனு மீது இரு தினங்கள் விசாரணை

(கொழும்பு)

பெர்பச்சுவெல் ட்ரசரிஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜூன் அலோசியஸ் மற்றும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் கசுன் பலிசேன ஆகியோர் தமக்குப் பிணை வழங்குமாறு கோரி தாக்கல் செய்த மீள் பரிசீலனை மனுவை இம் மாதம் 25 ஆம் திகதியும் ஜூன் மாதம் முதலாம் திகதியும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்மானித்தது.

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி விவகாரம் தொடர்பில், குறித்த இருவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)


## சிறுவர் விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சிறுவர் உலக ஆங்கில தமிழ் மொழி மூலமான லிற்றில் மாஸ்டர்ஸ் மொண்டோசரி பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் மல்லாகத்திலுள்ள சிறுவர் உலக முன்பள்ளி மைதானத்தில் சமாதான நீதவான் கி.சதீஸ்குமார் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வித் திணைக்கள ஓய்வுபெற்ற ஆரம்பப் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளார் ந.இ.இராஜேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக இணுவில் இந்துக் கல்லூரி பகுதித் தலைவர் திருமதி ஜெ.விஜயகுமாரி, இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு ஆசிரியர் ரா.சிவப்பிரியா, இணுவில்கிழக்கு கிராம உத்தியோகத்தர் சு.இசைச்செல்வி, சுன்னாகம் பிரதேச சபை முகாமைத்துவ உதவியாளர் செ.சுஜீதா, சுன்னாகம் பொலிஸ் நிலையம் பொறுப்பதிகாரி ம.செல்வகுமார் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பழை லிற்றில் மாஸ்டர்ஸ் மொண்டோசரி ஆசிரியை சு.தனுசா, மல்லாகம் லிற்றில் மாஸ்டர்ஸ் மொண்டோசரி ஆசிரியை பு.கலைவாணி ஆகியோரும் கலந்து சிறப்பிப்பர். (இ)

## நம்பகமான பொறுப்புக்கூறும் செயன்முறையை இலங்கை உருவாக்க வேண்டும்-ட்ரூடே



(ரொரண்டோ)

பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கை அளிக்கக் கூடிய நம்பகமான ஒரு பொறுப்புக் கூறும் செயல்முறையை உருவாக்க வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்திடம் கோரியுள்ளார் கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடே.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்து ஒன்பது ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு, நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"போர்முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட ஒன்பதாவது ஆண்டு நிறைவை கடைப்பிடிக்கிறோம். 26 ஆண்டுகளாக நீடித்த போரினால், அளவிட முடியாத காயங்கள், வாழ்க்கை இழப்புகள், இடப்பெயர்வுகளை சந்திக்க நேரிட்டது.

போரில் உயிர் பிழைத்தவர்கள், காணாமல் ஆக்கப்பட்ட தமது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அன்புக்குரியவர்களின் நிலை பற்றிய பதிலுக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த ஒன்பது ஆண்டுகளில், போரினால் தனிப்பட்ட ரீதியில் பாதிக்கப்பட்ட பல தமிழ் கனேடியர்களை நான் சந்தித்திருக்கிறேன்.

அவர்களின் கதைகள் நீடித்த சமாதானத்தையும் உண்மையான நல்லிணக்கத்தையும் அடைவதற்கான தேவையை நினைவூட்டுகின்றன.

உயிர்தப்பியோருக்கு நம்பிக்கை அளிக்கக் கூடிய நம்பகமான ஒரு பொறுப்புக்கூறும் செயல்முறையை உருவாக்க வேண்டும் என்று, இலங்கை அரசாங்கத்திடம் நான் அழைப்பு விடுகிறேன்.

நல்லிணக்கம், போர்மீள நிகழாமையை உறுதிப்படுத்தல், அமைதி மற்றும் நீதியை நோக்கிய நகர்வுகளுக்கான பணிகளை உறுதிப்படுத்துவதற்கும் பொறுப்புக்கூறல், நிலைமாறு கால நீதி, தண்டனையில் இருந்து தப்பிப்பதை முடிவுக்குக் கொண்டு வரும் உள்நாட்டு மற்றும் அனைத்துலக கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் இலங்கை அரசாங்கத்துக்கு கனடா முழு ஒத்துழைப்பையும் வழங்கும்.

இந்த நினைவு நாளில், தமிழ் கனேடியர்களுக்கும் ஆயுதப் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன், எமது நாட்டிற்கு முக்கியமான பங்களிப்பை வழங்கிய தமிழர்-கனேடியர்களை, அங்கீகரிப்பதற்கும் அவர்கள் கடந்து வந்த துன்பங்களை நினைவு கொள்வதிலும் இணைந்து கொள்ளுமாறு அனைத்து கனேடியர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றேன்" என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## போரின் போது பொதுமக்களும் கொல்லப்பட்டனர்

### வாசுதேவ தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் போரின் போது மக்களும் கொல்லப்பட்டதாக கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் அமைச்சரவையின் இணைப் பேச்சாளர் ராஜித சேனாரட்ன வெளியிட்ட கருத்துத் தொடர்பில் வாசுதேச மேலும் தெரிவக்கையில்,

இரண்டு தரப்பிற்குமிடையிலான போரின் போது படைவீரர்களும் போராளிகளும் மட்டும் உயிரிழப்பதில்லை. அந்த வகையில் இலங்கையிலும் போரின் போது சாதாரண பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

போரின் போது சாதாரண பொதுமக்கள் கொல்லப்படவில்லை என ராஜபக்ஷ தரப்பு கூறினாலும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், வேண்டுமென்றே தமிழ் மக்களை கொல்லவில்லை என்றே ராஜபக்ஷ தரப்பு கூறியதாக தமக்கு நினைவில் உள்ளது என வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## ரூ.4கோடி பெறுமதியான 40 தங்கக் கட்டிகளுடன் இந்தியப் பிரஜை கைது

(கொழும்பு)

சுமார் நான்கு கோடி ரூபாய் பெறுமதியான 40 தங்கக் கட்டிகளை சட்டவிரோதமாகக் கொண்டு வந்த இந்தியப் பிரஜை ஒருவர் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவில் இருந்து கட்டுநாயக்கவுக்கு வந்த வர்த்தகர்களுடன் விமான நிலையத்திலிருந்து வெளியில் சென்ற இவர் மீண்டும் சுங்கப் பிரிவிற்குள் பிரவேசித்துள்ளார்.

இந்த நிலையில் சுங்க அத்தியட்சகர் ஆர்.எஸ்.கே. செனவிரத்னவுக்கு ஏற்பட்ட சந்தேகத்தின் அடிப்படையில் குறித்த இந்திய பிரஜையை சோதனையிட்ட போது அவரின் காற்சட்டை பையிலிருந்து 100 கிராம் எடை கொண்ட 40 தங்கக் கட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக சுங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

சந்தேகநபர் இந்திய விமான சேவை நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான விமானத்தில் இலங்கை வந்துள்ளார். இது குறித்து சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (இ)

ARPICO Insurance

## பணிநிலை வெற்றிடம்



84 வருடங்களுக்கு மேலாக வியாபார நிபுணத்துவத்தையும் 35000 இற்கு மேற்பட்ட தொழிலாளர்கட்கு இலங்கை முழுவதும் வேலைவாய்ப்பை வழங்கும் ரீட்சட் பீரிஸ் கம்பனியில் ஒரு பிரிவான ஆர்ப்பிகோ காப்புறுதி நிறுவனத்தில் நீங்களும் இணைந்து கொள்ள அரிய சந்தர்ப்பம்.

- Managers
- Unit Managers
- Executive
- Consulatant

நிரந்தர வேலைவாய்ப்பு EPF/ETF உட்பட

(3954)

- எல்லையற்ற வருமானம்.
- நிரந்தர சம்பளம், மேலதிக கொடுப்பனவுகள், போனஸ் மற்றும் ஏனைய சலுகைகள்.
- இலவச் மருத்துவக் காப்புறுதி.
- இலவச ஆயுட் காப்புறுதி.
- உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா.

தொடர்புகளுக்கு:- 077 241 7007

## உடனடி வேலைவாய்ப்பு

O/L, A/L முடித்த மற்றும் பகுதி நேரமாக வேலை செய்ய ஆர்வமுள்ள அனைவருக்கும் EPF/ETF உடனான நிரந்தர வேலைவாய்ப்பு.

(3954)

தொடர்புகளுக்கு:- 077 241 7007

## விற்பனைக்கு

மந்திகை அரசினர் வைத்தியசாலையிலிருந்து 400 மீற்றர் தொலைவில் பிரதான வீதிக்கு மிக அண்மையில் குடியிருப்புக்குகந்த பிரிவிடல் செய்யப்பட்ட 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (சி-2638)

தொடர்புகளுக்கு: 021 226 5051

## JAFFNA CENTRAL COLLEGE

**தரம்-1 மாணவர் அனுமதிக்கான விண்ணப்பம் கோரல்.**

**1)** 2019ஆம் ஆண்டு தரம் 1இல் இணையத் தகுதியுள்ள மாணவர்களின் அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்களை கல்லூரி ஆரம்பப் பிரிவு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**2)** 2019 ஜனவரி 31 இல் 5 வயதினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**3)** பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2018.06.30ஆம் திகதிக்கு முன்னர் கல்லூரி ஆரம்பப் பிரிவு அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

**4)** கால தாமதமாகும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

கல்லூரியில் இணைந்து கொள்ளும் மாணவர்கள் "JCC Edu Care Trust" அனுசரணையில் செயற்படுத்தும் பின்வரும் பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**ஆங்கில மொழித்திறன் பயிற்சி (இலவசம்), சதுரங்கப் பயிற்சி (இலவசம்), அடிப்படைக் கணினி பயிற்சி (இலவசம்), கராத்தே தற்காப்புக் கலைப்பயிற்சி (இலவசம்), தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தால் தரம் 13 வரை தொடர் கல்விக்கு புலமைப்பரிசில் திட்டம்.** (C-2637)

யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி. அதிபர்.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603,
021 567 1532

## வாடிக்கையாளருக்கான அறிவித்தல்

N.W. HOLDINGS (PVT) LTD.
N.W. ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

*2018 மே மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 354 1/1* CLOCK TOWER ROAD, JAFFNA **என்ற முகவரியில் இயங்கிய எமது கிளை அலுவலகத்தை மூடிவிட இயக்குநர் சபை தீர்மானித்துள்ளனர். எனவே 2018 மே மாதம் 15 ஆம் திகதியிலிருந்து மேற்படி யாழ்.கிளை அலுவலகத்தில் நடைபெற்ற அனைத்து கடமைகளும் N.W.ஹோல்டிங்ஸ் இல.7,பல்மைரா அவனியு, கொழும்பு 03 முகவரியில் இயங்கும் எமது தலைமை அலுவலகத்தில் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். எமது கடமை நேரம் வழமைபோல் வார நாட்களில் 8.30 தொடக்கம் 4.00 மணி வரை நடைபெறும்.**

சிரமத்திற்கு வருந்துகின்றோம்.

N.W ஹோல்டிங்ஸ் லிமிட்டெட்
இல.7, பல்மைரா அவனியு,
கொழும்பு 03.

தொலைபேசி இல.
011 250 7182, 072 245 5102,
072 245 5107, 076 313 2454

## வீடு வாடகைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் மற்றும் கொக்குவில்,கோண்டாவில் பகுதிகளில் இருவர் கொண்ட அரச உத்தியோகம் பார்க்கும் குடும்பத்திற்கு தனி வீடு அல்லது அனெக்ஸாகவோ (Anex) இருக்கக்கூடிய வீடு வாடகைக்கு தேவை.

(4181)

தொடர்புகளுக்கு: 076 857 8379, 077 613 7251

## மணமகன் தேவை

RC 32 வயது, BSc பட்டதாரி விரிவுரையாளர் (ஆஸ்பத்திரி தாதிகளுக்கு) பட்டதாரி அரச உத்தியோகம் அல்லது வெளிநாடு.

(4113)

தொடர்புகளுக்கு: 077 945 7183

## இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

### போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக வாடகை அடிப்படையில் வான் வாகனம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளல்(சாரதியுடன்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் சேவையாற்றும் பொருட்டு, மாதாந்த வாடகை அடிப்படையில் பயணிகளையும்,பொருட்களையும் ஏற்றிச் செல்வதற்காக இரட்டைவளிச் சீராக்கல் வசதிகளுடன் கூடிய 8 - 10 இருக்கைகளைக் கொண்ட வான் வாகனம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கான முத்திரையிடப்பட்ட கேள்விமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

மீளளிக்கப்படக்கூடிய **கேள்விப்பணமாக ரூ.1000.00** இனையும், மீளளிக்கப்பட முடியாத **கேள்விப்பணமாக ரூபா 500.00** இனையும் செலுத்தி அதன் பற்றுச்சீட்டினை சமர்ப்பிப்பதன் மூலம் **21.05.2018 முதல் 07.06.2018 பிற்பகல் 2.00 மணிவரை கொக்குவில், பிறவுண் வீதியில்** அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் கேள்விமனுப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விமனுப்பத்திரம் இரண்டு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கேள்விமனுப்பத்திரம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"யாழ்ப்பாண பிராந்திய நிலையத்திற்கு போக்குவரத்து சேவையினை வழங்குவதற்கான கூறு விலை"** எனக் குறிப்பிட்டு 2018.06.08 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு **"சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ பொது நிர்வாகக் கிளை, இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட"** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நுகேகொட, நாவல இல் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக பொதுநிர்வாகக் கிளையில் வைக்கப்பட்டுள்ள கேள்வி மனுப்பெட்டியினுள் இடப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் யாவும் அன்றையதினம் பி.ப. 2.00 மணிக்கு பதிவாளர் மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்.

அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதி கலந்து கொள்ளலாம். (சி-2626)

பதிவாளர்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,
நாவல, நுகேகொட.
20.05.2018

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 1 ஆம் பாதம்<br>கி.பா: சூரி செவ் 3 இல்<br>தகைமை/தொழில்:O/L டோகா<br>தொ.இ: B/7670 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3 ஆம் பாதம்<br>உயரம்: 157cm<br>தகைமை/தொழில்: A/L தனியார்தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/7810 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2 ஆம் பாதம்<br>கி.பா: 36<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்:O/L தனியார் தொழில்<br>தொ.இ: B/7677 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 32 செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: CA படித்துக் கொண்டிருக்கிறார்<br>தொ.இ: G/7811 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4 ஆம் பாதம்<br>கி.பா: 23 செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: ஜேர்மனி PR<br>தொ.இ: B/7678 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1 ஆம் பாதம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/7814 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 1 ஆம் பாதம்<br>கி.பா: 73 செவ் 7 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: BSC அரசஆசிரியர்<br>தொ.இ: B/7679 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பரணி செவ் 1 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: DIPLOMA நிதிஉதவியாளர்<br>தொ.இ: G/7818 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# வவுனியாவில் டெங்கு தாக்கம்

## சுகாதாரத்துறையினர் எச்சரிக்கை

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் பெய்து வரும் மழை காரணமாக வைரவப்புளிங்குளம் பகுதியில் அதிகளவில் டெங்கு நுளம்புகள் பெருக்கெடுத்துள்ளதாக பூச்சியியலாளர்களினால் இனங்காணப்பட்டுள்ளதாக வவுனியா பொது சுகாதார மேற்பார்வை பரிசோதகர் க.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வவுனியாவில் அண்மைய காலங்களில் மாலை வேளைகளில் அதிகரித்துக் காணப்படும் மழையுடனான காலநிலை காரணமாக குருமன்காடு, சூசைப்பிள்ளையார்குளம், வைரவப்புளியங்குளம் ஆகிய பகுதிகளில் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

டெங்கு நுளம்பின் தாக்கம் பூச்சியியலாளர்களினால் இனங்கண்டுகொண்டுள்ளதாகவும் இப்பகுதிகளிலுள்ளவர்கள் தமது இருப்பிடங்கள், வீடுகள், வியாபார நிலையங்கள், கல்வி நிலையங்கள் அனைத்தையும் துப்புரவு பணிகள்மேற்கொண்டு டெங்கு நுளம்பு குடம்பிகள் பெருக்கெடுக்காவண்ணம் இருப்பிடங்களை வைத்திருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளாதவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழாங்குத்தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் அண்மையில் நெளுக்குளம், கந்தபுரம் பகுதிகளில் பொது சுகாதார பரிசோதகர்களினால் டெங்கு நுளம்புக் குடம்பிகள் காணப்பட்ட நால்வருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தினால் தலா மூவாயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-281)

# பொங்குதமிழ் தூபிக்கு முன்பாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்





(பனிக்கன்குளம்)

வவுனியா நகரசபையில் அமைந்துள்ள பொங்கு தமிழ் தூபிக்கு முன்பாக நேற்று முன்தினம் பிற்பகல் 5.30 மணிக்கு நகரசபையின் தவிசாளர் ஆர்.கௌதமன் தலைமையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இடம் பெற்றது.

உயிர் நீத்த உறவுகளுக்காக நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டு அதனைத் தொடர்ந்து உறவுகளின் ஆத்ம சாந்திக்காக மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், எஸ்.சிவமோகன், நகர சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் , சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள்,பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந் நிகழ்வின் இறுதியில் தமிழ் விருட்சம் அமைப்பினரின் வேண்டுகோளிற்கிணங்க பிரான்ஸ் வாழ் தமிழன் கார்மேகன் கலையழகனின் நிதியுதவியில் முன்னாள் போராளியொருவரின் பிள்ளைகளின் கல்விச்செலவுக்காக 5 ஆயிரம் ரூபா பணத்தை தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் வழங்கி வைத்தார். (2-250)

# கிளிநொச்சி பொதுச்சந்தை வளாகத்தில் சுடரேற்றி நினைவேந்தல் பிரார்த்தனை நிகழ்வு





(பனிக்கன்குளம்)

வன்னி இறுதி யுத்தத்தில் முள்ளிவாய்க்காலில் கொத்துக்கொத்தாகக் கொல்லப்பட்ட மக்களுக்கான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வணக்க நிகழ்வு கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் ஏ.வேழமாலிகிதனின் ஒழுங்கமைப்பில் கிளிநொச்சி பொதுச் சந்தை வளாகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணியளவில் மிகவும் உணர்வு பூர்வமாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வட மாகாண சபை உறுப்பினர்களான த.குருகுலராசா, சு.பசுபதிப்பிள்ளை, மதத் தலைவர்கள், கரைச்சிப்பிரதேச சபை உறுப்பினர்கள், பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை உறுப்பினர்கள் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டவர்களது உறவுகள் என பெருமளவானவர்கள் கலந்துகொண்டு வணக்கம் செலுத்தியிருந்தனர். மதத் தலைவர்களது இறை பிரார்த்தனை நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன. (2-281)

# பாலத்துடன் மோதுண்டது டிப்பர்; குடும்பஸ்தர் உயிரிழந்தார்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த டிப்பர் வாகனம் எதிர்பாராத விதமாக மாட்டுடன் மோதி தடம் புரண்டு பாலத்துடன் மோதியதில் ஒரு பிள்ளையின் தந்தை சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் களிக்காட்டுப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இவ் விபத்தில் ஆனந்தன் றொபின்சன் (வயது-30) என்ற குடும்பஸ்தரே உயிரிழுந்தவராவார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வெள்ளை மண் ஏற்றிப் பயணித்த டிப்பர் வாகனம் எதிர்பாராத விதமாக மாட்டுடன் மோதி தடம்புரண்டு பாலத்துடன் மோதுண்டதில் டிப்பரில் இருந்த மண் மூடி பிரஸ்தாப நபர் உயிரிழுந்தார்.

இச் சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் மேலதிக விசாரணையை முன்னெடுத்தனர். (2)

# இறுதிப் போரில் உயிர்நீத்தவர்களுக்கு புதுக்குடியிருப்பில் அஞ்சலி நிகழ்வு



(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு வணிகர் சங்கம் மற்றும் முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்விற்கொள்ளப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு சந்தியில் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு இறுதிப்போரில் உயிரிழந்த மக்களை நினைவுகூறுவதற்காக அமைக்கப்பட்ட கொட்டகையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை புதுக் குடியிருப்பு பிரதேச வணிகர் சங்கத் தலைவர் செ.செல்வச்சந்திரன் ஏற்றிவைக்க தொடர்ந்து பொதுப்படங்களுக்கு சுடர் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தினைச் சேர்ந்த வணிகர்கள் முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தினர் என பெருமளவானவர்கள் கலந்துகொண்டு மலர் தூவி அஞ்சலித்தனர்.

அதன் பின்னர் நினைவுரைகள் இடம்பெற்றன.(2)

# வவுனியா பொதுவைத்தியசாலைக்கு புதிய எக்ஸ்ரே கருவி

(பனிக்கன்குளம்)

வவுனியா பொது வைத்தியசாலையில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள புதிய எக்ஸ்ரே கருவி ஒன்று பொருத்தப்பட்டு நேற்று முன்தினம் முதல் சேவைகள் இடம்பெற்று வருவதாக வைத்தியசாலைப்பணிப்பாளர் வைத்தியர் கு.அகிலேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில தினங்களாக வவுனியா பொது வைத்திய சாலையில் பாவனையிலிருந்த எக்ஸ்ரே கருவி பழுதடைந்து காணப்பட்டது. இதனால் வவுனியா வைத்திய சாலையிலுள்ள நோயாளர்களை காவு வண்டியின் உதவியுடன் செட்டிகுளம் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று எக்ஸ்ரே எடுக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்துள்ளது.

எனினும் தற்போது எமது வைத்தியசாலைக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட புதிய எக்ஸ்ரே கருவி நேற்று முன்தினம் பொருத்தும் பணிகள் இடம்பெற்றிருப்பதுடன் அன்றில் இருந்து வவுனியா வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் அனைவருக்கும் புதிய எக்ஸ்ரே கருவியின் உதவியுடன் சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாக மேலும் தெரிவித்துள்ளார். (2-281)

# புதையல் தோண்டிய ஐவர் கைது!

(குருமன்காடு)

வவுனியா வாரிக்குட்டியூர்பகுதியில்புதையல்தோண்டியஐந்துபேரைபூவரசன்குளம் பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் அவர்களிடமிருந்து புதையல்தோண்டும் ஆயுதங்களும்கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 12.10 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

அதிகாலை 12.10 மணியளவில் வாரிக்குட்டியூர், சங்கராபுரம் பகுதியிலுள்ள வெற்றுக்காணி ஒன்றில் ஐந்து பேரடங்கிய குழுவினர் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக பூவரசங்குளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத்தகவல் அடிப்படையில் சென்ற பொலிஸ் குழுவினர் புதையல் தோண்டிய ஐந்து பேரையும் சம்பவ இடத்தில் வைத்து கைது செய்துள்ளதுடன் அவர்களிடமிருந்து மண்வெட்டி, அலவாங்கு என்பனவற்றையும் கைப்பற்றியுள்ளனர்.

அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது தேக்கவத்தைப் பகுதியைச் சேர்ந்த மூவரும் மதகுவைத்த குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் சாந்தசோலைப் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 42, 44, 27, 30, 29 வயதுடையவர்களாவர். இவர்களை மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (2-250)

மனச்சாட்சிக்கு ஒப்பான கடமையைச் செய்தாலும் சூழ்நிலையை அனுசரித்துச் செய்.

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அரசியல்வாதிகளை ஓரங்கட்டிய முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத அரசியல்வாதிகளை தேர்தல் மூலம் வீழ்த்துவதுதான் உலக வழமை.

பொதுவில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் என்ற நடைமுறை ஜனநாயக நாடுகள் பலவற்றிலும் உண்டு.

இவ்வாறு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்கள் வழங்கும் தீர்ப்பின் அடிப்படையில், அரசியல்வாதிகள் பதவி பெறவும் பதவியை இழக்கவும் வழி ஏற்படுகிறது.

ஆக, அரசியல்வாதிகளுக்குப் பாடம் புகட்டுவதற்கான ஒரு சந்தர்ப்பமாகவும் தேர்தல் அமைகிறது என்று கூறிக் கொள்ளலாம்.

அதாவது வாக்களிப்பு மூலமாகவே அரசியல்வாதிகள் ஓரங்கட்டப்படுகின்ற நிகழ்வு உலகம் முழுவதிலும் நடக்கின்றபோதிலும்,

நம் ஈழத் தமிழ் மண்ணில் இதற்கு மேலாக, நினைவேந்தல் நிகழ்வொன்றில் அரசியல்வாதிகள் ஓரங்கட்டப்பட்ட சம்பவம் நடந்தது எனும்போது, இஃது வரலாற்றில் பதியப்பட வேண்டிய விடயமாகும்.

அதிலும் வடக்கின் முதலமைச்சரை நாம் அங்கீகரித்து ஏற்றுக்கொள்கின்றோம்.

தமிழ் மக்களுக்கு இன்றிருக்கக்கூடிய தலைவர் முதலமைச்சர் விக்னேஸ்வரன்தான்.

எனவே அவர் தலைமையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடக்கட்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் இறுதிப்போரில் உயிரிழந்தவர்களின் உறவுகளும் பொதுமக்களும் உறுதியாக நின்றனர் எனும்போது,

தமிழ் அரசியல்வாதிகள் தொடர்பில் சர்வதேச சமூகம் ஆழமாகச் சிந்திக்கும் எனலாம்.

அதேநேரம் வடக்கின் முதலமைச்சர் ஆற்றிய உரை என்பதும் சர்வதேச சமூகத்தால் ஈண்டு கவனிக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

ஆம், வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் ஆற்றிய உரை மூன்று முக்கிய விடயங்களை முதன்மைப்படுத்தியுள்ளது.

அவையாவன,

- வன்னியில் நடந்தது தமிழின அழிப்பு.
- தமிழ் மக்கள் கொல்லப்பட்டபோது சர்வதேச சமூகம் தனது பொறுப்புக்களை மறந்து வாழாதிருந்தது. எனினும் என்றோ ஒரு நாள் உண்மையை சர்வதேசம் உணர்ந்து கொண்டு தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வழி செய்யும்.
- ஒரு பெரும் போர் நடத்தி அதில் தமிழ் மக்களை கொத்துக் கொத்தாகக் கொன்றொழித்த பின்பும் இன்னமும் இலங்கை ஆட்சியாளர்களுக்கு தமிழினத்தின் மீதான வெறி அடங்கவில்லை. அதனால்தான் தமிழ் மக்களின் மீள்குடியேற்றத்துக்காக சர்வதேசத்தால் வழங்கப்பட்ட நிதி உதவியையும் இராணுவத்தின் தேவைக்கு பயன்படுத்துகிறது.

முதலமைச்சரால் கூறப்பட்ட இந்த மூன்று விடயங்களும் நிச்சயம் சர்வதேசத்தின் மத்தியில் வலுப்பெறும் என்பதில் இரண்டாம் கருத்திற்கிடமில்லை.

# ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர்

## கதிர் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் விசாரணை

(பனிக்கன்குளம்)

முன்னாள் போராளிகளான ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் கதிர் எனப்படும் ரா.கிருபாகரன் பயங்கரவாத குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினர் விசாரணைக்கு அழைத்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பயங்கரவாத விசாரணைப் பிரிவின் முன் நடத்தப்படும் விசாரணைக்காக வாய்மொழி முறைப்பாட்டினை பெற்றுக் கொள்வதற்காக கடந்த 09.05.2018 அன்று திகதி குறிப்பிடப்பட்டு விசாரணைக்கு வருமாறு பயங்கரவாத விசாரணைப்பிரிவின் கிளிநொச்சி ஒன்றியம் கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளது.

அதற்கமைய நான் கிளிநொச்சி சென்று திகதியினை 14ஆம் திகதி விசாரணைக்கு வருகை தருவதாக திகதி மாற்றம் செய்து விசாரணைக்கு கொழும்பில் அமைந்துள்ள பயங்கரவாத விசாரணைப்பிரிவிற்கு சென்றுள்ளேன்.

அங்கு மேற்கொண்ட விசாரணைகளின்போது ஜனநாயக போராளிகள் கட்சியின் செயற்பாடுகள், போராளிகள் அரசியல் கட்சியினை உருவாக்கியதன் நோக்கம், வடக்கில் தேசிய நிகழ்வுகளை கொண்டாடுவதன் நோக்கம், எமது கட்சியில் உள்ள போராளிகளின் போராட்ட கால செயற்பாடுகள், கட்சியின் நிதி செயற்பாடுகள், வெளிநாட்டு தொடர்பாடல்களை வைத்திருத்தல் தொடர்பில் விரிவாக விசாரணையினை மேற்கொண்டுள்ளார்கள் என்றும், இது ஜனநாயக வழியில் இணைந்து செயற்படும் எமது கட்சி முன்னாள் போராளிகளை அச்சுறுத்தும் செயற்பாடாக விசாரணைகள் இடம்பெற்றுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான விசாரணைகள் முடியவில்லை என்றும் மறுபடியும் அழைத்து விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் கொழும்பில் உள்ள பயங்கரவாத புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ம-281)

# அமைச்சர் ராஜிதவுக்கு எதிராக காலியில் ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு

(கொழும்பு)

அமைச்சர் ராஜித சேனாரத்ன இராணுவம் தொடர்பில் தெரிவித்திருந்த கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து காலியில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

காலியிலுள்ள இராணுவ நினைவுத் தூபிக்கு அருகில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அங்கவீனமுற்ற இராணுவத்தினர், நாட்டுக்காக உயிர் நீத்த இராணுவத்தினரின் மனைவிமார் ஆகியோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அமைச்சரின் கூற்றைக் கண்டித்து பதாகைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடைசி யுத்தத்தில் இராணுவம் புலிகளை மாத்திரம் கொலை செய்யவில்லையெனவும், இராணுவத்தினரால் பொதுமக்களும் கொல்லப்பட்டுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் கூறியிருந்தார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம)

## கடத்தலை தடுக்க வடக்கு கடற்பிரதேசத்தில் ரோந்து

### கடற்படை தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கடற் பிரதேசத்தின் ஊடாக இலங்கைக்குள் மேற்கொள்ளப்படுகின்ற கடத்தல் நடவடிக்கைகளை தடுப்பதற்கு, தொடர்ச்சியான ரோந்து நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக கடற்படை தெரிவித்துள்ளது.

ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கும்போது கடற்படை ஊடக பேச்சாளர் தினேஸ பண்டார இதனை குறிப்பிட்டுள்ளார்.

கடற்படையினால் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட ரோந்து நடவடிக்கைகள் மூலம் பல போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத கடத்தல்கள் முறியடிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் காலங்களிலும் அந்த பணிகள் தொடரும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ம)

## பேருந்து விபத்து நால்வர் படுகாயம்

வவுனியா - புளியங்குளத்துக்கும் ஓமந்தைக்கும் இடையே இ.போ.சபை மற்றும் தனியார் பேருந்துகள் இரண்டு நேற்றுப் பிற்பகல் மோதி விபத்துக்குள்ளான தில் 4 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தனியார் பேருந்து சடுதியாக நிறுத்தப்பட்டதை அடுத்து, அதன் பின்புறம் வேகமாக வந்துகொண்டிருந்த இ.போ.ச பேருந்து வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாது மோதி விபத்துக்குள்ளானது என்று கூறப்படுகின்றது. (ம)

## 20ஆவது அரசியலமைப்பு திருத்தம் அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில்

20ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான முன்வரைவு அடுத்தவாரம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு இந்த முன்வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த முன்வரைவினை நாடாளுமன்ற பொது செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அரசியல் அமைப்பின் பிரகாரம் அது முன்மொழியப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆராய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கையளிக்கப்படவுள்ளது.

இதனிடையே, 20ஆவது அரசியல் அமைப்பு திருத்தம் தொடர்பான கருத்துக்கணிப்பை நடத்துவதற்கு அண்ணளவாக 4 மாதங்கள் தேவைப்படும் என, ஜேவிபியின் நாடாளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜெயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார். (ம)

## கிராம அலுவலருடன் தர்க்கப்பட்ட நபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

மதுபோதையில் கிராம அலுவலருடன் தர்க்கப்பட்ட நபரை எதிர்வரும் 24.05.2018வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி நளினி சுபாகரன் உத்தரவிட்டார்.

துன்னாலை குடவத்தைப் பகுதியில் கூட்டம் ஒன்றுக்காக அறிவிப்புச் செய்ய சென்ற கிராம அலுவலரை மதுபோதையில் நின்ற நபர் ஒருவர் ஏசியதுடன் தர்க்கப்பட்டும் உள்ளார்.

இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டது.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ம-60)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**பெருக்கிச் சுத்தம் செய்யாத இடத்தில் மிதித்தால் குளிக்க வேண்டும். ஏன்?**

பெருக்கிச் சுத்தம் செய்யாத இடத்திற்கு லட்சுமிதேவி வரமாட்டாள். அங்கு துர்தேவதை வாசம் செய்யும். சாணத்தைக் கரைத்து தெளித்தால் துர்தேவதை ஓடிப்போகும். ஏனென்றால் தண்ணீர் அனைத்தையும் சுத்தம் செய்யும் பொருளாகும். சாணமும் சுத்தமானதாகும்.

தண்ணீரில் சாணத்தைக் கரைத்துத் தெளிப்பதால் அந்த இடமும் சுத்தமாகிறது. சுத்தமான இடத்திற்குத்தான் லட்சுமி வருவாள். சாணம் கரைத்துத் தெளிக்காத இடத்தில் மிதிக்கின்றவர்களும் அசுத்தமானவர்களாவார்கள். அசுத்தத்தை மாற்றுவதற்கு குளிப்பது ஒன்றே வழி. எனவே தான் பெருக்கிச் சுத்தம் செய்து சாணம் தெளிக்காத இடத்தில் மிதித்தால் குளிக்க வேண்டும் என்று கூறுகிறார். (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **கிளிநொச்சி பிரதேசத்தில** தட்டுவன் கோட்டையிலும் **வவுனியா பிரதேசத்தில்** குடாகச்சகொடிய, மகாமயிலங்குளம், துட்டுவாகை, குடாகச்சகொடிய கல் உடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு - III
## யூனியன்ஸ் அணி வெற்றி பெற்றது

சிறிலங்கா கிரிக்கெட் தொடருக்கான யாழ்.நகரில் இருந்த. இரு அணிகளைத் தெரிவு செய்வதற்கான தகுதி காண் போட்டிகள் வரிசையில் 17 ஆவது போட்டி கடந்த வாரம் நடைபெற்ற போது யூனியன்ஸ் அணி, ஹாட்லியைற்ஸ் அணியை 69 ஓட்டங்களால் வெற்றி பெற்று கால் இறுதி முன் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி 32.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றது. மகிதன்-15, ஆகீசன் -64, தயாளன்-27 ஓட்டங்களைப் பெற்றனர். சதீஸ்-3, பிரசாத்-1, மணிமாறன்-4, செயோன்-1 இலக்கினைக் கைப்பற்றினர். பதிலளித்த ஹாட்லியைற்ஸ் அணி 25 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றனர். சாகித்தியன்-10, சதீஸ்-30, மனோகரன்-27, ஓட்டங்களைப் பெற்றனர். சுயந்தன், ரகுபதி, பிரசாந் தலா இரண்டு இலக்குகளையும் தயாளன் 3 இலக்குகளையும் கைப்பற்றினர். இப் போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 9 ஆவது ஆண்டாக நடத்தும் தரவரிசைப் பட்டியலுக்கு யூனியன்ஸ் அணி 8.35 புள்ளிகளையும் ஹாட்லியைற்ஸ் அணி 1.97 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டனர். (க)

# ஆறாயிரம் ஓட்டங்கள் கடந்து
## சாதனை படைத்த மகேந்திர சிங் டோனி



நேற்றுமுன்தினம் நடைபெற்ற 52 ஆவது லீக் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் டில்லி டேர்டெவில்ஸ் அணியும் மோதின. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர்டெவில்ஸ் அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 162 ஓட்டங்கள் எடுத்தது. தொடர்ந்து விளையாடிய சென்னை அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 128 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதனால் டில்லி அணி 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இப்போட்டியில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் டோனி 10 ஓட்டங்கள் எடுத்த போது, இருபது-20 கிரிக்கெட் போட்டிகளில் 6000 ஓட்டங்களை கடந்தார். இதன் மூலம் இருபது-20 போட்டிகளில் 6000 ஓட்டங்களை கடந்த ஐந்தாவது இந்தியர் என்ற பெருமையை டோனி பெற்றார். முன்னதாக சுரேஷ் ரெய்னா, விராட் ஹோலி, ரோகித் சர்மா, கௌதம்கம்பீர் ஆகியோரும் 6000 ஓட்டங்களை கடந்துள்ளனர். (க)

# அதிக சிக்ஸர்கள்
## அதிலும் சென்னை அணி
## முதலிடம் பிடித்தது



இந்தியன் பிரீமியர் லீக் எனப்படும் ஐ.பி.எல். போட்டிகள் கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அந்த வகையில், இந்த ஆண்டிற்கான 11 ஆவது சீசன் ஐ.பி.எல். தொடர் கடந்த ஏப்ரல் 7 ஆம் திகதி முதல் நடை பெற்று வருகிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற 52 ஆவது லீக் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் டில்லி டேர்டெவில்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் டில்லி டேர்டெவில்ஸ் வீரர் ரிஷப் பாண்ட் அடித்த சிக்ஸர் ஒன்று நடப்பு சீசனில் 750 ஆவது சிக்ஸராக பதிவானது. ஐ.பி.எல். போட்டி வரலாற்றில் ஒரு சீசனில் அடிக்கப்பட்ட அதிகபட்ச சிக்ஸர் எண்ணிக்கை இதுவாகும். மொத்தமாக இந்த சீசனில் இதுவரை நடைபெற்ற 52 போட்டிகளில் 764 சிக்ஸர்கள் அடிக்கப்பட்டுள்ளது. இதில் சென்னை அணி வீரர்களே அதிக சிக்ஸர் அடித்துள்ளனர். சென்னை சுப்பர் கிங்ஸ் வீரர்கள் இந்த சீசனில் இதுவரை 123 சிகஸர்கள் அடித்துள்ளனர்.

டில்லி 108, கொல்கத்தா 107, பெங்களூரு 104, மும்பை 98, பஞ்சாப் 96, இராஜஸ்தான் 66, ஐதராபாத் 62 ஆகியோர் அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர். முன்னதாக 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல். தொடரில் 731 சிக்ஸர்கள் எடுக்கப்பட்டதே சாதனையாக இருந்தது. (க)

# தூய ஒளி வெற்றிக்கிண்ண சுற்றுப் போட்டி முடிவுகள்

மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் 32 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழகத்தின் அனுசரணையுடன் தூய ஒளி வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டத் தொடர் நடை பெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் நடை பெற்ற பேட்டியில் கலைவாணி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து எவரெஸ்ட் விளையாட்டுக்கழகம் மோதியது. இப் போட்டியில் கலைவாணி விளையாட்டுக்கழம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து முல்லைத்தீவு சுப்பராவ் மோதியதி இப் போட்டியில் 2:1 என்ற கோல் கணக்கில் சரஸ்வதி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

அடுத்து பொற்பதி அணியை எதிர்த்து கொற்றாவத்தை ரேஞ்சஸ் அணி மேதியது. போட்டியில் 2:0 என்ற கோல்கணக்கில் கொற்றாவத்தை ரேஞ்சஸ் அணி வெற்றி பெற்றது. (க-106)

# சென்னையை வீழ்த்தியது மகிழ்ச்சி
## டில்லி அணித் தலைவர் பெருமிதம்

சென்னை அணியை வீழ்த்தியது மகிழ்ச்சியாக உள்ளது என டில்லி அணித் தலைவர் ஸ்ரேயஸ் அய்யர் கூறியுள்ளார்.

ஐ.பி.எல். தொடரின் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் சென்னை அணியை, டில்லி அணி 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.



இப்போட்டியில் சென்னை அணியின் துடுப்பாட்ட வீரர்களில் ராயுடுவைத் தவிர மற்ற வீரர்கள் அனைவரும் சொதப்பினர்.

ஆனால் அதே சமயம் டில்லி அணியின் பந்து வீச்சாளர்கள் அற்புதமாக பந்து வீசி சென்னை அணியை நிலைகுலைய வைத்தனர். 200 ஓட்டங்களை எட்டிபிடிக்கும் சென்னை அணியால் நேற்று முன்தினம் 164 ஓட்டங்களை எட்டி பிடிக்க முடியவில்லை.

இந்நிலையில் சென்னை அணியின் வெற்றிக்கு பின் பேசிய ஸ்ரேயஸ் அய்யர், தலைசிறந்த அணியான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்தியது மகிழ்ச்சியாக உள்ளது.

துடுப்பாட்டம், பீல்டிங் மற்றும் பந்து வீச்சு என மூன்றிலும் சிறப் பாக செயல்பட்டதன் காரணமாகவே இந்த வெற்றி எங்களுக்கு கிடைத் துள்ளது.

இந்த ஆடுகளத்தில் பாட்டிங் செய்வது மிகவும் கடினமாக இருந்தது, ஆனால் 7 ஆவது இடத்தில் களமிறங்கிய ஹர்ஷல் பட்டேல் அபாரமாக விளையாடினார்.

குறிப்பாக கடைசி ஓவரில் அவரின் துடுப்பாட்டம் மிகவும் அற்புதமாக இருந்தது. கடைசி ஓவரில் அவரின் அதிரடி ஆட்டத்தின் காரணமாகவே எங்களால் சென்னை அணிக்கு ஒரு கடினமான இலக்கை நிர்ணயிக்க முடிந்தது.

இன்னும் ஒரு போட்டி உள்ளதால், அப்போட்டியிலும் வெற்றி பெற முயற்சிப்போம் என்றார் அவர். (க)

# உங்கள் சாதனைகளுக்கு பாராட்டுக்கள்
## தமிழனைப் பாராட்டிய சங்கக்கார



தமிழகத்தை சேர்ந்த பளுதூக்கும் வீரர் சதீஷ் சிவலிங்கத்தை விமான நிலையத்தில் சந்தித்த குமார் சங்கக்கார அவரை சந்தித்தது குறித்து டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

2014 மற்றும் 2018 ஆம் ஆண்டு கொமன் வெல்த் விளையாட்டில் பளுதூக்கும் போட்டியில் பங்கேற்ற சதீஷ் சிவலிங்கம் தங்க பதக்கங்களை வென்று சாதனை படைத்தார்.

இந்நிலையில் இலங்கை கிரிக்கெட்ஜாம்பவான் குமார் சங்கக்காரவை விமான நிலையத்தில் சந்தித்த சதீஷ் அவருடன் எடுத்து கொண்ட புகைப்படத்தை டுவிட்டரில் வெளியிட்டுள்ளார்.

அந்த பதிவில், உங்களை சந்தித்தது மகிழ்ச்சியாக இருந்தது, சமூக வலைதளங்கள் மூலம் என்னை உங்களுக்கு தெரிடும் என நீங்கள் கூறியது எனக்கு மிகவும் பிடித்திருந்தது என பதிவிட்டுள்ளார்.

சதீஷின் பதிவுக்கு மறுபதிவிட்ட சங்கக்கார, உங்கள் வியக்கத்தக்க சாதனைகளுக்குப் பாராட்டுக்கள், உங்களின் மிகச் சிறந்த சாதனைகள் இனி தான் வெளிப்படும் என நினைக்கிறேன் எனப் பதிவிட்டுள்ளார். (க)

## யமுனா ஏரியில்...

5 பிள்ளைகளின் தந்தையான இராமையா ஜெயராசா (வயது 65) என்பவரே மேற்படி சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த நபர் கடந்த 17 ஆம் திகதி மாலை 5 மணிக்கு வீட்டில் இருந்து வெளியே சென்றுள்ளார். இரத்த அழுத்தம் மற்றும் சிறுநீரக வியாதியால் பாதிக்கப்பட்டிருந்த குறித்த நபர் வீடு திரும்பவில்லை என உறவினர்கள் அனைத்து இடங்களிலும் விசாரித்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்றுக் காலை யமுனா ஏரி பகுதியால் சென்ற பெண் ஒருவர் ஏரியில் இருந்து துர்நாற்றம் வீசுவதை உணர்ந்து ஏரியை அவதானித்த போது அங்கு சடலம் ஒன்று மிதப்பதை கண்டுள்ளார். உடனடியாக அயலவர்களுக்கு அறிவித்ததுடன் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது. அவ்விடத்துக்கு வந்த பொலிஸார் சடலத்தை மீட்டதுடன் உறவினர்கள் சடலத்தை அடையாளம் காட்டியிருந்தனர்.

குறித்த யமுனா ஏரியானது பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாகவும் இதற்கு முன்னர் 3 பேர் வரையில் குறித்த ஏரியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்கள் என்றும், சுற்றயலில் சிறுவர்கள் வசித்து வருவதால் குறித்த பகுதி பாதுகாப்பற்ற பிரதேசமாக காணப்படுவதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் குறித்த ஏரியை புனரமைப்பு செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டனர். இந்த மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## முள்ளிவாய்க்கால்...

முன்தினம் நினைவுகூரப்பட்டதாக போல் ஸ்கெலி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை பயங்கரவாதமாகவோ அல்லது கடும்போக்குவாதமாகவோ கருத முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதை நினைவுகூரும் வகையில் இந்த தினம் அனுஷ்டிக்கப்படுவதாக குறிப்பிடும் போல் ஸ்கெலி, சிவில் யுத்தம் காரணமாக அனைத்தையும் இழந்த மக்கள் நாட்டை விட்டு வெளியேறியும் காணாமல் போயும் உள்ளதாக கூறியுள்ளார்.

போரில் எஞ்சியுள்ளவர்களுக்கான நீதி என்பது இதுவரை வழங்கப்படவில்லை எனவும் போல் ஸ்கெலி மேலும் குறிப்பிட்டார்.

முள்ளிவாய்க்காலில் மக்கள் அனுபவித்த துன்பங்களை செவிமடுத்து கேட்பது மிகவும் கடினமானது எனக் குறிப்பிட்ட போல் ஸ்கெலி, அவர்களின் கூற்றுகளுக்கு செவிமடுத்து, நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சிகளை இரட்டிப்பாக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (ம)

## காயங்களுடனான...

க்கு வந்தது.

இதற்கமைவான எண்ணத்தில், தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு, கிழக்கு உட்பட ஏனைய மாகாணங்களுக்கும் சாத்தியமுள்ள அதிகார பரவலாக்கத்தை வழங்கக்கூடிய வகையிலான அரசியலமைப்பு வரைவு திட்டத்தை ஆரம்பித்ததாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், படையினர் வசமிருந்து காணிகளை விடுவிக்கும் பணிகள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகளுக்கான முயற்சிகளை வரவேற்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், கிட்டத்தட்ட வடக்கு, கிழக்கில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் கடனில் உள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், காயங்களுடனான நினைவுகள் ஒருபோதும் இறக்காது என்றும், எனினும், சில சாதகமான சிகிச்சை முறைகள் காயமுற்றவர்களின் சிறந்த எதிர்காலத்துக்கு சாத்தியமாகலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, தமிழர்களின் பெரும்பான்மை ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம் அவர்களை கைவிட்டுவிடக் கூடாது.

தவறவிடப்பட்ட சந்தர்ப்பங்களின் பட்டியலில் இது இணைந்துவிடக் கூடாது என தஹிந்து நாளிதழ் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## விபத்துக்குள்ளான...

சேர்ந்த சந்திரகுமார் பிரசாத் (வயது 20) என்ற இளைஞனே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞரும் அவரது நண்பரும் யாழ்ப்பாணம் காரைநகரில் உள்ள நண்பரின் வீட்டுக்கு கடந்த 13 ஆம் திகதி காலை சென்றுள்ளனர். அங்கிருந்து திரும்பிய வழியில் பிற்பகல் 3.30 மணிக்கு கோப்பாய் கிருஸ்ணர் கோவில் அருகே இருந்த வீதி வளைவில் அதிவேகமாக வந்து அருகில் உள்ள கம்பத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகினர்.

படுகாயமடைந்த இருவரும் யாழ்போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வந்தனர். இதில் மேற்குறித்த நபர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்ததுடன் அவருடைய நண்பர் அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## ஐ.நா இலங்கை இராணுவம்...

தலைப் புலிகள் இயக்கத்திற்கு சார்பானவர்களே இத்தகைய குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்ற விளையாட்டரங்கிலுள்ள இராணுவ நினைவுத் தூபிக்கு அருகில் இடம்பெற்ற தேசிய இராணுவ தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இராணுவத்தினரையும் தீவிரவாதிகளையும் சிலர் சரியாக இனங்கண்டு கொள்ளாமை கவலைக்குரிய விடயமாகும்.

பணத்தை மட்டுமே நோக்காகக் கொண்ட சில அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும்கூட இன்று இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையிலான வேறுபாட்டை சரிவர புரிந்துகொள்ள முடியாதுள்ளது.

எமது சிந்தனைகள், தேசத்தின் அடையாளங்கள், மரபுரிமைகள், பண்பாடு என்பவற்றுடன் நாட்டினதும் மக்களினதும் இராணுவத்தினரதும் கௌரவத்தை பேணும் வகையில் சகலரும் செயற்பட வேண்டும்.

தாய் நாட்டிற்காக உயிர்த்தியாகம் செய்த வீரம்மிக்க இராணுவத்தினருக்கு என்றும் தேசத்தின் மரியாதை உரித்தானது என்பதுடன், இராணுவத்தினருக்கு வழங்கக்கூடிய உயரிய கௌரவத்தையும் அவர்களது குடும்ப உறுப்பின்ர்களின் நலன்புரி தேவைகளை நிறைவேற்றவும் அரசு தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் செயற்படும்.

சில அரச ஊடகங்களும் இன்று இராணுவத்தினரை கௌரவிக்க மறந்து போயுள்ளதுடன், சில தனியார் ஊடக நிறுவனங்களும் தற்போதைய அரசு இராணுவத்தினரின் நன்மைக்காக மேற்கொள்ளும் செயற்திட்டங்கள் தொடர்பாக கருத்துக்களை வெளியிடாமை கவலைக்குரியதாகும்.

உயிர்த்தியாகம் செய்து தாய் நாட்டுக்காக இராணுவத்தினர் செய்த அர்ப்பணிப்பை நினைவுகூர்ந்து அவர்களுக்கு கௌரவத்தை வழங்க வேண்டியது சகலரதும் பொறுப்பாகும்.

இராணுவத்தினர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசியல்வாதிகளின் கைப்பொம்மைகளாக செயற்படக்கூடாது என்பதுடன், அரசியல்வாதிகள் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளவோ அதிகாரத்தை பெற்றுள்ள அரசைக் கவிழ்ப்பதற்கோ அல்லது அரசியல் கட்சிகளை ஒன்றிணைக்கவோ இராணுவத்தி னரை உபயோகிக்கக்கூடாது.

மிலேச்சத்தனமான தீவிரவாத போர் தோற்கடிக்கப்பட்டுள்ள போதிலும் அந்த எண்ணங்கள் இன்னும் முற்றாக இல்லாதொழிக்கப்படவில்லை என்பதுடன், நாட்டிற்கு வெளியே இன்றும் தனியான ஈழ நாடு பற்றிய கனவினைக் கொண்டுள்ள இனவாதிகள் காணப்படுவதுடன் அவர்களது அந்த கனவு நிறைவேற ஒருபோதும் நான் இடமளிக்கப் போவதில்லை.

கடந்த மூன்றரை வருட காலத்திலுள் அரசு எமது நட்பு நாடுகளின் ஒத்துழைப்புடன் நாட்டைப் பிளவுபடுத்தும் எண்ணங்களை தோற்கடிப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டதுடன், தொடர்ந்தும் அவ்வாறே செயற்படும் என்றார். (ம)

# கனரக வாகன போக்குவரத்துக் கட்டணம் இன்று முதல் 15 வீதம் அதிகரிப்பு

(கொழும்பு)

நூற்றுக்கு 15 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ள கனரக வாகன போக்குவரத்துக் கட்டணம் இன்று முதல் அமுலுக்கு வரவுள்ளது.

எரிபொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் கனரக வாகனங்களின் உதிரிப்பாகங்களின் விலை அதிகரிப்புக்கு மத்தியில் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டதாக அனைத்து இலங்கை கனரக போக்குவரத்து வாகன உரிமையாளர்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதேநேரம், போக்குவரத்து கட்டணங்களை அதிகரிப்பதற்காக எதிர்வரும் 22ஆம் திகதி அதிகாரிகளிடமிருந்து அனுமதி கிடைக்காவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட உள்ளதாக இலங்கை கனிய எண்ணெய் தனியார் கொள்கலன் வாகன தாங்கி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (ம)

# பிரபாகரன் தென்னிலங்கைக்கு எதிராக செயற்படவில்லை

## விஜயதாச தெரிவிப்பு

(வவுனியா)

கடந்த காலங்களில் பிரபாகரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட கிளர்ச்சிகள் தென்னிலங்கையில் இருந்தவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட கிளர்ச்சிகள் அல்ல என உயர் கல்வி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பிரபாகரனால் முன்னெடுக்கப்பட்ட கிளர்ச்சியானது வடபுலத்தில் இருந்த பொருளாதார ஏற்றத்தாழ்வின் காரணமாக பொருளாதாரத்தை பெருவாரியாக சுவீகரித்து கொண்ட ஒரு தரப்பினருக்கும் அல்லது அரசியல் தலைமையினருக்கும் சாதாரண மக்களிற்கும் இடையில் ஏற்பட்ட இடைவெளி அல்லது பாரபட்சத்தை நீக்குவதற்காக உருவாக்கப்பட்டதாகவே நான் கருதுகிறேன் என தெரிவித்தார்.

வடக்கில் கிளர்ச்சிகள் ஒரு இனவாத கிளர்ச்சியாக தோற்றம் பெற காரணம், அப்போது அரசியல் தலைமை வகித்த அமிர்தலிங்கத்தின் கருத்துக்களை ஒட்டியே அவை ஒரு இன ரீதியான பிரச்சினையாக உருவெடுத்ததாக அவர் கூறினார்.

இந்த விடயங்கள் தொடர்பாக பார்க்கின்ற போது, அப்போது இருந்த அரசியல் தலைவர்கள் தங்களது சமூகத்திற்கு பொறுப்பு கூறுவதோடு அவர்களின் சுபீட்சத்திற்கு வழி சமைப்பதை விடுத்து பயங்கரவாத தலைவரான பிரபாகரனிடம் இதன் தலையெழுத்தை மாற்றுவதற்கான பொறுப்பை வழங்கியிருந்ததன் ஊடாக கடந்த 30 வருட காலமாக நாங்கள் பெருவாரியான இழப்புக்களை சந்திக்க நேர்ந்தது.

அமிர்தலிங்கத்தின் ஆசீர்வாதத்தோடு துப்பாக்கியை கையில் எடுத்த பிரபாகரன் பேராபத்து மிக்க தலைமைத்துவத்தின் ஊடாக வடக்கு கிழக்கில் இருந்த பல அரசியல்வாதிகளினுடைய உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருந்தது.

இதன் காரணமாக கடந்த 30 வருட காலத்திற்கு மேலாக பல அழிவுகளை நாம் சந்தித்திருந்தோம் என அவர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கலாசார மத்திய நிலையம் திறப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் வரணி சுட்டிபுரம் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட தென்மராட்சி கலாசார மத்திய நிலையம் இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப 2.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ பிரதம விருந்தினராக கலந்துகொண்டு கலாசார மத்திய நிலைய கட்டிடத்தை திறந்து வைக்கவுள்ளார். இந்நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன், இராஜாங்க அமைச்சர்களான மொஹான் லால் கிரேரு மற்றும் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இ.அங்கஜன், மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-09.89.60)

## இராணுவத்திடம் ஒப்படைக்க...

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை முன்னிட்டு அவர் விடுத்திருந்த செய்தியில், இலங்கையின் சிவில் யுத்த த்தின் இறுதியில் கொல்லப்பட்ட அப்பாவி மக்களை பிரிததானியாவிலும் உலகின் ஏனைய பகுதிகளிலும் செறிந்துவாழும் தமிழர்கள் நினைவுகூர்ந்துள்ளனர் எனக் குறிப்பிட்டார்.

இலங்கையில் இடம்பெற்ற போரின் இறுதிக் காலப் பகுதியில் பல்லாயிரக்கணக்கான மக்கள், இலங்கை அரச படையினரால் கொலை செய்யப்பட்டதாக தமிழர்களுக்கான அனைத்து கட்சி நாடாளுமன்றக் குழுவின் உறுப்பினரான ஷக் கோல்ட்ஸ்மித் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் போரில் உயிர்தப்பியவர்களின் கருத்துக்களை நாம் கேட்க வேண்டும் எனவும் குறிப்பாக தாய், தந்தையர், சகோதரர்கள், சகோதரிகள், என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் கருத்துக்களுக்கு செவிசாய்க்க வேண்டும் அவர் கூறியுள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் முடிவில், சிறிது காலம் சிறையில் வைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்படுவார்கள் என்ற எதிர்பார்ப்பில் பலர் இலங்கை இராணுவத்திடம் தமது உறவுகளைக் கையளித்திருந்தார்கள் என வும் ஷக் கோல்ட்ஸ்மித் குறிப்பிட்டார்.

அந்த தருணமே அவர்கள் இறுதியாக தமது உறவுகளைப் பார்த்திருந்தனர் எனவும் ஒன்பது ஆண்டுகள் கடந்தும் கூட இலங்கை இராணுவம் அவர்களுக்கு என்ன நடந்து என்ற பதிலை வழங்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை அரசாங்கம், தமது பிள்ளைகளை விடுவிக்க வேண்டும் என கோரி, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளில் போராடும் மக்களுக்கு ஆதரவை வழங்குவதாகவும் தமிழர்களுக்கான அனைத்து கட்சி நாடாளுமன்றக் குழுவின் உறுப்பினரான ஷக் கோல்ட்ஸ்மித் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## அரச பிரதிநிதியுடன்...

நேற்றுமுன்தினம் இடம்பெற்றதாக ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பணிமனை தமது டுவிட்டர் தளத்தில் தெரிவித்துள்ளது.

இதன்போது இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், நல்லிணக்கம், பாதுகாப்பு, மனித உரிமைகளை ஊக்குவித்தல், சட்டத்தின் ஆட்சி என்பனவற்றுடன், பிராந்திய அபிவிருத்தி குறித்தும் கலந்துரையாடப்படடுள்ளதாக டுவிட்டர் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் முடிவுக்கு வந்த 9 ஆவது ஆண்டு நிறைவில் இந்தச் சந்திப்பு நடந்துள்ளது. போரில் இடம்பெற்ற மீறல்களை விசாரிக்கும் நம்பகமான கலப்பு விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் என்று ஐ.நா மனித உரிமை ஆணையாளர் வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (ம)

## நினைவேந்தலுக்கு...

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கட்சி பேதமின்றி, பிரதேச பேதமின்றி எங்கள் மக்கள் சகலரையும் உள்ளணைத்து மிகக் குறுகிய காலத்தினுள் இந்த வருட முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒழுங்கு செய்து நடத்தியமை எல்லோரதும் பாராட்டுக்களைப் பெற்றுள்ளது.

சில சில குறைபாடுகள் எமக்குத் தெரியப்படுத்தப்பட்டன. எனினும் நிகழ்வின் தார்ப்பர்யம் உணர்ந்தும் எமது மக்கள் பிரதிநிதிகளினதும் மற்றோரினதும் பொறுமை முதிர்ச்சி ஆகியன நிமித்தமும் அவற்றைப் பொருட்படுத்தாமை எமக்கு மகிழ்வைத்தருகின்றது.

குறுகிய கால ஒழுங்கமைப்பில் இந்த நிகழ்வைச் சிறப்புறச் செய்ய உதவிய சகலருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## விமான விபத்தில்...

தில் 110 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த விமானத்தில் 104 பயணிகளும் ஆறு விமான ஊழியர்களும் இருந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதில் ஐந்து பயணிகள் வெளிநாட்டவர் எனவும் சர்வதேச செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

கியூபாவில் ஹவானா விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட அரச விமான நிறுவனமான ஏர்லைன் கியூபானாவின் விமானமே இவ்வாறு விபத்திற்குள்ளாகியுள்ளது.

கியூபாவின் ஹவானாவில் இருந்து விமானம் புறப்பட்டு சில நிமிடங்களில் அருகில் உள்ள நகரில் விழுந்து நொருங்கியுள்ளதாகவும் செய்திகள் மேலும் கூறியுள்ளன. (ம)

## பிபிசி சர்வதேச ஊட...

மொழி வெளியிடப்படும். நேற்று முன்தினம் தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பொன்மொழி வெளியிடப்பட்டுள்ளது.

வரலாற்றை அறிந்துகொள்ளாதவர்களால் வரலாற்றைப் படைக்க முடியாது என்று தலைவர் வே.பிரபாகரன் கூறிய பொன்மொழியையே பிபிசி தமிழ் சேவை தனது உத்தியோகபூர்வ டுவீட்டரில் வெளியிட்டுள்ளது. (ம)

## சிகிச்...

போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

சுழிபுரம் தொல்புரம் மேற்கை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான மாரிமுத்து பாஸ்கரன் வயது (52). என்பவரே மேற்படி பரிதாபமாக உயிரிழந்தவராவர்.

இவர் கடந்த 14 ஆம் திகதி போத்தல் ஒன்றில் பெற்றோல் வாங்கி வந்து வீட்டில் வைத்துள்ளார். 15 ஆம் திகதி இரவு தேவை ஒன்றுக்காக தீக்குச்சியை பற்ற வைத்த பின்னர் அதை அணைக்காமல் கீழே வீசியுள்ளார். அப்போது தீக்குச்சி அவர் அருகில் இருந்த பெற்றோல் போத்தல் மீது பட்டு தீப்பற்றியுள்ளது.

போத்தலின் அருகே நின்றிருந்த குறித்த நபரும் தீப்பற்றி எரிந்துள்ளார். உறவினர்கள் உடனடியாக தீயை அணைத்து சங்கானை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் 5 நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்று காலை உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)


இயந்திரங்கள் விற்பனைக்கு
மரவேலை, அலுமினிய வேலை இயந்திரங்கள், இங்கிலாந்து ஜெனரேட்டர் 37kw விற்பனைக்கு.
தொடர்பு:- 077 8600093

விற்பனைக்கு
யா/மருத்துவ பீடச் சூழலில் கொக்குவில் பொற்பதி வீதிக்கு அருகில் 2 பரப்பு 4.6 குளியும் கொண்ட ஒரு வெற்றுக்காணி உடன் விற்பனைக்கு.
தொடர்புகளுக்கு
076 639 9277, 077 033 3713

விற்பனைக்கு
★ மீன்பிடி றோலருக்கான 30 அடி புதிய வள்ளம், யன்மார் 2 சிலிண்டர் (Full Recondition) எஞ்சினுடன் விற்பனைக்குண்டு.
வேம்படி வல்வெட்டித்துறை
தொடர்புகளுக்கு 077 357 3055

வீணை தேவை
பாவித்த, பழுதடைந்த வீணை விலைக்கு வாங்கப்படும்.
077 923 8376

தேவை
கொழும்பு → யாழ்ப்பாணம் ஓடும் லொறி ஒன்றிற்கு வாகன உதவியாளர் (Cleaner) தேவை.
வயதெல்லை (18-30)
தொடர்புகளுக்கு 076 376 0022, 076 690 8976

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK - 550 /-Kg
கனடா - 900 /-Kg
ஜேர்மனி - 700 /-Kg
நெதர்லாந்து - 700 /-Kg
DELIVERY IN 3-5 DAYS
மன்னிப்பாய் 0768226240
V2 TRAVELS
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

ஒடியல் கூழ்
அசைவம்

பார்சலில் மட்டும் பெற்றுக் கொள்ள முடியும்
ஞாயிறு மட்டும்
Lavan Cafe
லவன் கபே
411, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
071 104 1851

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
CNR World Wide Express
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062

அண்ணா பொதிகள் சேவை
976, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
லண்டன், ஜேர்மனி, கனடா மற்றும் சில நாடுகளுக்கு விலை குறைக்கப்பட்டுள்ளது
வெளிநாடு, உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
021 221 5656 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | வேலணை | ஊர்காவற்றுறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | வவுனியா | கனகராயன்குளம் | முல்லைத்தீவு

உடனடி வேலை வாய்ப்பு
முகாமையாளர்/நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
வயது :-35 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
சம்பளம் - முகாமையாளர் 25000/- நிர்வாக உத்தியோகத்தர் 15000/-
49A கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
0768226241

உடனடி வேலைவாய்ப்பு
நாடளாவிய ரீதியில் பிரபல்யம் அடைந்து வரும் எமது teleseen நிறுவனமானது வடக்கு, கிழக்கில் பல கிளைகளை ஆரம்பிக்க உள்ளதால் அதற்கான கீழ்வரும் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட உள்ளன.
Distributer | Supervisor | A.S.M | Manager
O/L, A/L படித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஏனையவர்களுக்கு பயிற்சி நெறி ஊடான வேலை வாய்ப்புக்கள் உண்டு.
தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு
076 656 4030, 077 062 1631

வேலைவாய்ப்பு
அரச அங்கிகாரம் பெற்ற GMI Company யின் மேலும் புதிய கிளைகளுக்கான பயிற்சியுடன் கூடிய பதவி வெற்றிடங்கள்.
✓ Back Officer ✓ Assistant managers
✓ Supervisors ✓ Training managers and Distributors
தகைமைகள்
★ O/L, A/L படித்த (18-30) வயதினருக்கு அனுமதி வழங்கப்படும்.
★ முன் அனுபவம் அவசியமில்லை.
★ தங்குமிட வசதி மற்றும் மருத்துவம் வழங்கப்படும்.
★ பயிற்சிக் காலத்தில் 16500/- - 25000/- வரையிலும் பின்னர் தொழில் நிரந்தரமாக்கப்படுவதுடன் 45000/- மேல் (EPF, ETF) அடிப்படையாக
நேர் முகத் தேர்வுக்கு CV, NIC, Birth Certificate (Copy) கொண்டுவரவும்.
தொடர்புகளுக்கு:- 077 999 4807

சங்கமம் வயலின் வாத்தியக் கலையகம் நடாத்தும்
SANGAMAM
சங்கமம் 2018


பிரதம விருந்தினர்
வயலின் வித்துவான் கலைமாமணி V.R கிருஷ்ணன்
06ஆம் ஆண்டு நிறைவு விழாவும் இசை நிகழ்வும்
இடம் : கைலாசபதி கலையரங்கு - யாழ். பல்கலைக்கழகம்
காலம் : 26.05.2018 சனிக்கிழமை மாலை 4.00 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை
• அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
• அருள்ஸ் நிறைவேற் லிமிட்டட் நிறுவனங்களின் இணை நிறுவனம்.
அருள்
சாவகச்சேரி இல. 01 NDB வங்கிக் கட்டடம், தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
நெல்லியடி இல. 01 பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
கிளிநொச்சி இல. 10, கரடிப்போக்கு, கிளிநொச்சி. (வாகன புகைப்பரிசோதனை நிலையம் அருகில்) 076 443 1576


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.05.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வாரமலா
# வலம்புரி
சங்குநாதம்
நாதம் 166
விலை : 30.00
வள்ளுவர் ஆண்டு 2049 20.05.2018 தொலைபேசி : 021 222 3378







# கண்ணீரில் நனைந்த மண்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

மீண்டும் வாத்தியார் எழுந்தார்.

போரில் உயிரிழந்த எங்கள் உறவுகளுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவம் என்று வாத்தியார் கூற அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

**விதானையார்:** முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உணர்வுபூர்வமாக நடந்தது. எங்கட முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஐயா ஆற்றிய உரை உண்மையிலேயே அனைவரது இதயங்களையும் தொட்டன.

**பண்டிதர்:** முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமாக நடப்பதற்கு எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் பங்கு மிகவும் காத்திரமானது.

**கங்காணி:** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் எங்கட பிள்ளையள். அவங்கள் நினைத்தால் எல்லாம் சிறப்பாக நடக்கும்.

கடந்த ஒருசில வருடங்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்கள் குழம்பியிருந்தாலும் இப்ப இருக்கிற பிள்ளையள் மிகத் தெளிவாக இருக்கிறாங்கள்.

**மூப்பர்:** அதெண்டால் உண்மைதான். வடக்கு மாகாண முதலமைச்சரை ஒரு அரசியல்வாதியாகப் பார்க்காமல், அவரைத் தமிழ் மக்களின்ர நம்பிக்கைக்குரியவராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் பார்த்திருக்கினம் எண்டால், யதார்த்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது என்றுதான் சொல்ல வேணும்.

**சாத்திரியார்:** முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஐயாவின்ர பக்கபலமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருந்ததைப் பார்த்து நான் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தன்.

**விதானையார்:** உண்மைதான். இதே கட்டமைப்பு குலையாமல் காப்பாற்றப்படுமாக இருந்தால், முதலமைச்சர் தன்ர உரையில கூறியது அப்படியே நடக்கும்.

**வாத்தியார்:** நான் இப்பவும் சொல்லுறது தமிழர்கள் அரசியலுக்கு அப்பால் ஒற்றுமைப்பட வேணும்.

அந்த ஒற்றுமை எங்களுக்கான உரிமையைப் பெறுவதை வலியுறுத்தும். ஆனால்...

**கங்காணி:** தமிழ் அரசியல்வாதிகளின்ர போக்கில நம்பிக்கையில்லாததாலதானே அரசியல்வாதிகளை முன்னிலைப் படுத்தாமல் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடக்க வேணும் எண்டு எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் வலியுறுத்தினவியள். உண்மையில அரசியல்வாதிகளையும் முன்னிலைப் படுத்தித்தான் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றிருக்க வேணும்.

ஆனால், தமிழ் அரசியல்வாதிகள் மீதான நம்பிக்கை முழுமையாக இழந்து போயிற்று. அதால அரசியல்வாதிகளை முன்னிலைப்படுத்தக்கூடாது என்று வலியுறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

**விதானையார்:** இந்த நிலைமையை தமிழ் அரசியல்வாதிகள் புரிந்து கொண்டால் நல்லது.

இருந்தும் அவர்கள் இதைப் புரிந்துகொள்ளுவினம் எண்டு நான் நம்பல்ல.

**கங்காணி:** ஏதோ எனக்கெண்டால் 2018 மே 18 நினைவேந்தல் நிகழ்வு தமிழ் மக்களுக்கான ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ளதெண்டுதான் சொல்லுவன்.

**மூப்பர்:** என்ன கங்காணியார் சொல்லுறியள்.

**கங்காணி:** வடக்கு மாகாண முதலமைச்சரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் ஒன்றுசேர்ந்து நிற்பது தமிழ் மக்களுக்கு நேர்மையான, நீதியான, சுயலாபங்கள் கடந்த ஒரு காத்திரமான தலைமைத்துவத்தை அங்கீகரித்தும் ஏற்றும் நிற்பதை சுட்டி நிற்கிறது.



## முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையில் புதிய பரிமாணம்

**பண்டிதர்:** எங்கட மக்கள் விட்ட கண்ணீருக்கு கடவுள் நிச்சயம் கண் திறப்பார்.

எங்கட தமிழ் மக்களுக்கு ஒரு நல்ல அரசியல் தலைமை உருவாகி, எங்கட பிரச்சினைகளை சர்வதேசத்திற்கு எடுத்துச் செல்லும் சூழ்நிலை உருவாகிற்று என்ற நம்பிக்கை என்னட்ட நிறைய இருக்குது.

**வாத்தியார்:** எதுவாக இருந்தாலும் ஒரு நேர்மையான அரசியல் தலைமை உருவாக நாங்கள் அனைவரும் மீண்டும் எழுந்து நின்று இறைவனை வேண்டுவம்.

இப்படி வாத்தியார் அறிவிக்க அனைவரும் எழுந்து நின்று கண்களை மூடி பத்து நிமிடங்கள் இறைவனை வேண்டி அமர்ந்தனர்.

**மூப்பர்:** அதுசரி, இரண்டு பெண் பிள்ளைகள் மோட்டார் சைக்கிளில வந்த போது விபத்துக்குள்ளானதாகவும் அவர்கள் இருவரும் மது பாவித்திருந்ததாகவும் ஒரு செய்தி கேள்விப்பட்டன்.

**சாத்திரியார்:** என்ர கதிர்காமக் கந்தா! யாழ்ப்பாணத்திலும் இப்படி ஒரு சம்பவமோ. கலிகாலம் எல்லாம் நடக்கும்.

**வாத்தியார்:** படிப்பு படிப்பு என்று ஓடித்திரியிறம். ஆனால் எங்கட பண்பாட்டையும் ஒழுக்கத்தையும் ஏன் எங்கட உடல் ஆரோக்கியத்தையும் நாங்கள் அறவே கைவிட்டிட்டம். அதுதான் இந்த நிலைமை.

**பண்டிதர்:** என்ன செய்யிறது. இரண்டு பெண் பிள்ளைகள் குடித்துப் போட்டு மோட்டார் சைக்கிள் ஓடி விபத்துக்குள்ளானது. இதுதான் முதலாவது சம்பவம் என்று நான் நினைக்கிறன்.

**வாத்தியார்:** என்னவோ கடவுளுக்குத் தான் வெளிச்சம். எதுவா இருந்தாலும் பிள்ளைகள் விடயத்தில பெற்றார் விழிப்பாகவும் கண்டிப்பாகவும் இருக்க வேணும்.

இந்தியாவில இசைத் துறையை இறைவனுக்கு அர்ச்சிக்கின்ற வழிபாட்டு முறையாகவே பின்பற்றுகின்றனர். இதனால் அவர்கள் இசைத் துறையில் இமயத்தை எட்டிவிட்டனர்.

ஆனால் எங்கட நாட்டில தெற்கிலும் சரி வடக்கிலும் சரி இசைக் கோஷ்டி என்றால் மதுப் போத்திலும் கூடவே இருக்கத்தான் செய்யுது. இது எண்டைக்கு இல்லாமல் போகுதோ அண்டைக்குத்தான் எங்களிட்டும் இசை வசமாகும்.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# இனப்படுகொலையே இடம்பெற்றது முள்ளிவாய்க்காலில் வெளிப்பட்டது

இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலையே என்பதை முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வு மீண்டுமொருமுறை வெளிப்படுத்தியது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இந்த நாளை சிங்கள அரசு போர் வெற்றி நாளாக அறிவித்து ஆடம்பரமாக விழா எடுத்துக் கொண்டாடியது.

அதேவேளை பச்சிளம் குழந்தைகள் முதல் பல்லாயிரக்கணக்கானவர்களை பறிகொடுத்த தமிழர்கள் இனப்படுகொலைக்கு நீதிகோரி கண்ணீர்விட்டுக் கதறியழுதனர்.

சொந்த நாட்டு மக்களையே கொத்துக்கொத்தாக கொன்றொழித்துவிட்டு அதை வெற்றிவிழாவாகக் கொண்டாடியதை தமிழ் மக்கள் ஏற்கவில்லை என்பதை 2015 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெளிப்படுத்தினர்.

ஆயுதப்போரில் வெற்றிபெற்ற மகிந்த அரசிற்கு தமிழ் மக்கள் தக்குந்த பாடம் புகட்டியதைத் தொடர்ந்து மைத்திரியிடம் ஆட்சி அதிகாரம் சென்றது.

போர் வெற்றிவிழாக் கொண்டாட்டங்கள் நிறுத்தப்பட்டன. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பேரெழுச்சி பெற்றது.

இந்நிலையில், இனி எக்காலத்திலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு எத்தனை அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் இவ்வாறுதான் நடக்கும் என்பதை நேற்று முன்தினம் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நடந்த நினைவேந்தலும் உலகிற்கு உணர்த்தியது.







இனப்படுகொலையை நிகழ்த்திய இலங்கை அரசு, சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு உடன்பட வேண்டும் என்பதையும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வலியுறுத்தியது.

இலட்சக்கணக்கான மக்களை ஈவு இரக்கமின்றி படுகொலை செய்துவிட்டு இறந்தவர்கள் அனைவரும் பயங்கரவாதிகள் என்று பொறுப்புக்கூறலிலிருந்து தப்பிக்க முற்பட்டவர்கள் தப்பிக்கவே முடியாது என்பதை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வெளிப்படுத்தியது.

மன்னிக்கவே முடியாத மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் மூலம் தமிழினத்தை நிர்மூலமாக்கி இனவழிப்பை அரங்கேற்றி அரச படையினர் மீது எத்தனையோ ஆதாரங்களுடன் குற்றச்சாட்டுக்களை முன்வைத்த போதும் ஆளும் அரசும் ஆண்ட அரசும் ஏற்றுக்கொள்ளவில்லை.

மாறாக படையினர் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை, சர்வதேச விசாரணைக்கு உடன்பட முடியாது, வெளிநாட்டு நீதிபதிகள் இலங்கைக்குள் நுழைய இடமளிக்க முடியாது என்று அரச தரப்பு தொடர்ந்து கூறிவருகின்றது.

இருப்பினும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நினைவேந்தலின் போது வெளியிட்ட பிரகடனத்தில் கூறியதைப் போன்று "தமிழினப் படுகொலைக்கு என்றோ ஒருநாள் நிச்சயம் நீதி கிடைக்கும். சர்வதேச சமூகம் தனது மனச்சாட்சிக் கண்களைத் திறக்கும்" என்ற எதிர்பார்ப்பில் ஒன்பதாவது ஆண்டிலும் தமது உறவுகளின் நினைவுகளை நெஞ்சில் நிறுத்தி ஒன்றுபட்ட தமிழினம் கண்ணீருடன் காத்திருக்கின்றது.

இனவிடுதலைக்காகப் போராடிய மக்கள் மீது இனப்படுகொலை நடத்தி அழித்தொழித்த இலங்கை சிங்கள அரசு, தமிழ் மக்களிடம் நல்லிணக்கம் என்று கூறிக்கொண்டு நெருங்க முற்படலாம். அதற்கு தமிழர்களில் சிலர் விலைபோகலாம், இசைந்தும் போகலாம். ஆனால், போரிலே தமது உறவுகளை கண்முன்னே பறிகொடுத்த உறவினர்களின் மன ரணங்கள் ஆறும் வரை அரசின் எதிர்பார்ப்பு நிறைவேறாது என்பது நிதர்சனம்.

தமிழினம் திட்டமிட்டு சிங்கள அரசால் தான் அழிக்கப்பட்டது என்பதை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், மாவீரர் நாள் என்பன நினைவுபடுத்திக்கொண்டிருக்கும். தீவிரவாதிகள் என்று கூறி, மாவீரர்களின் கல்லறைகளை அழிக்கலாம் . ஆனால், மக்கள் மனங்களில் நிறைந்திருக்கும் அவர்களின் நினைவுகளை அழிக்க முடியாது.

இதை இலங்கை அரசு உணர வேண்டும். அதேவேளை வடக்கு - கிழக்கில் தமிழர் தாயம் எங்கும் உறவுகளை இழந்த உறவினர்கள் கண்ணீர்விட்டுக் கொண்டிருக்கும் போது சிங்கள இனவாதிகள் வெற்றிக்கொண்டாட்டங்களில் ஈடுபடுவதும் அரசின் நல்லிணக்க முயற்சிகளை சிதைக்கிறது.

அரசிற்கும் தமிழ் அரசியல்வாதிகள் சிலருக்கும் இடையில் நல்லுறவு ஏற்படுவதையும் அதன் மூலம் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அதிகளவு நலன்பெறுவதாலும் தமிழ் மக்கள் சிறிதளவேனும் நன்மையடைவதாலும் நல்லிணக்கம் ஏற்படாது.

இனங்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடே தமிழின அழிப்புவரை சென்றது என்பதை இனியாவது அரசாங்கம் உணர வேண்டும்.

சிங்கள - தமிழ் மக்கள் இடையில் நீடித்து நிலைக்கக் கூடிய நல்லிணக்கத்தை உருவாக்க இதயசுத்தியுடன் செயற்பட முன்வர வேண்டும்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் நாங்கள் தான் என்று சொல்பவர்கள் எல்லோரையும் தமிழ் மக்கள் முழுமையாக தங்கள் பிரதிநிதிகளாக ஏற்கவில்லை.

அவர்களின் கொடும்பாவி களை வீதிகளில் போட்டு எரிக்கும் போது அவர்களுடன் அரச தரப்பினர் நல்லிணக்கம் என்றும் நல்லாட்சிக்கு வித்திட்டவர்கள் என்றும் பாராட்டுப்பத்திரம் வாசிப்பதால் பயனேதும் ஏற்படப்போவதில்லை.

எனவே, நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமானால் மக்கள் மனங்களை வெல்ல முற்படுங்கள்.

இலங்கையில் இடம்பெற்ற போரிலே தமிழ் மக்கள் அதிகளவில் படுகொலை செய்யப்பட்டனர் என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள்.

சிங்களவர்கள் தமிழ் மக்களின் கண்ணீரைக் கண்டு மகிழ்வது தவறு. இந்த உலகத்திற்கே அன்பைப் போதித்த புத்தபெருமானை அரச மதமாக அங்கீகரித்து எங்கு பார்த்தாலும் புத்தர் சிலைகளை வைத்துள்ள அரசிற்கும் அவரை வழிபடுவதாகக் காட்டிக்கொள்ளும் பெரும்பான்மையினத்தவர்களான எமக்கும் இழுக்கு என்பதை வெளிப்படுத்துங்கள்.

அதைவிடுத்து தமிழ் மக்கள் அழுதுகொண்டிருக்கும் போது போர் வெற்றிவிழாவைக் கொண்டாடுவது, தமிழ் மக்களின் இதயத்தில் நிறைந்திருக்கும் புலிகளின் நினைவுச் சின்னங்களை தீக்கிரையாக்குவதும் மீண்டுமோர் அழிவுக்கே வித்திடும்.

உயிரிழந்த உறவுகளை நினைத்து ஓரிடத்தில் ஒன்றுகூடி அழுவதை இனவாதம் என்றுகூறும் சிங்களப் பேரினவாதிகள் மற்றவர் துன்பத்தில் இன்பம் அனுபவிப்பவர்களை ஆதரிப்பதை ஏற்க முடியாது.

சிங்களவர்கள் போர் வெற்றிவிழா கொண்டாடுவதையே தமிழ் மக்கள் வெறுக்கின்றனர். ஆனால், போரிலே உயிரிழந்த சிங்களவர்களை நினைவுகூருவதை எதிர்க்கவில்லை.

அவ்வாறு எதிர்க்கும் அரசியல் பலமும் மனிதத்தன்மை யற்றவர்களும் தமிழினத்தில் இல்லை. தமிழர்கள் போரிலே பறிகொடுத்த தமது உறவுகளை நினைவுகூரவே முற்படுகின்றனர். இனப்படுகொலைக்கு நீதியையே கோரி நின்கின்றனர். இதை யாரும் தவறு என்று கூற முடியாது.

இது தவறு என்றால் அதைத் தொடர்ந்து செய்யத் தமிழர்கள் தயாராகவேயுள்ளனர். ஒன்பதாவது ஆண்டில் மட்டுமல்ல இன்னும் எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இனப்படுகொலைக்கு நீதிகோரி நிற்கும்!

எஸ். ஆர்.கரன்




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில்
உங்கள் ஆக்கங்கள்
இடம்பெற
வேண்டும் என்றால்
உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி
வையுங்கள்.

## தங்கமீன்



(13.05.2018 தொடர்ச்சி)

சிறுவர்கள் தங்கள் வீட்டின் முன்னறையில் இருந்த ஒரு கண்ணாடித் தொட்டியில் தங்க மீனைப் போட்ட னர். பாவம் மெர்சி தங்க மீன், கண்ணாடித் தொட்டியில் அகப்பட்டுக் கொண்டது.

மெர்சி மீனுக்கு ஏற்பட்ட நிலைமையைக் கண்டு காகம் வருந்தியது. அது குட்டைக் குத் திரும்பிச் சென்று மெர் சியைப் பற்றி மற்ற மீன்களி டமும் எலியிடமும் கூறியது. அதைக்கேட்ட மற்ற மீன்கள் காகத்திடம், "நண்பரே! எப்படியேனும் மெர்சியைக் காப்பாற்ற வேண்டும். அத ற்கு நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும்? என்று வேண்டின. எலியும் காகத் திற்கு உதவி செய்வதாகக் கூறியது.

அதன்படி மறுநாள் காக மும் எலியும் சிறுவர்களின் வீட்டை நோக்கிச் சென்றன. காகம் அருகிலிருந்த ஒரு மரத்தில் அமர்ந்து கொண் டது.

அவ்வீட்டின் கிணற்றடியில் ஒரு வாளியும் அதில் சிறிது நீரும் இருந்தது. அதைக் கண்ட எலியாரும் அறியா தபடி வீட்டிற்குள் சென்று ஒரு பழைய பிளாஸ்ரிக் குவளை ஒன்றைக் கவ்விக் கொண்டு வந்தது.

குவளையில் வாளியிலுள்ள நீரை எடுத்துக் கொண்டு கிணற்றடியில் காத்திருந் தது.


காகம் சற்றும் தாமதிக காமல், ஜன்னல் வழியாக வீட்டினுள் பறந்து சென்று, மீன் தொட்டியின் மீது அமர் ந்து மெர்சியிடம் தன் திட்டத் தைக் கூறி, மெர்சியை தன் வாயில் கவ்வியபடி பறந்து வந்து எலியின் கையிலிருந்த நீர் நிரம்பிய குவளையில் போட்டது.


யாரும் கவனிக்கும் முன் அந்த குவளையை வாயில் கவ்விக் கொண்ட காகம், நேராக குட்டைக்கு வந்து சேர்ந்தது. குவளையை குட் டைக்குள் காகம் சாய்க்க, மெர்சி மீன் அதிலிருந்து குட்டைக்குள் தாவியது. காகம் வந்து சேர்ந்த சிறிது நேரத்தில் எலியும் அங்கு வந்து சேர்ந்தது. உடனே மற்ற மீன்கள் மெர்சி யிடம், "பார்த்தாயா... நீ உன் அழகைக் குறித்து கர்வம் கொண்டிருந்தாய் அந்த அழகே உனக்கு சிறுவர்களிடமிரு ந்து ஆபத்தைக் கொண்டு வந்தது.

ஆனால், நம் நண்பர்களான காகமும், எலியும் அறுப்பாக இருக்கின்றனர் என்று அவர் களை வெறுத்தாய். ஆனால், இன்று அவர்கள் தான் உன் னைக் காப்பாற்றி யிருக்கின் றனர். இனியேனும் அழகை நினைத்து கர்வம் கொள்ளா மல் காகத்திடமும் எலியிட மும் நன்றியோடும் நட் போடும் நடந்து கொள்! என்று கூறின.

மெர்சி தங்க மீனும் தன் கர்வம் நீங்கி காகத்திடமும் எலியிடமும் நட்புக் கொள்ள ஆரம்பித்தது.

(முற்றும்)



## அன்பு நெறி வளர்ப்போம்



என்ன நடக்குது உலகிலே இங்கு
எங்குமே உண்மையைக் காணவில்லையே
புன்னகை மென்னகை போற்றிக் கொண்டே
பொய்யே புகுந்து திரியுது இங்கும் அங்கும்

தாலாட்டுப் பாடி தூங்க வைக்கும் நம் உறவுகள்
தப்புக்கு இடம் கொடுப்பது நம் வாழ்வியல்கள்
அதிகாரம் அகங்காரம் வேண்டாம் வாழ்வினிலே
போட்டி பொறாமையை ஒழித்திடுவோம்.

எல்லோரும் அண்ணன் தம்பியாக உலகில் வாழ்வோம்
கல்வியில் உயர்வு காண்போம்
கனிவு அன்பு நெறியை வளர்த்திடுவோம்
எல்லோரும் இணைந்திருப்போம் இந்த உலகினிலே
நல்லெண்ணத்தை விதைத்திடுவோம்.

ச.சிந்துஜா,
தரம்-11
யா/நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா
வித்தியாலயம்

கலக்கலா கலர் அடி!








அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள், இல.3.2 ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



**முள்ளிவாய்க்காலில் மீண்டும் வருவான் தலைவன் எனக் கதறிய தாய் பற்றி?**

**சர்வதேசம் சொன்னதை கேட்டிருந்தால் யுத்தத்தை வென்றிருக்க முடியா...**

**நடந்தது இனப்படுகொலைதான் என கூட்டமைப்பு ஏற்காதா?**

பரமேஸ் — வதிரி

**எங்கள் காணிகளை மீட்பதற்கு சர்வதேசம் தலையிட வேண்டுமா?**

குரங்கு அப்பம் பங்கிட்ட கதையாக பிய்த்து பிய்த்து தந்து கொண்டிருக்கிறார்கள். தரப்படுவது, தரப்பட வேண்டியது. எமது நிலம். அதைக்கூட இரந்து கேட்டு வாங்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

இனி தேர்தல் காலம் என்றதும் வரும் எமது தலைமை பிய்த்து பிய்த்து தந்த காணி எல்லாம் எமது செயற்பாட்டினால் தான் பிய்க்கப்பட்டது என்று பீத்துவார்கள்.

அட போங்கடா.

சஞ்சயன் — யாழ்ப்பாணம்

**ஆற்றல், ஆளுமை, திறமை என்றால் என்ன?**

அண்மையில் 25 வயது மதிக்கத்தக்க இளைஞனைச் சந்தித்தேன். என்ன வேலை செய்கிறீர்கள் என்றேன். மாக்கற்றிங் என்றான். வீடு வீடா பொருட்கள் விற்கும் வேலையா? என்று கேட்டேன். ஆம் மாக்கற்றிங் என்றான்.

படித்தது O/L இரண்டு. வருடத்துக்கு முன்பு அந்த வேலையில் இணைந்து கொண்டேன். மூன்று சப்பாத்துக்கள் தேயும் வரை நடந்து நடந்து உழைத்தேன். என் உழைப்பிற்கு பலன் கிடைத்தது, பதவி உயர்வு வந்தது, இப்போது நான் 10 பேருக்குப் பொறுப்பான முகாமையாளர்.

நல்ல சம்பளம், வெளிநாட்டுக்குச் சுற்றுலா என வாழ்க்கை நன்றாகப் போகிறது என்று சிரித்தான். தம்பி கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்தி எவன் மேலே வருகிறானோ அவனிடம் ஆளுமை, ஆற்றல், திறமை என மூன்றையும் பார்க்கலாம்.

தனு — அச்சுவேலி

**காதலன் சொல் கேட்காமல் திரியும் காதலி பற்றி?**

காதலி என்றால் கட்டாயம் காதலன் சொல்லக் கேட்டுத்தான் ஆக வேண்டுமா? ஏன் அந்தப் பெண்ணுக்கு சுய சிந்தனை இல்லையா? ஒரு விடயம் அதை எது சரி, பிழை என்பதை தீர்மானிக்கும் ஆற்றல் இல்லையா? பெண் என்றால் சரியோ பிழையோ ஆண் சொல்வதைக் கேட்க வேண்டும் என்ற குறுகிய மனப்பான்மையில் இருந்து வெளியில் வாருங்கள். பிளீஸ்.

சுதன் — குப்பிளான்

**நடந்தது இனப்படுகொலைதான் என கூட்டமைப்பு ஏற்காதா?**

தேர்தல் காலங்களில் ஏற்கப்படும். மற்றைய காலங்களில் வாய் மூடப்படும்.

தயாளன் — மயிலங்காடு

**நல்லாட்சியின் பலாபலன் எரிபொருள் விலையேற்றத்தில் தெரிகிறதே?**

ஆட்சிகள் மாறும். காட்சிகள் மாறாது. இது ஆரம்பம்தான். இன்னும் இருக்கிறது தம்பி. நல்லாட்சி நல்லாட்சி என்று அதன் காலைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் எம் தமிழ்த் தலைமைகள் இது பற்றி இம்மியும் சிந்திக்காமல் இருப்பது வேதனையின் உச்சம்.






சயன் — யாழ்ப்பாணம்

**முள்ளிவாய்க்காலில் மீண்டும் வருவான் தலைவன் என கதறிய தாய் பற்றி?**

கதறிய தாய் வீட்டுத்திட்டத்திற்காய் தான் பட்ட கடன் சொல்ல தமிழ்ப் பற்றாளன் ஒருவன் "எவ்வளவனை கடன் உனக்கு" என்று கேட்கிறான். பதினையாயிரம் என பதில் வர உடனடியாக இந்தானை இருபதாயிரம் இருக்கு கடனைக் குடு. கவலைப் படாதே என்று அந்தக் தாயை முத்தமிட்டுச் சென்ற அந்த தமிழ் பற்றாளனை நினைக்கும் போது நெஞ்சம் விம்மி அழுகிறது. இப்படிப்பட்ட இனத்துக்கு ஏன் இவ்வளவு பாடுகள் என்று தான் இன்னும் புரியவில்லை.

அருட்கதிர் — துன்னாலை

**சர்வதேசம் சொன்னதை கேட்டிருந்தால் யுத்தத்தை வென்றிருக்க முடியாதென்கிறாரே தளபதி?**

கொத்துக் கொத்தாக மக்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு சிறிய இடத்தில் இரண்டு அமைப்புக்களிடையே போர் நடக்கிறது. அதற்குள் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் மாட்டியிருக்கிறார்கள். எல்லாம் தெரிந்தும் எம் இனத்தின் தலைகளில் குண்டுகளைக் கொட்டித் தீர்த்து விட்டு அழித்து விட்டோம். பயங்கரவாதத்தை அழித்து விட்டோம் என்று சொல்லிப் பயனேதும் வரப்போவதில்லை.

அபி — கோண்டாவில்

**முள்ளிவாய்க்கால் சென்றீர்களா வியாசரே?**

செங்குருதி கலந்த முள்ளிவாய்க்கால் கரையோரம் நடந்தேன். கால் தொட்ட அலைகள் எம் இனத்திற்கு நீதி வேண்டும் என்று அடித்துச் சொல்லிக் கொண்டிருந்தது.

கடலன்னைக்கு மட்டும் வாய் இருந்தால் நடந்தவை அனைத்தையும் சொல்லி முடித்திருப்பாள். என்ன செய்ய பாவப்பட்ட இனத்திற்கு நீதி கூட மறுக்கப்படுகிறது.

இனத்திற்கான போராட்டம் முடக்கப்பட்டு விட கையாளாகாத்தனத்தை எண்ணி ஏங்குவதை விட வேறென்ன செய்து விடமுடியும்.

ஒன்று மட்டும் உண்மை. இறுதியுத்த மீறல்களுக்கு நீதி கிடைக்கும் வரை இந்தக் குமுறல் நின்று விடாது.

அருள் — கோண்டாவில்

**ஜோக் ஒன்று சொல்லுங்கள் வியாசரே?**

சமூக வலைத்தளத்தில் படித்து சிரித்த விடயம் ஒன்று. முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைத் தடுத்தால் அரசு பாரிய விளைவைச் சந்திக்கும் – மாவை தெரிவிப்பு.

"யாருடா இந்த விளையாட்டுச் செய்தியைப் போட்டது?"

சரன் — யாழ்ப்பாணம்

**காதலித்து திருமணம் செய்தேன். வாழ்க்கை கசக்கிறது என்ன செய்யலாம்?**

தம்பி சரன் சமைக்க முன்பே சாப்பிட்டு விட்டால் சமைத்த பிறகு சாப்பிட எப்படி மனசு வரும். வாழ்வும் அதுபோலத் தான். அது அதை அந்தந்த நேரத்தில் செய்ய வேண்டும். விதை போட முன் மண்ணை மூடி ஒழுங்காக தண்ணீர் ஊற்றி என்ன பயன் வந்துவிடப் போகிறது.

தனு — அல்வாய்

**காதலித்தால் நிலவு சுடும். வெயில் குளிரும் என்கிறார்களே உண்மையா?**

தம்பி காதல் வந்தால் மனசுக்குள்ள பட்டாம் பூச்சி ஒன்று சிறகடித்துப் பறக்கும். அதை மெல்லமாய் பிடிச்சு செருப்பாலை அடிச்சு சாக்காட்டி விட்டா, இந்த நில சுடுகிற, சூரியன் குளிர்ர வருத்தங்கள் வராதுடா.

சிவா — மானிப்பாய்

**பெண்களும் தொடங்கி விட்டார்கள்?**

வேலை செய்த அலுப்புக்கு நீங்கள் குடிக்கலாமென்றால், வேலைகள் செய்யும் நாங்கள் குடிக்கக் கூடாதோ?

## அழிக்கப்பட்டது எம்மினம்

சாலையில் மிதிபட்டுக் கிடக்கும் பூக்களாய்
எம் இனம் வறண்ட பூமியில்
குண்டு பட்டுக்கிடந்ததை மறக்க முடியுமா?

இருண்ட வானத்துக்கும்
இரத்த பூமிக்கும் இடையில்
எம் உறவுகள் பிணங்களாய் மிதிபட்டதை
யார் மறப்பீர்?

அய்யோ என் பிள்ளை
அய்யோ என் அப்பா அம்மா என்ற
அழுகுரல் சத்தம்
தாய் மரணம் அடைந்ததை அறியாத குழந்தை
தாயின் மார்பில் பால் குடிக்க
முற்பட்டதை யார் கண்டீர்?

கொடியவர்கள் பின்னால்
கொடி பிடித்துத் திரியும்
ஏமாளிக் கூட்டமே சிந்தித்து பார்த்தீர்களா
எம்மினம் அழிகிறதென்று

கோமாளி நடிகர் போல்
அழுது திரியும் கூட்டமே
அலைய விடாதீர்கள் எம் இனத்தவர்களை

ஊமை நடனமாடுபவர்களே
வழுக்கி விழும்போது யாரும்
இருக்க மாட்டோம்
ஏனெனில் அழிக்கப்பட்டதும்
அழிக்கப்படுவதும் எங்கள் இனம்
மறந்துவிடாதீர்கள்!

எஸ்.ஏ.கோகுலன்
கோப்பாய்.





# கவிதைக் கலசம்

## மே- 18

ஆறாத ரணங்கள்...
ஆள்கின்ற இனத்திற்கு
எதைத் தந்து தீர்ப்பாய் இறைவா?
பலர் காணாத காட்சி
நாம் கண்ட காட்சி
விழிமூடாமல்- ஆட்சி
செய்கின்ற கொடுமை எமக்காச்சே
இன்று உயிர் இல்லா உறவு
உறவாடிய பொழுது
நிழல் ஆடுது நெஞ்சில்- என்ற
நிலை தந்தாய் இறைவா- உன்
நிலைதான் சொல்லு...
நல்லாட்சி என்று
நடக்கின்றதென்று
நம்பித் தொடர்ந்தோம் இன்று
நதியாகும் கண்ணீர்
கடல் சேரும் வரையில்
கரைசேரும் எப்போ?
இறைவா?- உன் கருணை
கடல்தான் எங்கே சொல்லு
கதிர் ஆடிய வயலும்
களைப்பாறிய மடியும்
உழைப்பாறிய படியும்
நெருப்பாறி மடிந்தும்
வெறுப்பாறா நினைவில் திகிலாடும்
அழு அலையாடிய வேளை- இரத்த
மழையான சாலை
எமை மீட்கா எம் தேசமே!
உன் நிலைதான் சொல்லு
கறுப்பாடை அணிந்து
இளைப்பாறிய உயிருக்கு
அஞ்சலி செலுத்திட-
எழுந்தது மே பதினெட்டு

ஸ்ரீயோகா
மண்டைதீவு

## முள்ளிவாய்க்கால் மண்ணிலே...

கொத்துக் கொத்தாய் பிணக்குவியல்
கொலை நடுங்கும் அழுகைக் குரல்
கொட்டுகின்ற குண்டுமழை
கொற்றமற்ற கரும்புலிகள்
சிதறிக் கிடக்கும் பிஞ்சுடல்கள்
சித்தம் இன்றிப் போனதென்ன...

சுற்றுகின்ற பூமி அது
தடம்மாறி சுழன்றது போல்
கட்டிவைத்த கனவு எல்லாம்
கண்முன்னே உடைந்தனவே!

தமிழீழம் பெற்றெடுத்த
தங்கமகன் எத்தனை பேர்
தமிழனுக்காய் குரல் கொடுத்து
கல்லறையில் உறங்குகின்றார்

தாய்மடியில் உடல் சரிய
ஈழமண்ணில் உதிரம் சொரிய
தமிழினத்தின் விடுதலைக்காய்
தன்னுயிரை மாய்த்தனரோ...

நவ வருஷம் ஆகியும் நடந்ததெல்லாம் மறந்திடுமோ
தமிழினப் படுகொலைக்கு யார்தான் விடை தருவார்?

ரி.பிரிந்தன்



## ஐயகோ...!

முற்றுப்பெறாத முடிவுகளுடன்
தட்டுத்தடுமாறுகிறது ஒரு இனம்
திட்டம் போட்டு அழிக்கப்பட்ட
இனமொன்றின் விதைகள்
முற்றமெங்கும் முளைத்து
விருட்சமாக முயல்கிறது

இச்சை தீர்க்க எம் இனத்தை.
பச்சை பச்சையாய் படம் எடுத்து
கொச்சை படுத்தினீரே
மிச்சமிருந்த தமிழனை
முள் கம்பி வேலிக்குள் அடைத்து
எச்சமில்லாதொழிக்க நினைத்தீரே

கட்டியிருந்த கச்சை அவிழ்த்து
எம் பண்பாட்டுப் பொக்கிசங்களில்
இச்சை தீர்த்த மிருகங்களிடம்
காறி உமிழாமல் என் செய்ய

ஐயகோ வானகமே!
இருள் சூழ்ந்த மேகங்கள்
உன் கண்களை மறைத்தனவோ?
ஐயகோ காற்றதுவே
கந்தகப் புகை- உன்
கண்களை மறைத்ததுவோ?

சரித்திரம் படைத்த இனமொன்று
சாட்சிகளுக்காய் ஏங்குகிறது
ஒற்றர் கூட்டம் ஏணியாய் இருக்கிறது
எதிரிகள் ஏறிச் செல்ல...

மாவை. நா.கஜேந்திரன்



## மே- 18

கொத்துக் குண்டுகளால்
குதறியது உலோகப் பறவை
சத்தியபத்தைக் கரைத்ததுள்
சாராம்சமோ மே 18

எத்திப் பிழைப்பும்
சத்தியம் புதைக்கும்
சாக்காடும் நித்தம்
நீதி விழுங்கும் நாள் மே 18

போர் முடிந்தும் அவலம்
புற்றீசலாகக் கிளம்பும்- உலகம்
பார்த்திருக்கப் படுகொலையின்
பட்டறையோ மே 18

இரக்கமிலார்க்கு ஓது
இதயம் இரும்பாகி
அரக்கத்தனா இனா
அழிப்பின் தொகுதியோ மே 18

போர் முடிந்ததாக
மண்ணை முத்தமிட்டார்
யார்க்குரைப்பரோ நீதி
மே 18 ஓதுந் தேறார்

வை.க. நவமணிதாசன்
கொக்குவில்

## நினைவேந்தல் நாள்

தமிழினப் பெரும் அழிவிற்கு
உண்மை நீதி பெற்றிடவாய்
உருக்கமுடன் நெஞ்சங்களெல்லாம்
உணர்வின் பேரெழுச்சியாய்
முள்ளிவாய்க்கால் நினைவேந்தலாய்
மே 18 நாள் நினைவு கூரிடுமே

தங்கத்தமிழன்
காரைநகர்

# மௌனத்தின் தேடல்- 399

## மே- 18

பாசமாய் வாழ்ந்த கிளிக்கூட்டம்
தீயிலே சிறகடித்து
எரிந்து போன- நாள்
முளைத்த வித்துக்கள்
மண்ணில் மீண்டும்
புதைந்த நாள்
முளைவிட்ட வித்துக்கள்
மண்ணுக்குள்ளே
கருகிப் போன நாள்
மறக்க முடியுமா? இந்நாளை
காப்பாள் கண்ணகி தாயென
வற்றாப்பளை நாயகியிடம்
ஓடிச்சென்ற பக்தர்கள்
அத்தாய் முன்னே கையின்றி
காலின்றி துடிதுடித்து
மண்ணுக்குள் மடிந்தநாள்
இன்னும் எத்தனையோ உறவுகள்
சிறையில் வாடுகிறார்கள்
கொடும் யுத்தம் ஒன்றுவந்தது
கொன்று தின்றது உயிர்களை
கொழுகொம்பற்ற கொடிகளாய்
எத்தனையோ பேர்களை
அநாதையாக்குவதற்கு
இன்னும் ஒரு மே 18 வேண்டாம்
எஞ்சியதாவது வாழட்டும்

அ.அகிலன்
கரவெட்டி தெற்கு

## இலவசம்

இந்நிலத்தில்
வாழும் உரிமை
பறிக்கப்பட்டு புதைந்திருக்க
ஆறடி நிலம் அனைவருக்கும்
இலவசம்

அந்திநிலா
கொக்குவில்

## அடையாளம்

தமிழ் எங்கள் அடையாளம்
தமிழருக்கு அடையாளம் வீரம்
வீரத்தின் அடையாளம்
பனம்காடாம் ஈழம்
ஈழத்தின் அடையாளங்கள்
அன்று பிறந்த மண்ணுக்காக
மடிந்து போன நாள்
கல்லறையில் மலர்ச்செண்டுடன்
இன்று அவர்களுக்கான
ஓர் அடையாள நாள்

ஆ.நிரூஷினி
யா/ சுண்டுக்குளி
மகளிர் கல்லூரி

## ஒருகணம் பார்

எம் இனம் வாழ
நிழல் தந்த விருட்சங்களே
சொந்த மண் காக்க
சாவுதனை தோளில்
சுமந்த உறவுகளே
வெஞ்சமராடி கல்லறையில்
துயில்கொள்ளும் உயிரே
செந்தணலாய்க் கொதிக்கின்றது
உனைச் சுமந்த வயிறு
கனத்த கண்கள்
கல்லறையை நனைக்கின்றதே
ஒரு கணம் எழுந்து பார்...


சந்நிதி
கதிர்ஷன்

## நீங்காத நினைவலைகள்

நீங்காத நினைவலைகள்
தமிழ் நெஞ்சங்களின் பேரலைகள்
தாங்காத இதயங்களின்
நலித்திடும் நினைவலைகள்
தாயகம் காத்து நின்ற
தமிழினத்தின் மீது
கொத்தாக வந்து வீழ்ந்த
கொத்துக்குண்டுகளுக்கிரையாகி
குவிந்து கிடந்த எம்குலக்கொழுந்துகளின்
நினைவுகள் கல்லறையாக
ஒன்பது ஆண்டுகள் என்ன
ஒரு நூறு யுகம் கடந்தாலும்
மாறாது நம் கவலை
என்றோ ஒருநாள் காலம்தான்
பதில் சொல்லும்
காவலர்களே உங்களுக்கு

சி.கஜா
முரசுமோட்டை

# மௌனத்தின் தேடல் -400



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல.3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 23.05.2018 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -



# விடியல்

காலைப்பொழுதின் அழகும் இனிமையும் புள்ளினங்களின் பூபாளத்தில் புதுப்பொலிவு பெற உறக்கத்திலிருந்து உற்சாகமாக உயிர் பெறத் தொடங்குகிறது உரும்பிராய் மண். சைக்கிளை மிதித்தபடி தனது ஊரின் இயற்கை அழகை இரசித்தவாறு சந்தியிலுள்ள சிற்றுண்டிச்சாலையை நோக்கி விரைகிறாள் உமா. மிதிவண்டியின் முன் கூடையிலும் பின்னே கரியரிலும் கட்டிவைக்கப்பட்ட வாளிகளில் சுடச்சுட இருந்த அரிசிமா இடியப்பம், தோசை, அவற்றுக்கான இடித்த சம்பல், பாற்சொதி, சாம்பார் என்பன மணம் பரப்பிக்கொண்டிருந்தன.

முருகன் கோயில் மணியோசை நேரம் விடிகாலை ஐந்தரை மணியென கட்டியம் கூறிக்கொண்டிருந்தது.

கடையின் வாசலில் தண்ணீர் தெளித்துக் கொண்டிருந்த செல்வியக்கா உமாவைக் கண்டதும் "வா உமா வா" என்று வரவேற்றபடி உமாவின் மிதிவண்டியை அவள் வாளிகளை இறக்குவதற்கேதுவாக பிடித்துக்கொண்டாள்.

வாளிகளைக் கடையினுள்ளே வைத்துவிட்டு முன்னைய தினம் கொடுத்த வாளிகளையும் சிற்றுண்டிகளுக்கான பணத்தையும் பெற்றுக் கொண்டு "அப்ப நான் வாறன் செல்வியக்கா" என்று புன்னகையுடன் விடைபெற்றவளை "உமா பொறு பொறு உனக்கு ஒரு கதை சொல்ல வேணும்." என்று கூறி நிறுத்தினாள் செல்வி. என்ன? என்பது போல நெற்றியைச் சுருக்கியவாறு தன்னை ஏறிட்ட உமாவிடம் "நேற்று இவர் சாமான் வாங்க ரவுனுக்குப் போனவர். அப்ப அங்கயிருக்கிற சாராய பாருக்கு முன்னால உன்ர தம்பி குமார் குடிவெறியில ரெண்டு பெடியளோட அடிபட்டுக் கொண்டு நிண்டவனாம். ஒரே சனமாம். கடையில ஆளில்லை எண்டபடியா இவர் அங்க நிக்காம வந்திட்டார். இரவு எனக்குச் சொல்லிச் சரியா கவலைப்பட்டவர்" என்றாள். உமாவுக்கு இந்த விடயம் வேதனையை அளித்தாலும் இது ஒன்றும் அவளுக்குப் புதியதல்லவே. "உம் சரியக்கா எல்லாம் எங்கட தலையெழுத்து நான் வாறன்" என்று பெருமூச்சுடன் புறப்பட்டாள்.

உமாவின் மிதிவண்டி வீடு நோக்கி நகர அவளது நினைவுச்சக்கரங்கள் பின்னோக்கி உருண்டன. உமா, குணம்-ராசாத்தி தம்பதிகளின் மூத்தமகள். குமார் அவளது தம்பி. தந்தையின் பெயரில் மட்டுமே குணம் இருந்தது. குடி, புகைத்தல், வெற்றிலை என அனைத்து கெட்ட பழக்கங்களையும் கைவசம் வைத்திருந்தார். போதாததற்கு ஊர்ச்சண்டைகள், வம்புகள் வழக்குகள் வேறு.

தாய் ராசாத்தி பதி மனம் கோணாப் பதிவிரதை. கணவன் செய்யும் பிழைகளைச் சுட்டிக் காட்டுவதும் தட்டிக் கேட்பதும் தவறு என்ற மனப்பாங்குடையவள். இதனாலேயே குணத்தின் அட்டகாசங்கள் நாளுக்குநாள் அதிகரித்து ஒரு கட்டத்தில் தான் செய்து வந்த காவலாளி வேலையும் கைவிட்டுப் போக முழு நேரக்குடிகாரனாகி விட்டான்.

காதிலுள்ள தோடு முதற் கொண்டு அனைத்தையும் கணவனுக்குக் கொடுத்து ஒட்டாண்டியாகிவிட்ட ராசாத்திக்கு சொத்தென எஞ்சியிருந்தது உமாவும் குமாரும்தான். தொழிலில்லாத கணவன். படிக்க வேண்டிய குழந்தைகள். பெரியளவில் இல்லா விட்டாலும் அவர்களுக்கு அடிப்படைக் கல்வியும் அன்றாட உணவுமாவது வழங்க வேண்டிய பொறுப்பு ராசாத்தியினுடையதானது. திருமணத்தின் பின்னர் பட்டினிக்கும் அடி உதைக்கும் பழக்கப் பட்டுப்போன ராசாத்திக்கு குழந்தைகளின் பசியைப் பொறுத்துக் கொள்ள முடிய வில்லை. அவர்களுக்காக வீடு வீடாக இடிக்க குத்தவும் எடுபிடி வேலைகளுக்கும் போனாள்.

பருவ காலங்களுக்கேற்ப நாற்று நடுதல், களை பிடுங்குதல், வெங்காயம் பிடுங்குதல், தோட்டவேலை என்பவற்றுக்கும் போனாள். வீட்டில் கோழி வளர்த்தாள். முட்டை விற்றாள். வளவிலிருந்த தென்னைகளின் தேங்காய்களைச் சேகரித்து விற்றாள். இவற்றின் மூலமான வருவாயைக் கொண்டு பிள்ளைகளின் பசியைப் போக்கினாள். கல்வி கற்க பாடசாலைக்கும் தனியார் கல்வி நிறுவனத்திற்கும் அனுப்பினாள்.

கணவனுக்கும் குடிக்கக் காசு கொடுத்தாள். ஆனால் அவள் கொடுக்கும் காசு போதாதபோது குணம் ராசாத்தியை அடித்துத் துன்புறுத்தி பணத்தை எடுத்துச் செல்வான். ஒருநாள் அவள் சேமித்த பணத்தை உண்டியலுடன் திருடிச் சென்று விட்டான். அவனது கொடுமையின் உச்சகட்டமாக பன்னிரெண்டு வயதாயிருந்த உமாவின் காதிலுள்ள தோட்டை அவள் அழஅழ கழற்றிச் சென்று விற்றுக் குடித்தான். அவனது எல்லாக் கொடுமைகளையும் பொறுத்து பிள்ளைகளுக்காக வாழப்பழகியிருந்தாள் ராசாத்தி.

உமா சற்றுப் பெரியவளானதும் அவளது உதவியுடன் கடைகளுக்குப் பலகாரம் செய்து கொடுத்தாள். அதிகரித்து வரும் குடும்பச் செலவுகளைச் சமாளிக்க நாள் முழுவதும் அடுப்பங்கரையிலேயே உழன்றாள். குணம் குடித்துவிட்டு வந்து கத்துவதும் அயலிலுள்ளவர்களுடன் சண்டை பிடிப்பதுமாக இருந்ததால் உமாவும் குமாரும் வீட்டில் படிக்க முடியாது திண்டாடினர். மேலும் தாயின் கஷ்டங்களைச் சகிக்க முடியாது உமா பத்தாம் வகுப்புடனும் குமார் எட்டாம் வகுப்புடனும் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்தனர். உமா தாய்க்கு உதவியாக சகல வேலைகளையும் செய்யப் பழகினாள்.

குமார் எடுபிடி வேலைகளுக்குக் கூலியாகச் சென்று வந்தான். இவ் வாறு சிறிது காலம் கழிய இவர்கள் வாழ்வில் மீண்டும் புயலுருவானது. இம்முறை அது குமார் வடிவில் வந்தது. வீட்டில் தந்தை குடித்து விட்டு மீதம் வைக்கும் குடிவகைகளையும் பீடி, சுருட்டு என்பவற்றையும் திருட்டுத்தனமாக பாவித்து வந்த குமார் ஒரு கட்டத்தில் வெளிப் படையாகவே அவற்றைச் செய்தான். தாயோ தமக்கையோ கேட்டால் மேசன் வேலை செய்வதால் உடம்பு அலுப்பிற்கு மருந்து மாதிரி பாவிப்பதாக கதை விட்டான். நாளடைவில் குடிபோதைக்கு அடிமையானவன் திடீரென ஒருநாள் வீட்டை விட்டே ஓடி விட்டான். பின்புதான் அவன் திருமணம் செய்து கொண்டதாக அறிந்து கொண்டனர் இவர்கள். இருபத்து மூன்று வயதில் உடன் பிறந்தவளை அதுவும் வயதில் மூத்தவளைப் பற்றிச் சிந்திக்காது மகன் திருமணம் செய்து கொண்டதும் தன்னைப் போலவே குடிகாரனாகி விட்டதும் குணத்தை மனதளவில் தடுமாற்றத்திற்குள்ளாக்கியது. இளமையில் போட்ட ஆட்டத்தினால் உடலும் நிலைமாறத் தொடங்கியது.

இன்று உமாவுக்கு முப்பத்தைந்து வயது. எல்லாத் துன்பங்களையும் அனுபவித்து மிகுந்த மனப்பக்குவத்திற்கு வந்துவிட்டாள். ராசாத்திக்கு வயதாகி விட்டதால் முழு வேலைகளையும் தானே கவனித்து வருகிறாள். அரசாங்கத்தின் உதவியில் பசுமாடுகள் பெற்று பராமரித்து வருகிறாள். பால் விற்கிறாள். கஷ்டப்பட்டு உழைத்துச் சிக்கனமாகச் சேமித்த பணம், சீட்டுப் போட்டுக் கிடைத்த பணம் என்பவற்றிலிருந்து தனக்கென சிறிது நகைகளும் சேர்த்திருக்கிறாள். பழைய வீடு என்பதால் அதில் சிறு திருத்தங்களை மேற்கொண்டு நேர்த்தியாக்கி விட்டிருக்கிறாள்.

வீடு வந்து சேர்ந்ததால் நினைவுகளிலிருந்து மீண்ட உமா படலையைத் தள்ளித் திறந்தபடி சைக்கிளை உருட்டிக் கொண்டு உள்ளே சென்றாள். தம்பி குமாரின் பத்து வயது மகள் அபி "அத்தை ரியூசன் காசு தாறனெண்டு சொன்னீங்கள். இண்டைக்கு கட்ட வேணும்" என்று கூறியபடி உமாவை நோக்கி ஓடி வந்தாள். அந்தக் குழந்தையைப் பார்க்க உமாவுக்குப் பாவமாக இருந்தது. சிறு வயதில் தனக்கேற்பட்ட அதே நிலைதான் இவளுக்கும்.

ஐந்தாம் வகுப்பிற் படிக்கும் மருமகள் அபியை புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார்படுத்துவதற்காக தனியார் கல்வி நிறுவனமொன்றில் உமாவே சேர்த்து விட்டிருந்தாள்.

முப்பத்தைந்து வயதாகியும் திருமணம் செய்து கொள்ளாது குடும்பத்திற்காகப் பாடுபடுகின்ற உமாவை மெச்சும் ஊரவர்கள் "அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கிறான்" என்று குமாரைத் திட்டுவதை அவள் காதுபடக் கேட்டிருக்கிறாள்.

"லொக்கு லொக்கு" என்ற குணத்தின் இருமல் சத்தம். தந்தைக்குக் காலை மருந்தைக் கொடுக்க வேண்டும் என உமாவுக்கு நினைவூட்டியது. குணத்தின் குடியைக் கெடுத்த அவனது குடி இப்போது அவனது உயிரையும் கொஞ்சம் கொஞ்சமாக குடித்துக் கொண்டிருந்தது.

"நேரம் ஆறே முக்காலாகுது அம்மா, நான் மாடுகளைக் கொண்டு போய் குளத்தடியில புல்மேய விட்டிட்டு வாறன்" என்றபடி மாடுகளை ஓட்டிக் கொண்டு உமா படலையடிக்கு வரவும் பக்கத்து வீட்டுப் பர்வதம் உள்ளே நுழையவும் சரியாக இருந்தது.

மகளையும் பேர்த்தியையும் வழியனுப்ப வெளியே வந்த ராசாத்தி "வா பர்வதம் வா" என்று வரவேற்றாள். "என்ன ராசாத்தியக்கா நான் நேற்றுக் கேட்ட விடயம் என்ன மாதிரி?" என்று உமாவைப் பார்த்து ராசாத்திக்கு ஜாடை காட்டினாள். "சரியான நேரத்திலதான் வந்திருக்கிறாய். நீயே கேள் பர்வதம். அவள் ஏதேதோ சாட்டுச் சொல்றாள்" என்று பர்வதத்தின் காதைக் கடித்தாள் ராசாத்தி. இவையொன்றையும் கவனிக்காதது போல புறப்படத் தயாரான உமாவிடம் "என்ன உமா அம்மா கேட்ட விசயம் என்ன மாதிரி?" என்று கேட்டாள் பர்வதம். "இதப்பாருங்கோ பர்வதம் அன்ரி எதிர்த்துப் பேசிறன் எண்டு தப்பாய் நினைக்காதையுங்கோ. நீங்கள் கொண்டு வந்த மாப்பிள்ளை சொத்துக்காரனாக இருக்கலாம். உழைப்பாளியாக இருக்கலாம். ஆனா குடிப்பழக்கம் உள்ளவன் எண்டு உங்களுக்கே தெரியும்.

இந்தக் குடியால எங்கட அம்மாவும் நாங்களும் ஏன் இந்தப் பச்சை மண் கூட பட்டுக் கொண்டிருக்கும் துன்பம் கொஞ்சநஞ்சமல்ல" என்று சற்றுத் தொலைவில் சென்று கொண்டிருந்த மருமகளைக் காட்டியவாறு கூறினாள் உமா. "என்ன பிள்ள இப்ப எந்த ஆம்பிள தான் குடிக்கிறேல? இப்பிடியே வேணாம் வேணாம் என்று விட்டா வயசெல்லே போகுது. இப்பவே முப்பத்தஞ்சாச்சு. பிறகு ஒருத்தரும் வரமாட்டாங்கள்" என்று கூறிய பர்வதத்திடம் "நல்லாச் சொல்லு பர்வதம் சொல்லுப் பேச்சுக் கேக்குதில்ல இந்தப் பிள்ள" என்று வருத்தப்பட்டாள் ராசாத்தி.

"அன்ரி அம்மாட்ட சொன்னதுதான் உங்களுக்கும். இந்தக் குடியால நாங்கள் பட்ட, பட்டுக்கொண்டிருக்கிற துன்பம் சொன்னால் உங்களுக்கு விளங்காது. பட்டுப்பார்த்தாத்தான் அந்த மரணவேதனை தெரியும். வயசு போகுது என்றதுக்காக குடிகாரனைக் கட்டித் திரும்பத் திரும்ப இந்த சாக்கடைக்குள்ள விழ நான் தயாரில்ல. வாழ்க்கையின்ர பாதிக்காலம்தான் துன்பத்தில போயிட்டுது.

மீதிக்காலமாவது நிம்மதியாப் போகட்டுமே. குடியில்லாத மாப்பிள்ளை கிடைச்சா சந்தோசம். இல்லாட்டியும் நான் இப்ப போல எப்பவும் மனநிம்மதியோட என்ர கடமைகளைச் செய்து கொண்டிருப்பன். தயவு செய்து இது சம்பந்தமா இனிக் கதைக்காதைங்கோ. நான் வாறன்." என்று படபடவெனப் பேசிவிட்டு மாடுகளை ஓட்டியபடி சென்றாள் உமா.

வாயடைத்துப்போய் அவள் போவதையே பார்த்தபடி நின்றனர் பர்வதமும் ராசாத்தியும். தூரத்தே வயல் வெளியில் விடியலுக்காக சூரியன் மேலெழுந்து கொண்டிருந்தான்.




வ.கற்கண்டு





# எரிமலைக்குள் இறங்கி கந்தகம் தேடும் சுரங்கத் தொழிலாளர்கள்

அந்தக் கிராமத்தின் பெரும்பாலான தொழிலாளர்களின் நாள் நள்ளிரவு 2 மணிக்கெல்லாம் தொடங்கி விடுகிறது. தொடர்ந்து 12 மணி நேரம் வேலைப் பார்த்தாலும் அவர்களுக்கான ஊதியம் வெறும் 10லிருந்து 12 டொலர்கள்தான். இந்தோனேஷியாவின் கிழக்கு ஜாவா பகுதியில் இருக்கும் அந்தக் கிராமம் மட்டுமல்ல, அதன் அருகில் இருக்கும் பல்வேறு கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இதே நிலைமைதான். உலகிலேயே மிகக் கடினமான வேலையைப் பார்க்கிறார்கள் இவர்கள் எனப் பலரும் சொல்கின்றனர். அத்தகைய கடினமான வேலை என்பது எரிமலைக்குள் இறங்கி கந்தகத் தாதுகளை (Sulphur Ore) வெட்டியெடுப்பது. எந்நேரத்திலும் வெடித்துச் சிதறலாம் எனும் நிலையில் புகைந்துகொண்டே இருக்கும் எரிமலையில் கந்தக தாதுகளை வெட்டியெடுப்பது இன்னும் பதைபதைக்க வைக்கிறது.

இந்தோனேஷியா நாட்டின் மூலையில் அமைந்துள்ள ஜாவா தீவின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது கவா இஜென் (Kawah Ijen) எரிமலை. இந்த எரிமலையைச் சுற்றியுள்ள பகுதிகளின் மக்களில் பெரும்பாலோர் எரிமலைக்குள் கந்தகத்தை வெட்டியெடுக்கும் வேலையைத்தான் செய்கின்றனர். தினமும் நள்ளிரவு இரண்டு மணிக்கே எரிமலையின் மீது ஏறத் தொடங்கி விடுகின்றனர் கந்தக சுரங்கத் தொழிலாளர்கள். ஏறக்குறைய 6500 அடி உயர எரிமலையில் ஏறி அதன் முகப்புப் பகுதியை அடைந்து கீழே இறங்குகிறார்கள். தற்போதைய நிலையில் கவா இஜென் எரிமலை வெடிக்காமல் உறங்கிக் கொண்டிருந்தாலும் எந்நேரத்திலும் வெடிக்கலாம் என அதிர்ச்சியளிக்கின்றனர் எரிமலை ஆய்வாளர்கள். நள்ளிரவு இரண்டு மணிக்கு எரிமலை ஏறத் தொடங்கும் தொழிலாளர்கள், உதவிக்கு ஒரு டோர்ச்லைட் மட்டுமே வைத்திருக்கின்றனர். விடிய விடிய பனிப்புகை வழியை ஆக்கிரமிக்க ஆரம்பித்துவிடும். அதுமட்டுமல்லாமல் காற்றில் கலந்திருக்கும் எரிமலைத் துகள்களும், கந்தக தீப்பொறிகளும், எரிமலையின் புகையும் மூச்சு விடுவதில் சிரமத்தை ஏற்படுத்துகின்றன. உயரத்துக்குச் செல்லச் செல்ல இதன் செறிவும் அதிகரிக்க ஆரம்பித்து விடும். இதனைச் சமாளிக்கக் கூட முகத்தில் ஒரு சிறிய முகமூடியினை மட்டுமே அணிகின்றனர். அதனைத் தவிர பாதுகாப்புக் கருவிகள் எதுவும் அவர்களிடம் இல்லை.

எரிமலையின் முகப்புப் பகுதியில் இறங்க இறங்கக் கந்தக கனிமத் தாதுவானது மழைப் போலக் கொட்டிக் கிடக்கிறது. தங்கத்தின் நிறத்தில் மின்னும் மஞ்சளில் உறைந்து கிடக்கின்றன. அதை உடைத்து நொறுக்கி பல பல துண்டுகளாக்கி தங்களது கூடைகளில் வைத்து கீழே இறங்குகின்றனர் சுரங்கத் தொழிலாளர்கள். சுரங்கம் என்று சொல்வதால் சுரங்கத்துக்கான பிம்பத்தை மனதில் கொண்டு வராதீர்கள். ஏனென்றால் இந்தக் கந்தக தாதுகள் எரிமலையின் முகப்புச் சரிவுகளில் பாறாங்கற்களைப் போலக் கொட்டிக் கிடக்கின்றன. அதை வெறுங்கையாலும் கிடைத்த இரும்புக் கம்பி, கட்டைகளால் பெயர்த்து எடுக்கின்றனர். இதை வெட்டியெடுக்கக் கூட ஒழுங்கான உபகரணங்களோ கையுறைகளோ அவர்களிடம் இல்லை. அதனை வழங்கவுமில்லை. இதனால் உடலில் பல்வேறு பாதிப்புகள் ஏற்படலாம் எனச் சொல்கின்றனர் ஆய்வாளர்கள். ஒருமுறை வெட்டியெடுக்கப்படும் கந்தகத் தாதுகளின் அளவானது சராசரியாக 175 பவுண்டுகள் வரை இருக்கும். அதை தங்களது தோள் கூடைகளில் ஏற்றிக்கொண்டு கீழே சென்று இறக்கிவிட்டு மீண்டும் மேலே ஏறுகின்றனர். இப்படி ஒரு நாளில் பலமுறை கீழேயும் மேலேயும் ஏறி உழைக்கின்றனர். ஒரு கிலோ கந்தக தாதுவுக்கு 8 சென்ட் மட்டுமே கூலி. ஒருநாளைக்குச் சராசரியாக 12 டொலர்கள் வரை கூலியாகப் பெறுகின்றனர். ஆனால் சீனாவுக்கும், உலகின் மற்ற நாடுகளுக்கும் இந்தோனேஷியாவிலிருந்து இந்தக் கந்தகம் பெரியளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்த எரிமலையின் முகப்புக்குள் ஒரு மிகப்பெரிய ஆசிட் ஏரி (Crater Lake) உள்ளது. இது நீல ஏரி எனவும் அழைக்கப்படுகிறது. இந்த ஏரியில் இருக்கும் ஆசிட்டின் PH மதிப்பு 0.5. அதாவது நமது கார் பேட்டரிகளில் இருக்கும் ஆசிட் போன்றது. மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தாவிட்டாலும் தொடர்ச்சியாக உடலின் மேல் படுவதால் பாதிப்புகள் நிகழும். இந்த ஏரிக்கு அருகில்தான் பெரும்பாலான கந்தகத் தாதுகள் இருக்கின்றன. மேலும், பகல் நேரங்களில் இந்தப் பகுதியின் வெப்பநிலை சாதாரண வெப்பநிலையை விட அதிகமாக இருக்கிறது.

இத்தகைய அபாயங்களைக் கொண்ட இஜென் எரிமலைச் சுரங்கமானது மிகப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமாகவும் இருந்து வருகிறது. எரிமலையின் முகப்புப் பகுதியில் கண்ணைக் கவரும் வகையில் தோன்றும் நீல நிற தீச்சுவாலைகள்தான் சுற்றுலாவுக்கான முக்கிய காரணம். இதற்காகவே தினமும் 100 சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகின்றனர். செல்ஃபிக்காக மட்டும் பலரும் இங்கு வருகிறார்கள். பலர் ஏழ்மையைச் சுற்றுலாவாக்குவது நியாயம் இல்லை என்கின்றனர். இருளில்தான் இந்த தீச்சுவாலைகளைப் பார்க்க முடியும் என்பதால் அதிகாலை 3 மணிக்கெல்லாம் சுற்றுலாப் பயணிகளும் எரிமலை ஏறுகின்றனர். பல சுரங்கத் தொழிலாளிகள் தங்களது வேலையை விட்டுவிட்டு சுற்றுலா வழிகாட்டியாக மாறி வருகின்றனர். கடந்த மார்ச் 22இல் எரிமலையிலிருந்து அதிகப்படியான செறிவில் தீப்பொறிகளும் எரிமலைத் துகள்களும் வெளியானதில் 30க்கும் மேற்பட்டோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதனால் தற்காலிகமாக சுரங்கத்தையும் சுற்றுலாவையும் நிறுத்தி வைத்தனர். மறுபடியும் ஏப்ரல் இரண்டாம் வாரத்திலேயே எரிமலை மீண்டும் திறக்கப்பட்டது!

ஏறக்குறைய 130 எரிமலைகள் வெடிக்கும் நிலையில் இருக்கும் நாடு இந்தோனேஷியா. எரிமலை வெடிப்பு என்பது சாதாரணமாக நிகழும் இந்தோனேஷியாவில் எரிமலைக்குள் இறங்கி வேலை செய்வதும் சாதாரணமாக இருக்கிறது. எரிமலை வெடிக்கிறதோ இல்லையோ அதனைத் தாண்டி வேலைப் பார்க்கும் தொழிலாளர்களுக்கு வேலையில் முறையான பாதுகாப்பு கூட இல்லை. கடந்த 40 வருடங்களில் 74 சுரங்கத் தொழிலாளர்கள் சல்பர் டை ஒக்ஸைடு, ஹைட்ரசன் சல்பைடு போன்றவற்றின் தாக்கத்தால் இறந்துள்ளனர். உலகின் எந்த மூலைக்குச் சென்றாலும் எளியவர்களின் வாழ்க்கை இப்படி ஆபத்து நிறைந்ததாகத்தான் இருக்கிறது. இதையெல்லாம் மாற்றாமல் எப்படி மனிதச் சமூகம் நாகரிகமடைந்ததாக சொல்லிக் கொள்ள முடியும்?

# இறந்த காலத்தை மறப்பதற்கான கருவி



அரசே, நீங்கள் சொல்வதெல்லாம்
உண்மை!
உங்கள் கட்டளைப்படி கைகளை
உயர்த்தியபடி
அம்மணமாக வெளியேறிய பாதை
செப்பனிடப்பட்டுவிட்டது!
துருத்தி நின்ற எலும்புகளை சதை
வளர்ந்து மூடிவிட்டது
பண்மேடுகளினுள்ளிருந்து "வா"
வெனக் கை அசைத்த
உடுப்புகளும் உக்கிப்போயின
துருப்பிடித்த நகரத்தால்
தொப்புள்கொடி அறுக்கப்பட்ட குழந்தை
ஒன்பது வயதுச் சிறுவனாகி
மீண்டும் பள்ளிக்கூடமாகிவிட்ட
அகதி முகாமில் படிக்கச் செல்கிறான்
'உலகின் மிக நீண்ட கழிப்பறை'யாகவிருந்த
கடற்கரையில்
சூள்விளக்குகள் மினுமினுக்க
மீன்பிடிவள்ளங்கள் தளும்பித் திரிகின்றன
இன்னமும் செப்பனிடப்படாத வீடுகளுள்
தங்கள் தயவினால் நிலவொளி ததும்பி
வழிகிறது எனினும்,
கண்கள் கட்டப்பட்டவர்களின்
பிடரிகளிலிருந்து பீறிட்ட குருதியின்
வீச்சை கொல்லப்படுவதற்காக
ஆடைகளற்று
அமரவைக்கப்பட்டிருந்தவர்களின்
சாவிழுதல் படிந்த விழிகளை
சேற்றினுள்ளிருந்து கைப்பிடியாக
அழைத்துவரப்பட்ட அவளை
குதறப்பட்ட மார்புகளை
பென்சில்களும் இரும்புக்கம்பிகளும்
செருகப்பட்ட பெண்குறிகளை
நாய்பட்ட பிணமென அழுகி
நாற்றமெடுத்த உங்கள் வார்த்தைகளை
தலை சிதைந்த குழந்தையின்
சின்னஞ்சிறு உடலை
உணவுப்பொட்டலங்களுக்காக நீண்ட
பன்னூறு கைகளை
மறக்க முடியவில்லை அரசே!
அபிவிருத்திக்கான அடுத்த நிருபத்தில்
இறந்த காலத்தை மறப்பதற்கான
கருவியொன்றையும்
தாங்கள் இணைத்துக்கொள்ள
வேண்டும்!

-ஜூனியர் விகடன்-

# பசியின் வலி
# பிரிவின் தவிப்பு
# வெடிகுண்டின் வெக்கை
# படுகொலைகளின் கொடூரம்



# முள்ளிவாய்க்கால்

ஈழப் போரின் இறுதி நிமிடங்களின் வரலாற்றை சுமந்து மௌனமாக அசைந்து கொண்டிருக்கின்றது முள்ளிவாய்க்கால். துள்ளி எழுந்த அலைகள் துயரை சொல்ல முடியாது மெல்ல நகர்ந்து கொண்டிருக்கின்றன.

மே 18 என்றதுமே பல ஆயிரக்கணக்கான உயிர்களின் இரத்தம் தோய்ந்த வரலாறுதான் கண்முன் தேன்றுகின்றது. முள்ளிவாய்க்கால் படுகொலை ஈழத்தமிழர்களின் இரத்த சக்தியால் வரையப்பட்ட மறக்க முடியாத சோகம்.

எத்தனையோ உறவுகளை இழந்தும் வலிகளையும் சுமந்தும் ஈழத் தமிழன் பல நாடுகளில் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

கடந்த 2009 மே 18ஆம் திகதி முடிவுக்கு வந்த போரின் இறுதிக் கட்டத்தில் முள்ளிவாய்க்காலில் ஆயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

ஈழத்தமிழர்கள் எதிர்கொண்ட இந்த மாபெரும் இனப்படுகொலைகளை நினைவுகூரும் நினைவேந்தல் நிகழ்வுகள் உலகம் முழுதும் கண்ணீருடன் நேற்று முன்தினம் தமிழர்களால் அனுஷ்டிக்கப்பட்டது.

போர் கொடூரமானது. ஆனால் உலக இனங்கள் தமது உரிமைகளைப் போராடியே பெற்றன. இதற்கு தமிழனும் விதிவிலக்கல்ல. தமிழர்கள் தமது உரிமைகளைப் போராடியே பெற்றனர். உலக வரலாற்றில் தமிழன் பல்லாயிரம் போர்களை சந்தித்திருக்கிறான்.

ஆனால் முள்ளிவாய்க்காலில் நடந்தது போர் மட்டுமே அல்ல. அது பல சக்திகள் இணைந்து மேற்கொண்ட ஒரு இன அழிப்பு. இந்தப் போரில் இனப்படுகொலை நடந்தது என்று ஐக்கிய நாடுகள் கூறினாலும் ஆரம்பத்தில் இந்த விடயத்தில் ஐ.நா. காட்டிய அக்கறை படிப்படியாக குறைந்து விட்டது.

உலக வல்லரசுகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டிய தரப்பினரை, கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டதால், தலையீடுகளை குறைத்துக் கொண்டன.

முள்ளிவாய்க்கால் போர் நடந்து பல வருடம் உருண்டு ஓடிவிட்ட இந்தத் தருணத்தில் போரை எதிர்கொண்ட மக்களின் வாழ்க்கை எப்படியிருக்கிறது? மக்கள் தமது வாழ்வாதாரத்திற்கே பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டிய நிலைமை.










இதனைத் தவிர பலர் தடுப்பு முகாமகளிலும் சிலர் அரசியல் கைதிகளாகவும் இன்னும் சிலர் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளாகவும் இருக்கின்றனர். இவற்றுக்கு இன்னும் தீர்வுகள் எட்டப்படவில்லை.

எமது தாயக உறவுகளில் இலட்சக்கணக்கானவர்கள் புலம்பெயர் நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

தாயகத்தில் எஞ்சியுள்ள தமிழர்கள். நில மீட்பு, காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் கடத்தப்பட்ட உறவுகளை தேடி போராடிக் கொண்டிருக்கின்றார்.

எஞ்சிய மக்களையும் அழிப்பதும் அந்த மக்களின் நிலத்தை பறிப்பதுமே போருக்குப் பிந்தைய மறுவாழ்வாக காணப்பட்டது.

நல்லாட்சியில் விடிவு பிறக்கும் என்று எண்ணிய மக்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. எது எப்படி இருந்தபோதிலும் கொத்துக்கொத்தாக மண்ணில் மடிந்த தமிழன் வரலாறு நினைத்துப் பார்க்க முடியாத சோகம்.

பசியின் வலியும் பிரிவின் தவிப்பும் வெடிகுண்டுகளின் வெக்கையும் படுகொலைகளின் கொடூரமும் சகலமும் முடிந்துபோகிற வேதனையான தருணம்.

முள்ளிவாய்க்கால் பரப்பில் அன்று நின்றிருந்த தருணம் இன்றைய நினைவேந்தல் தினத்தில் கண் முன்வந்து செல்லுகின்றது.

கடந்து விட்டது. ஆனால், தமிழ் மக்களுக்கு விடிவு கிடைக்கவில்லை. விடுதலை என்பது மனிதனுக்கு என்றுமே தணியாத தாகம்.

எஞ்சியுள்ள வாழ்க்கையையேனும் நிம்மதியாகக் கழிக்கலாம் என்ற மக்களின் எதிர்பார்ப்பும் கானல் நீராகி வருகிறது. உண்மையில் அவர்கள் செய்த குற்றம்தான் என்ன? உரிமைகளை கோருவது குற்றமா?

ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறவில்லை. தொடர்ந்து இன்னல்கள். தமது எதிர்காலம் தொடர்பில் சமிக்ஞையும் புலப்படாதிருப்பது தமிழ் மக்களை மேலும் விரக்தியடையச் செய்துள்ளது. தமிழ் மக்களை இன்னும் இரண்டாம் தரப் பிரஜைகளாக பார்க்கப்படும் நிலைமை தொடர்கிறது.

இந்த நிலைமை மாற வேண்டும் இனப்படுகொலைக்கான நியாயம் கிடைக்க வேண்டும். அந்த நிலையேற்படும் போதே எம் உறவுகளின் ஆத்மாக்கள் சாந்தியடையும்.

# பணத்தால் ஒருபோதும் வாழ்வை வாங்கிவிட முடியாது



சுருள் சுருளான தலைமுடி, பாசாங்கற்ற புன்னகையைக் கொண்டிருக்கும் அந்த முகத்துக்குச் சொந்தக்காரர் பாப் மார்லி.

கஞ்சா புகைப்பவன், எந்த ஒரு வரம்பு மற்று பாடித் திரிபவன். அதனால் பலருக்கும் அவரைப் பிடிக்கும் என்ற மேம்போக்கான பார்வையை பாப் மார்லியின் மீதும், அவரது ரசிகர்கள் மீதும் கூறியபடி பலரும் கடந்து போயிருப்பர். ஆனால், மார்லி இந்த நூற்றாண்டில் அதிகம் கொண்டாடப்பட்ட கலகக்காரக் கலைஞன்.

ஜமைக்காவைச் சேர்ந்த ஓர் இளைஞனை உலக இளைஞர்களே கொண்டாடுவதற்குக் காரணம், பாப் மார்லி வெறும் இசைக்கலைஞன் மட்டுமல்ல... இசையின் வழியே மனிதத்தைப் பரப்பிய விடுதலைக் கலைஞன். ஜமைக்காவில் பெரும் பகையாளர்களாக மல்லுக்கட்டிக்கொண்டிருந்த இரண்டு அரசியல் கட்சிகளை, ஒரே மேடையில் கைகோர்த்தபடி நிற்கவைத்து "ஒரே அன்புதான், ஒரே இதயம்தான்..." என அவர் பாடியது ஜமைக்காவின் சரித்திரப் பக்கங்களில் அன்பின் வேர்களைப் பரப்பியவை. "ஒரே அன்புதான், ஒரே இதயம்தான்..." என அவர் மைக்கைப் பிடித்துப் பாடிய பாடல் ஜமைக்காவுக்கானது மட்டுமல்ல... அன்பின் நிராகரிப்பில், ஆதிக்கத்தின் சுரண்டலில் தவிக்கும் உலகெங்குமுள்ள பல கோடி இதயங்களுக்கானது. பிரிவினையை அகற்ற இதயங்களால் இணையத் துடிக்கும் அத்தனை மனங்களுக்குமானது.

"இசையின் ஆகப் பெரும் மகத்துவமே, அது உங்களைத் தாக்கும்போது நீங்கள் உங்கள் வலியை மறப்பீர்கள்" - பாப் மார்லியின் புகழ்பெற்ற வாசகம் இது. இசையை மக்களுக்கான ஒரு வலி நிவாரணியாகவே அவர் பார்த்தார். ஏனென்றால், துயரம் நிரம்பிய வாழ்விலிருந்து அவரை மீட்டெடுத் ததே அந்த "ரெக்கே" (reggae) வகை இசைதான்.

ஆம், உலகின் மகத்தான பல கலைஞர்களைப் போலவே மார்லியும் வறுமையின் கரம் பிடித்து கலைக்குள் நுழைந்தவர். அவரின் அப்பா நார்வல் சிங்ளேர் மார்லி, ஒரு வெள்ளையினத்தவர். அம்மா செடெல்லா, ஆபிரிக்காவைச் சேர்ந்தவர். தேயிலைத் தோட்டத்தின் மேலாளராகப் பணிபுரிந்த 60 வயதான நார்வல், 18 வயதான செடெல்லாவைத் திருமணம் செய்துகொண்டார். பாப் மார்லி சிறுவனாக இருந்தபோதே தன் தந்தையை இழந்தார். அதன் பிறகு தன் ஏழ்மையின் துயரை மறக்க, இசையின் பக்கம் வந்தார். தன் பள்ளி நண்பன் லிவிங்ஸ்டனுடன் இணைந்து பள்ளியில் கிற்றார் வாசிக்க ஆரம்பித்தார். அங்கிருந்துதான் இந்த நூற்றாண்டின் மிக முக்கியமான இசைக்கலைஞன் உருவாக ஆரம்பித்தான். தன்னைப்போலவே இசைப்பித்து பிடித்த தன் நண்பர்கள் பலருடன் இணைந்து "வெய்லர்ஸ்" (The Wailers) என்ற இசைக் குழுவைத் தொடங்கினார்.

1960-களில் ஜட்ஜ்நாட், சிம்மர்ஸ் டவுன், சோல் ரெபல்ஸ், கேட்ச் எஃபயர், கஞ்சா கன், எக்ஸோடஸ், சர்வைவல் என வெளியான அல்பங்கள் அவருக்கு உலகெங்கும் ரசிகர்களைப் பெற்றுத் தந்தன. கிற்றாருடன் மேடையேறி எந்தவித ஆர்ப்பாட்டமுமின்றி மார்லி பாடும் பாடலை, பல ரசிகர்களும் தங்களுக்கான கீதமாகக் கொண்டாடினர். காதல் திருமணம் செய்துகொண்ட பாப் மார்லிக்கு, 11 குழந்தைகள்! தன் குரலின் வழியே மனித வாழ்வின் கசடுகளை நீக்கப் பாடித் திரிந்த அவர், புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். தன் இதயத்துடிப்பு மெள்ள மெள்ள தன் செவிகளுக்குக் கேட்காமல் விலகத் தொடங்கிய நாள் ஒன்றில் தன் மகனை அழைத்தார். அவனிடம் "பணத்தால் ஒருபோதும் வாழ்க்கையை வாங்க முடியாது" எனக் கூறினார். அதுதான் அவர் பேசிய கடைசி வார்த்தைகள். பெரும் புகழ், பெரும் ரசிகர் கூட்டம் என இருந்தபோதும் "வாழ்வின் ஆதாரம் அன்பு மட்டுமே!" என்பதைத் தீர்க்கமாக நம்பினார் மார்லி.

ஜமைக்காவின் இசையான "ரெக்கே" இசையை உலகெங்கும் பரப்பிய பாப் மார்லி, தன் 36 ஆவது வயதில் அவரது இசையை உலகுக்குக் கொடுத்துவிட்டு விடைபெற்றார். ஒரு மனிதனை நிறம், உடை, தோற்றம் எனப் பிரித்துப் பார்த்து ஒதுக்கிவைக்கும் இந்த உலகுக்கு பாப் மார்லி கூறியது ஒன்றே ஒன்றுதான், "இசை போன்றதுதான் மனிதமும், உருவங்களற்றது, உணர வேண்டியது"

## வார்த்தையை அழகாகச் சொல்வது ஒரு கலை

"இருவடை எடுத்து ஒரு வடை என்பார்"
"திருவோடு ஏந்தி தெருவோடு போவார்.!"

மாஸ்டர் டீ போடுகிற நேரத்தில், தட்டிலிருக்கும் வடையில் இரண்டை கபளீகரம் செய்துவிட்டு ஒரு வடைதான் என்று காசு கொடுப்பவர்களை கண்டிப்பதற்காக எழுதப்பட்ட வாசகம் இது. சுவாரஸ்யமாக இருக்கிறது என்றாலும் வடை எடுக்கிற எல்லோருக்கும் இது சங்கடத்தையே ஏற்படுத்தும்.

"ஒரு ஆட்டோவில் எழுதப் பட்ட வாசகம், 'உங்களின் வழிச் செலவு, எங்களின் வாழ்க்கை செலவு."

"ஒரு மீன் கடையில் எழுதப்பட்டிருந்த வாசகம்,"
"மீன் சாப்பிட வேண்டாம் என்று நினைத்தேன். மீன வன் சாப்பிட வேண்டாமா?"

"சொல்ல வந்ததை அழ காக சொல்வது ஒரு கலை."

"நினைக்கும் விஷயங்களை எல்லாம் பேசாமல் அதை செம்மைபடுத்தி பேசிப்பாருங்கள் வெற்றி நிச்சயம்."

ஒரு ஹோட்டலில் எழுதி மாட்டி இருக்கும் வாசகம்...
'வீட்டு சமையலுக்கு ஒரு நாள் விடுமுறை விடுங்கள்.

# அலுவலகம் செல்லும் ஆண்களுக்கு...

நாம் உடுத்தும் உடையை வைத்து தான் நம் வரலாற்றையே கணிக்கிறார்கள். அதற்குக் காரணம் நாம் உடுத்தி யிருக்கும் உடைகள் மட்டுமல்ல, அதன் நிறங்களும்தான். உதாரணத்துக்கு, யாரையாவது வெள்ளை ஆடையில் பார்த்தால் "அரசியல்வாதிபோல வந்தி ருக்க!" என்போம். கறுப்பு நிற ஆடையில் பார்த்தால், "நீ என்ன பெரிய வக்கீலா?" என்று கேட்போம். இப்படி ஒவ்வொரு தொழிலுக்கென்று ஒரு நிறம் நிரந்தர மாகி விட்டது. இவையெல்லாம் ஏதோ நிறம் என்று மட்டும் கருதிவிட முடியாது. ஒவ்வொரு நிறத்துக்குப் பின்னாலும் ஆயிரம் கதைகள் உண்டு. அந்தக் கதை களையும், அலுவலகம் செல்லும் ஆண் களுக்குச் சரியான ஆடை நிறங்களைப் பற்றியும் பார்ப்போம்.



### பச்சை

"என்னது... அலுவலகத்துக்குப் பச்சையா?!" என்ற சந்தேகக் கேள்விக்கான பதில், "ஆம்". வழக்கத்துக்கு மாறான நிறமாக இருந்தாலும், பச்சை நிறம் மிகவும் "கூலான" ஒன்று. அதிலும், "ஆலிவ்" சேர்ட், புதுமையான தோற்றத்தைத் தரும். உளவியல் ரீதியாக பச்சை, இயற்கை, முன்னேற்றம், சுகாதாரம், சாந்தம், பொறாமை போன்றவற்றை வெளிப்படுத்துகிறது. இதன் சேர்ட்டுகளின் வித்தியாசமே உணர்வுகளின் வெளிப்பாடாகும். தனிப்பட்ட, கூலான தோற்றம் பெற "பச்சை" நிறம் நிச்சயம் உதவும். இனி பச்சை நிறத்தை ஒதுக்கி வைக்காதீர்கள். உங்கள் அலுமாரியில் கட்டாயம் இருக்க வேண்டிய நிறங்களில் பச்சை நிறமும் ஒன்று.

### வெள்ளை

தூய்மை, நடுநிலைமை, துக்கம் போன்ற உணர்வுகளை வெண்மை வெளிப்படுத்துகிறது. மருத்துவர்கள் போன்ற சமூகத்தில் முக்கியப் பொறுப்பில் இருப்பவர்களுக்கு, வெள்ளை நிறம் பரிந்துரைக்கக் காரணம், நடுநிலைமையை வெளிப்படுத்துவதால்தான். அந்தக் காலம், இந்தக் காலம் மட்டுமல்ல, எந்தக் காலத்திலும் வெள்ளை நிறம் Classicதான். ரிஸ்க்கே இல்லாமல் மிடுக்கான தோற்றம் எளிதில் பெறலாம். மேலும், வெண்மை முழு நிறைவுத் தோற்றத்தைத் தருவதால், இன்டர்வியூக்கு மிகவும் சிறந்தது. இது மிகவும் பிளைனாக இருப்பதால், "Tie" அணிந்து கொள்வது அவசியம். நீங்கள் உண்மையில் சின்சியர் (Sincere) என்ற தோற்றத்தை வெள்ளை நிறச் சட்டை அணிந்து வெளிப்படுத்துங்கள்.

### கறுப்பு

அதிகாரம், திறன், வலிமை, அறிவுத்திறன் முதலியவற்றை வெளிப்படுத்தும் நிறம் கறுப்பு. வக்கீல்கள் கறுப்பு கோட் அணிவதன் பின்னணி இப்போது புரிகிறதா! "கறுப்புனா நெருப்புடா" என்று பஞ்ச் பேசும் பெரும்பாலான ஆண்களின் பேவரட் நிறமும் இதுதான். கறுப்பு நிறச் சட்டையைத் தேர்ந்தெடுக்கும்போது, அதுக்கு ஏற்ற பான்ட் தேர்ந்தெடுப்பதும் அவசியம். இதனுடன் "Tie" அணிய வேண்டிய அவசியமில்லை. ஆனால், நல்ல "ஸ்னீக்கர்ஸ்" அணிந்து கொள்ளுங்கள். வெள்ளை மற்றும் கறுப்பு நிறங்கள், என்றைக்குமே அலுவலக டிரெஸ்ஸிங்கில் கைவிடாது ஆண்களே!

### கிரே

வண்ணங்களில் "மதிப்பிற்குரிய" நிறம் என்றால் அது "கிரே"தான். உண்மை, நேர்மை போன்ற காலவரம்பற்ற குணாதிசயங்களை இந்த நிறம் கொண்டுள்ளது. எந்தத் தொழிலில் உள்ளவராக இருந்தாலும் சரி, சில நிறங்களால் ஆன உடைகளை உடுத்தியிருக்கும் மனிதர்களைப் பார்த்தாலே மரியாதை வரும். அப்படிப் பட்டவர்கள் அதிகம் அணிந்திருக்கும் நிறம் கிரே. இந்த நிறத்தைத் தேர்ந் தெடுக்கையில் சரியான பான்ட், ஷூ போன்றவற்றையும் தேர்ந்தெடுக்க வேண்டும். இது அலுவலகத்துக்கு மிக வும் ஏற்ற நிறம். சில்வர் நிற கைக் கடிகாரம் கிரே சட்டைக்கு சரியான மட்ச்.

### நீலம்

விவசாயம் தவிர்த்து, பெரும்பான்மையான அலுவலகம் செல்லும் ஆண்கள் 'Blue Collar' வேலையில்தான் இருப்பார்கள். அதன் பெயர் காரணம் தெரியுமா?

விசுவாசம், உண்மை, கவனம், ஞானம் போன்றவற்றையை வெளிப்படுத்துவதுதான் "நீல" வண்ணம். "நீல கொலர்" பெயர் அர்த்தமும் இதனால்தான் தோன்றியது. அர்த்தங்கள் எதுவானாலும், உண்மையிலேயே நீல வண்ணம் ஆண்களுக்கே உரித்தான "ஸ்மார்ட்" தோற்றத்தை கொடுக்கும் நிறம். நேவி, பேபி எனப் பல ஷேடுகள் உள்ளன. சற்றும் யோசிக்காமல் உங்களுக்குப் பிடித்த ஷேடுகளில் வாங்கி அடுக்குங்கள்.

### பிறவுண்

இது அரிதான நிறம். நம்பிக்கை, திடநிலை, தோழமை, ஆறுதல், பாதுகாப்பு போன்ற உணர்வுகளை வெளிப்படுத்தும் நிறமும்கூட. நன்கு முதிர்ச்சி பெற்ற தோற்றத்தைத் தரும். எனவே, சரியான சேட்களில் ஒன்று அல்லது இரண்டு சட்டைகள் இருப்பது நன்று.

### தவிர்க்கவேண்டிய நிறங்கள்:


சிவப்பு, பிங்க், ஒரேஞ்ச் போன்ற பிரைட் நிறங்களைத் தவிர்ப்பது நல்லது. இவை கண்களுக்கு எரிச்சலை ஏற்படுத்தும் விதமாக அமையும். கோபத்தைத் தூண்டும் நிறங்கள் என்பதால், அலுவலகத்துக்கு இவை தேவையில்லை.

# ரசிகர்களை கவர்ந்து இழுத்த ஐ.பி.எல் தொகுப்பாளினிகள்




விளையாட்டை விளையாட்டாக மட்டுமே பார்த்துவந்த இரசிகர்களை, அதைத் தாண்டி நிறைய உள்ளது என்று தெரிய வைத்தது ஐ.பி.எல். குறிப்பாக கவர்ச்சி மாடல்களை அழைத்துவந்து, ஸ்டேடியத்தில் நடனம் ஆட விட்டு சியர் பெண்களை முதன்முதலில் இந்தியாவுக்கு அறிமுகம் செய்து வைத்தது.

அதேபோல், அரைகுறை கவர்ச்சி ஆடையுடன் கிரிக்கெட் போட்டிக்கு முந்தைய மற்றும் பிந்தைய நிகழ்வுகளை தொகுத்து வழங்கும் தொகுப்பாளினிகளை அறிமுகம் செய்ததும் ஐ.பி.எல்-தான். கோட் சூட் போட்டுக்கொண்டு ஹிந்தி, இங்கிலீஷில் பேசிக்கொண்டிருந்தவர்களை வெறிக்க வெறிக்க பார்த்துக்கொண்டிருந்தவர்களுக்கு இந்த கிளாமர் தொகுப்பாளினிகளின் வருகை உற்சாகத்தை ஏற்படுத்தியது. அதிலும், மந்திரா பேடிக்கு இரசிகர் பட்டாளமே உண்டு. அப்படி இரசிகர்களை கட்டிப்போட்ட தொகுப்பாளினிகள் பற்றி பார்க்கலாம்.



## எரின் ஹொலண்ட்:

ஐ.பி.எல்-க்கு புது முகம் இந்த முன்னாள் உலக அழகி அவுஸ்திரேலியாவின் எரின் ஹொலண்ட் இந்த சீசனில் தான் தொகுப்பாளினியாக இரசிகர்களை கவர்ந்து வருகிறார். அவர் ஒரு பயிற்சிபெற்ற பாடகியாகவும் திறமை கொண்டவர். திறமைகளைத் தாண்டி, அவுஸ்திரேலியா வில் பல தொண்டு காரியங்களிலும் அவர் ஈடுபட்டு வருகிறார்.




## மயந்தி லாங்கர்:

விளையாட்டு தொகுப்பாளினியாக அனைவருக்கும் பரிட்சியமான முகம் மயந்தி லாங்கர். இந்திய ஆல்-றவுண்டர் ஸ்டுவர்ட் பின்னியின் மனைவியான லாங்கர், கிரிக்கெட் போட்டியை தவிர பல விளையாட்டு போட்டிகளின் தொகுப்பாளினியாக இருந்துள்ளார்.

2010 ஃபிபா உலக கோப்பை, 2010 காமன்வெல்த் போட்டி, 2011 கிரிக்கெட் உலக கோப்பை, 2014 இந்தியன் சுப்பர் லீக் மற்றும் ஐ.சி.சி. உலக கோப்பை கிரிக்கெட் போட்டிகளில் தொகுப்பாளினியாக பணியாற்றியுள்ளார். கால்பந்து இவருக்கு பிடித்தமான விளையாட்டாகும். கடந்த ஆண்டு முதல் ஐ.பி.எல் போட்டியில் இவர் தான் இரசிகர்களின் மனம் கவர்ந்த தொகுப்பாளினி.



## அர்ச்சனா விஜயா:

ஐ.பி.எல்-ல் இரசிகர்களுக்கு மிகவும் பரிட்சியமானவர் அர்ச்சனா விஜயா. 2011ஆம் ஆண்டு ஐ.பி.எல் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கியவர். 2015ஆம் ஆண்டு வரை இவரது ஐ.பி.எல் பயணம் தொடர்ந்தது. பல நாடுகளில் கிரிக்கெட் தொகுப்பாளினியாக இவர் இருந்துள்ளார். இவரது புன்னகைக்கே தனி இரசிகர் கூட்டம் உள்ளது.



## ஷிபானி டன்டேகர்:

மாடல், கதாநாயகி என பன்முகங்களைக் கொண்டவர் தொகுப்பாளினி ஷிபானி டன்டேகர். புனேவை சேர்ந்த இவர் 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் வருடம் வரை ஐ.பி.எல். போட்டிக்கு தொகுப்பாளினியாக இருந்தார். மரியாதைக்குரிய ஷிபானி, கிரிக்கெட் உலகில் பல பாராட்டுகளை பெற்றுள்ளார். வீரர்களிடம் பேட்டி எடுக்கும் போது, அவருடைய நாளங்களில் கிரிக்கெட் ஓடுவது இரசிக்கும்படியாக இருக்கும்.



## கரிஷ்மா கோடக்:

2013 ஆம் ஆண்டு 6ஆவது ஐ.பி.எல். போட்டியை கரிஷ்மா கோடக் தொகுத்து வழங்கினார். ஷிபானி டன்டேகர் மற்றும் ரோசெல்லே ராவ் உடன் இவர் பணியாற்றினார். லண்டனில் பிறந்த இவர், இந்திய இரசிகர்களிடையே பெரியளவில் ஈர்க்கப்பட்டார். கிங்பிஷர் காலண்டரில் 2006 ஆம் ஆண்டு இவர் இடம் பெற்றிருந்தார்.



## ரோசெல்லே மரியா ராவ்:

இந்திய மாடல் அழகியான ரோசெல்லே, 2015-16 சீசனுக்கான ஐ.பி.எல். போட்டிக்கு தொகுப்பாளியாக இருந்தார். கிங்பிஷர் காலண்டரில் இடம் பெற்றுள்ள இவர், பல டிவி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுள்ளார். 2016 ஆம் ஆண்டு பிக்பாஸ் நிகச்சியிலும் இவர் ஃபேமஸ். 2012 மிஸ் இந்தியாவான ரோசெல்லே மிகவும் வசீகரமான தொகுப்பாளினியாக வலம் வந்தவர்.

**பல்லவி ஷர்தா:** அவுஸ்திரேலியாவை பிறப்பிடமாகக் கொண்ட இந்த நடிகை, ஐ.பி.எல். போட்டியை அழகாகவும் கவர்ந்திழுக்கும் முறையிலும் தொகுத்து வழங்கியது பார்த்து இரசிகர்கள் ஆர்வத்துடன் பல்லவியை கவனிக்கத் தொடங்கினர். இவர் மை நேம் இஸ் கான் உள்ளிட்ட படங்களில் கெஸ்ட் ரோலில் நடித்துள்ளார்.



## ஈஷா குஹா:

முன்னாள் கிரிக்கெட் வீராங்கனையான குஹா, 2009 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிரான உலக கோப்பையை வென்ற இங்கிலாந்து அணியில் இடம் பிடித்திருந்தார். ஐ.பி.எல். போட்டியில் மிகவும் மரியாதைக்குரிய குஹா. இரசிகர்களுக்கு பிடித்தமானவர்களுள் ஒருவராவார்.



## சோனாலி நாகராணி:

2003 ஆம் ஆண்டு மிஸ் இந்தியாவான சோனாலி, ஐ.பி.எல். போட்டியில் தொகுப்பாளினியாக நான்கு வருடங்கள் பணியாற்றியுள்ளார். 2006 சாம்பியன்ஸ்டிராஃபி போட்டியையும் இவர் தொகுத்து வழங்கியுள்ளார். இவரின் கிரிக்கெட் ஆய்வைக் கண்டு இரசிகர்கள் வியந்ததுண்டு.



## லேகா வாஷிங்டன்:

ஐ.பி.எல். இன் முதல் தொகுப்பாளினி லேகா வாஷிங்டன். இதற்கு முன் எஸ்.எஸ். மியூசிக்கில் விஜெவாக இருந்தார். பல இருபது-20 போட்டிகளுக்கு தொகுப்பாளினியாக இருந்துள்ள லேகா, இரண்டு முறை சாம்பியன் பட்டம் வென்ற சி.எஸ்.கே அணியின் மிகப்பெரிய ரசிகராவார்.

## மந்திரா பேடி:



ஐ.பி.எல்-க்கு முன்பு இருந்தே மந்திரா பேடி ஃபேமஸ். 1994ஆம் ஆண்டு தூர்தர்ஷனில் வந்த சாந்தி என்ற நெடுந்தொடரில் பிரபல ஹீரோயின். 2000ஆம் ஆண்டுகளில் தொலைக்காட்சிகளின் பிரபல தொகுப்பாளினியாக இருந்தார். நிகழ்ச்சி தொகுத்து வழங்கும் மந்திரா பேடியின் அழகில், செயலில் மயங்கிய சோனி டெலிவிஷன் நிறுவனம், 2007ஆம் ஆண்டு உலகக் கோப்பை போட்டியில் எக்ஸ்ட்ரா இன்னிங்ஸ் என்ற ஒரு நிகழ்ச்சியை தொகுத்து வழங்கும்படி கூறியது. அப்போது மந்திராவுக்கு கிரிக்கெட் பற்றி பெரியதாக ஒன்றும் தெரியாதாம். ஆண்கள் ஆதிக்கம் நிறைந்த கிரிக்கெட் உலகில், கிரிக்கெட் கமெண்டரி உலகில் தன்னந்தனி ஆளாக களம் இறங்கினார் மந்திரா. முதல் நிகழ்ச்சியே சிக்ஸர்தான். அதைத் தொடர்ந்து 2010ஆம் ஆண்டு ஐ.பி.எல் நிகழ்ச்சியை தொகுத்து வழங்க இவரை அழைத்தது. அந்த ஆண்டு அவருடைய நிகழ்ச்சி, ஆடைதான் டாப். அதைத் தொடர்ந்து மந்திராவை தமிழில் நடிக்க வைக்கக் கூட முயற்சிகள் நடந்தன.



# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : வானம்பாடி
இசை : கே.வி.மகாதேவன்
இயற்றியவர் : கண்ணதாசன்
பாடகர் : பி.சுசீலா



கங்கைக் கரைத் தோட்டம்
கன்னிப் பெண்கள் கூட்டம்
கண்ணன் நடுவினிலே…ஓஓ…கண்ணன் நடுவினிலே

காலை இளம் காற்று
பாடி வரும் பாட்டு
எதிலும் அவன் குரலே…ஓஓ…எதிலும் அவன் குரலே

கண்ணன் முகத்தோற்றம் கண்டேன்
கண்டவுடன் மாற்றம் கொண்டேன்
கண்மயங்கி ஏங்கி நின்றேன்
கன்னி சிலையாகி நின்றேன்

என்ன நினைந்தேனோ…தன்னை மறந்தேனோ!
கண்ணீர் பெருகியதே…ஓ…கண்ணீர் பெருகியதே!!
(கங்கைக்கரை)

கண்ணன் என்னைக் கண்டுகொண்டான்
கை இரண்டில் அள்ளிக் கொண்டான்
பொன்னழகு மேனி என்றான்
பூச்சரங்கள் சூடித் தந்தான்

கண் திறந்து பார்த்தேன் கண்ணன் அங்கு இல்லை!
கண்ணீர் பெருகியதே…ஓ…கண்ணீர் பெருகியதே!!

அன்று வந்த கண்ணன் அவன்
இன்று வர வில்லை அவன்!
என்றோ அவன் வருவான்…ஓ…என்றோ அவன் வருவான்!

கண்ணன் முகம் கண்டகண்கள்
மன்னன் முகம் காண்பதில்லை
கண்ணனுக்குத் தந்த உள்ளம்
இன்னொருவர் கொள்வதில்லை

கண்ணன் வரும் நாளில், கன்னி இருப்பேனோ…
காற்றில் மறைவேனோ!
நாடி வரும் கண்ணன், கோல மணி மார்பில்
நானே தவழ்ந்திருப்பேன்!!
கண்ணா…!!கண்ணா…!!கண்ணா…!!-

# செங்குருதி

(நிமிடக்கதை)

அன்பு நிறைந்த சங்கு நாத வாசகர்களே! உங்கள் அனை வருக்கும் ஜிம்மிக் குட்டியின் இனிய நெஞ் சார்ந்த வணக்கம் உரித்தா கட்டும். நான் இப்ப என்னுடைய வலது முன்னங் காலை இடது நெஞ்சுக் கூட்டிலை வைச்சு நிமிர்ந்து நின்று கொண்டுதான் வண க்கம் சொல்லுறன். ஓம்… ஓம்… இதயம் இடது பக்கத்தில் தானே. அதுதான் மனப்பூர் வமா வணக்கம் சொல்லுறன். இந்தக் கழுத் துப்பட்டி கட்டின சாரணர் கள் இடதுகை குலுக் குறதும் அதுக்காகத்தானாம். பெரியவர் இன்னுமொண்டு சொல்லுறவர். போர்க்க ளத்திலையாம் வலது கையிலை வாளும் இடது கையிலை கேடயமும் வைச் சுக்கொண்டு தான் ராசாக் கள் சண்டை பிடிப்பின மாம். அப்ப சமாதான மாப் போறதெண்டால் வாளைக் கீழே போடுறதை விடக் கேடயத்தைக் கீழே வைச்சிட் டால் திரும்ப அடிபடமாட்டி னமாம். ஏன் தெரியுமோ! கேடயம் பாதுகாப்புக்கு ரியது தானே. அப்ப கேடய த்தைக் கீழே வைச்சால் சரணடைந்த மாதிரித்தானம். பார்த்தியளே எவ்வளவு நேர்மை! ம்… இதைத்தான் சாரணரும் செய்யிறவை யாம்.

சரி…சரி…அண்டைக்குப் பாலாண்ணையின்ரை மகன் ஆஸ்பத்திரியிலை எண்டு புலம்பினவர் எல்லே, இப்ப கூட்டிக் கொண்டு வாறார். பாவம் பிள்ளை தட்டலாப் போட்டுது. கண்ணும் குழி விழுந்து முகமும் வெளுத் துப் போச் சுது. எண்டாலும் சிரிச்சுக் கொண்டு வந்து பெரிய வரின்ர காலிலை விழுந்து கும்பிடுது.

தங்கமான வளர்ப்புத் தான். பெரியவர் தடவிக் குடுத்து மடியிலை வைச்சி ருக்கிறார். பாலாண்ணை தான் கதிரையிலை இருந்து கதைக்கிறார். "புனர்ஜென் மம் தான் சேர். வெருட்டிப் போட்டான். எல்லாம் உங்கடை ஆசீர்வா தம் தான்…" பெருமூச்சு விடுகிறார். பெரியவர் கதை க்கிறார்.

"என்னவாம்-என்ன பிரச் சினையாம்? ஏதாவது சொன் னவையோ…" அக்கறை யோடை கேக்கிறார், பாலா சொல்லு றார்…

"ஓம் சேர் இரத்தத்திலை ஈமோகுளோபின் சரியாக் குறைஞ்சிருக்காம். கொஞ் சம் பெலயீனமா இருக்கிறா னாம்…" சொல்லி வாய்மூ டேலை லதாக்குட்டி உள்ளி ருந்து வேகமா வந்து பெரிய வரின்ர மடியிலை தானும் சொருக்கிக் கொண்டு இருந்து கொண்டு பலமாச் சிரிக்கிறா.

"ஐயோ ஐயோ… எல்லோ ரும் படிச்ச பெரிய ஆக்கள் தானே…ஈமோகுளோபின் ஒரு பெரிய பிரச்சினையே. ராத்தி ரியிலை படுக்கப் போகுமுன் ஒரு கப்பிலை அரைவாசித் தண்ணீர் விடு ங்கோ. அதுக்குள்ள இர ண்டே இரண்டு முந்திரிகை வற்றலை துப்ப ரவோ எண்டு வடிவாகப் பார்த் திட்டு போட்டு மூடி வைங்கோ. அடுத்த நாள் விடிய தேத் தண்ணி குடிக்க முன்னம் அந்த ஊறின தண்ணியையும் குடிச்சு அந்த முந்திரி வற்றல் இரண்டையும் சாப்பிடு ங்கோ. நீங்கள் இதைத் தொடர்ந்து மூண்டு மாதம ாவது சாப்பிட்டுப் போட்டு இரத்தம் எடுத்து சோதித் துப் பாருங்கோ, அப்ப தெரியும் அதிசயம். ஈமோகு ளோபின் பன்னிரெண்டு பதின்மூண்டைத் தாண் டிடும். ஒண்டுக்கும் யோசிக் காதைங்கோ பாலா மாமா" கடவுளே இது ஞானக்குழந் தைதான். எத்தினை வடிவா, விளக்கமா, பொறுமையா, அன்பாச் சொல்லுது பிள்ளை. இதைத்தான் பெரி யவர் அடிக்கடி சொல்லு றவர் "நடமாடும் வைத்திய சாலை" எண்டு எல்லோருமே விறைச்சுப் போட்டினம். பெரியவர் கொடுப்புக்கை சிரிக்கிறார். பேத்தியின் பெருமை அவரின்ர முகத் திலை அந்த மாதிரித் தெரி யுது. லதாக்குட்டி திரும் பத் தொடங்கிறா.

"அதுமட்டும் போதாது. இலைக் கறி வகைகள், பழ ங்கள் அதுவும் சாப்பிட வேணும். முக்கியமா மன சைச் சந்தோசமா வைச்சி ருக்க வேணும். சுத்தமான காற்றை நிறைய உள்ளெடுக்க வேணும். பதட்டப்படாமல் நிதானமா எல்லா வேலை யையும் செய்ய வேணும். சின்னச்சின்ன பூக் கன்று கள், மரக்கறிக்கன்றுகள் பூச்சாடியிலை வைச்சு வளர் த்தால் அது மனசுக்குச் சந்தோசம் தரும். வாங்கோ நான் என்ரை குட்டித் தோட் டத்தைக் காட்டிறன். தொப் பியைப் போடுங்கோ வெயில் சுடும். வங்கோ… கந்தையாப்பு இள நீர் வெட்டுங்கோ. நான் தோட் டத்தைக் காட்டிப் போட்டு வாறன். வாங்கோ பாத்து வாங்கோ இறைச்சுக்கிடக்கு சேறு… கவனம்…"

ம்…ஏதோ அதிசயக்கனவு காணுறது போல எல்லோ ரும் வாயைப் பிளந்து கொண்டிருக்கினம். இத் தினை அறிவு நிறைஞ்ச குழந்தைகள் இருக்குது. ஒழுங்கா வளர்த்தால் இளம் விஞ்ஞானிகள் வீட்டுக்கு வீடு உருவாகிடுவினம். ம்… என்ன செய்யிறது… இடை யிலை சில பெரியவை பிள்ளைகளுக்குக் கட்டுப்பா டுகள், சட்ட திட்டங்கள் போட்டு இயந்திரம் மாதிரி மாத்தியெல்லே போட் டினம். ம்… "எந்தக் குழந்தை யும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே…" சரி சரி சந்தோசம் வாறன்.

பாரதி கணேஷ்
சுன்னாகம்

# பெண்கள் தலையில் பூ வைப்பதால் இவ்வளவு நன்மைகளா…?

உலகம் முழுவதும் 38 ஆயிரம் கோடிக்கு மேல் பூ வகைகள் உள்ளன. ஆனால் ஆயிரம் கோடிப் பூக்கள் மட்டுமே தற்போதைய நடைமுறையில் உள்ளன. அதிலும் 500 கோடி பூக்களே மருத்துவத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றன. பெரும்பாலான பூக்கள் மனமூட்டிகள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

பூக்களைச் சூடும் கால அளவு

முல்லைப்பூ - 18 மணி நேரம், அல்லிப்பூ - 3 நாட்கள் வரை, தாழம்பூ - 5 நாட்கள் வரை. ரோஜாப்பூ - 2 நாட்கள் வரை, மல்லிகைப்பு, - அரை நாள்வரை, செண்பகப்பூ - 15 நாட்கள் வரை,சந்தனப்பூ-1 நாட்கள் மட்டும், மகிழம்பு, மற்றும் குருக்கத்திப் பூ - சாப்பிடும்போது மட்டும் சூடிக்கொள்ளலாம்.

மந்தாரைப்பூ, பாதிரிப்பூ, மாசிப்பூ- இந்தப் பூக்களின் வாசம் இருக்கும் வரை மட்டும் சூடிக் கொள்ளலாம்.

பூக்களின் பயன்கள்

ரோஜாப்பூ - தலைச்சுற்றல், கண் நோய் போன்றவற்றைக் குணப்படுத்தும்.

மல்லிகைப்பூ- மன அமைதிக்கு உதவும். கண்களுக்குக் குளிர்ச்சி தரும்.

செண்பகப் பூ - வாதத்தைக் குணப்படுத்தும். பார்வைத் திறனை மேம்படுத்தும்.

பாதிரிப்பூ- காது கோளாறுகளைக் குணப்படுத்தும். ஜெரிமானச் சக்தியை மேம்படுத்தும். காய்ச்சல், கண் எரிச்சல் போன்றவற்றைச் சரிசெய்யும்.

செம்பருத்திப் பூ - தலைமுடி தொடர்பான பிரச்சினைகளை சரிசெய்யும். உடல் உஷ்ணத்தைக் குறைக்கும்.

மகிழம்பூ - தலை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்கும். பல் வலி, பல் சொத்தை உள்ளிட்ட பல் குறைபாடுகளை நீக்கும்.

வில்வப்பூ - சுவாசத்தைச் சீராக்கும். காசநோயைக் குணப்படுத்தும்.

சித்தகத்திப்பூ - தலை வலியைக் குறைக்கும். மூளை சுறுசுறுப்பாக இயங்க உதவும்.

தாழம்பூ - நறுமணம் வீசுவதோடு சீரான தூக்கத்துக்கு உதவும். உடல் சோர்வை நீக்கும்.

தாமரைப்பூ - தலை எரிச்சல், தலைச்சுற்றல் போன்றவற்றைச் சரிசெய்யும். மனஉளைச்சலை நீக்கி, மனஅமைதிக்கு வழிவகுக்கும். தூக்கமின்மையை நீக்கி, சீரான தூக்கத்தை ஊக்குவிக்கும்.

கனகாம்பரம்பூ - தலை வலி மற்றும் தலை பாரத்தைச் சரிசெய்யும். தாழம்பூ, மகிழம்பூ, சந்தனப்பூ, ரோஜாப்பூ செண்பகப்பூ போன்றவை வாதம், கபத்தைக் குறைக்கக் கூடியவை.

பூக்களைச் சூடும் முறை

பூக்களைக் காதின் மேல் மற்றும் கீழ் நுனியின் இடைவெளியில் சூடவேண்டும். உச்சந்தலையிலோ, கழுத்துப் பகுதியிலோ பூக்கள் தொங்கும்படி சூடக் கூடாது. மணமுள்ள பூக்களை வாசனையில்லாதப் பூக்களுடன் சேர்த்துச் சூடக் கூடாது. அது கூந்தல் வளர்ச்சியைக் குறைக்கும்.



ஜாதி மல்லிகைப்பூ, செவ்வந்திப்பூ, குடசப்பாலைப்பூ, பாதிரிப்பூ, மகிழம்பூ, செண்பகப்பூ, சந்தனப்பூ, ரோஜாப்பூ, போன்றவற்றைக் கனகாம்பரத்துடன் சேர்த்துச் சூடினால் மிகவும் நல்லது.

மந்தாரை, தாமரை, செவ்வரளி, கருங்குவளைப்பூ போன்றவற்றுடன் கற்பூரத்துடன் சேர்த்துச் சூடினால் மனம் அமைதி பெற உதவும். மல்லிகைப்பூவை குளிப்பதற்கு முன் சூட வேண்டும். முல்லைப்பூ, வில்வப்பூவை குளிந்த பின்பு சூடலாம். உடலில் எண்ணெய் தேய்க்கும்போது தாழம்பூ சூடலாம்.

பூக்களைச் சூடுவதால் ஏற்படும் நன்மைகள்

பூக்களில் உள்ள பிராண ஆற்றல், மூளைச் செல்களால் ஈர்க்கப்பட்டு, நாளமுள்ள மற்றும் நாளமில்லாச் சுரப்பிகளின் சீரான இயக்கத்துக்கு உதவுகிறது.

இந்தப் பிராண ஆற்றலானது மன அழுத்தத்தைக் குறைத்து, மன அமைதிக்கு உதவுகிறது.

தலையில் பூ வைப்பது, மன மாற்றத்துக்கு உதவும். ஒரு விடயத்தைப் பல கோணங்களில் பார்க்கும் தன்மையைக் கொடுக்கும்.

மன அழுத்தத்தால் ஏற்படும் செல் இழப்பைத் தடுக்கிறது. பூவின் மணமானது உடல் செல்களுக்குப் புத்துணர்வை அளிக்கிறது. மன மாற்றத்துக்கு உதவுகிறது. மன அழுத்தத்தைக் குறைக்க உதவுகிறது. மகிழ்ச்சியை உண்டாக்குகிறது.




# இரும்புத்திரை



டேட்டா யுகத்தின் டிஜிட்டல் க்ரைம்களை வெள்ளித்திரையில் வெளிச்சம்போட்டுக் காட்டும் படம்.

ஆதார் லீக்ஸில் தொடங்கி கேம்ப்ரிட்ஜ் அனாலிடிகா வரை நம்மைச் சுற்றி நிகழும் அத்துமீறல்களை அழகாகக் கோத்துத் திரைக்கதை அமைத்து கவனம் ஈர்க்கிறார் அறிமுக இயக்குநர் பி.எஸ்.மித்ரன்.

இராணுவப் பயிற்சிப்பள்ளியில் ஆசிரியர் கோபக்கார விஷால். தங்கை திருமணத்தை நடத்த வாங்கிய கடனை அவருக்கே தெரியாமல் ஹேக்கிங் கும்பல் ஆட்டையைப் போட, தேடுதல் வேட்டையில் இறங்குகிறார். திருடனைத் தேடித் திரியும் விஷாலுக்குக் கிடைப்பவை அத்தனையும் அதிர்ச்சித் தகவல்கள். இந்த ஒட்டுமொத்த இன்டலிஜென்ட் குற்றங்களுக்குப் பின்னால் இருப்பது ஒரு புத்திசாலிக் குரல்... அதைக் கண்டுபிடித்து அழித்து உலகைக்காப்பதே மீதிக்கதை!

ஆறடி ஆர்மி மேஜர் கதிரவனாக விஷால் செம ஃபிட். அக்கவுண்டில் பணம் காணாமல் போகும்போது அதிர்ச்சி முகம், அப்பாவிடம் அலட்சிய முகம், சமந்தாவிடம் வழிசல் முகம் என்று பல பரிமாணங்கள் காட்டுகிறார். அதிலும் அந்த சப்வே சண்டைக்காட்சி செம கெத்து!

ஒரு சின்னப் புன்னகையுடன் ஹீரோயின் கடமை செய்திருக்கிறார் சமந்தா. நடையும் நரம்பும் தளர்ந்த கிராமப்புற வெகுளித் தந்தையை அப்படியே கண்முன் நிறுத்துகிறார் டெல்லி கணேஷ். 'உங்களை அடிச்சுடுவேன்னு பயமா இருக்குப்பா' என விஷால் கத்தும் காட்சியில் மனிதர் கொடுக்கும் எக்ஸ்பிரஷன்கள்... வாவ்!

படத்தின் டெரர் சர்ப்ரைஸ் ஒயிட் டெவில் - அர்ஜுன். இன்டர்வெல்லில் தான் அவருக்கு முதல் காட்சியே. ஆனால் படத்தின் முதல் காட்சியிலிருந்து க்ளைமாக்ஸ் வரை ஒட்டுமொத்த திரைக்கதையையும் கட்டுப் படுத்துகிற அச்சமூட்டும் ஆயிரம் கண்ணுடையான். படத்தில் இடம்பெறுபவை இரண்டே பாடல்கள்தான். ஆனால், பின்னணி இசையில் பின்னியிருக்கிறார் யுவன் ஷங்கர் ராஜா. ஜார்ஜ் வில்லியம்ஸின் கமரா கோணங்கள் த்ரில்லருக்கான திக்திக் உணர்வை கடத்துகின்றன. பக்கா டீட்டெய்லிங் படத்தை பேறடிக்காமல் பார்க்கத்





துணை நிற்பது எடிட்டர் ரூபெனின் சின்ஸியர் கத்திரி.


ரொம்பத்தான் பயமுறுத்துகிறார்களோ, ஒரே ஒரு தனிநபர் இத்தனை அட்ராசிட்டிகளை அரங்கேற்ற முடியுமா, பொலிஸ் அதிகாரி முதல் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் வரை கண்ணில் விரலை விட்டு ஆட்டினாலும் எதுவுமே செய்யாமல் இருப்பார்களா, 'ஒயிட்-டெவில்' கேரக்டரைசேஷன் முழுமையாக இல்லையே என்றெல்லாம் படம் பார்த்து முடித்ததும் ஏராளமான கேள்விகள் எழுகின்றன.

ஆனால் தனிநபர் அந்தரங்கம் களவாடப்படும் தகவல் யுகத்தில் வாழ்கிறோம் என்ற உண்மையை அழுத்தமாய்ச் சொன்ன விதத்தில் **இரும்புத் திரை** ஓர் அழுத்தமான அலெர்ட் மெசேஜ்.

# இரவுக்கு ஆயிரம் கண்கள்

ஒரு கொலையும் அதன் பின்னணியில் சிக்கும் சில மனிதர்களும் இந்த இரவின் கண்கள்.

ஒருவருக்கொருவர் தொடர்பில்லாத சிலர், வெவ்வேறு காரணங்களுக்காக பிளாக் மெயில் கும்பல் ஒன்றால் மிரட்டப்பட்டு பணத்தை இழக்கிறார்கள். மழை இரவு ஒன்றில் பாதிக்கப்பட்டவர்கள் தனித்தனியாகப் பழி தீர்க்கப் புறப்படுகிறார்கள். இதற்கிடையில் ஒரு பெண் கொலை செய்யப்பட்டுக்கிடக்கிறாள். கொலையாளி யார், கொலைக்கான காரணம் என்ன, வில்லனைப் பழிதீர்த்தார்களா? இல்லையா..? 'போன்ற கேள்விகளுக்கான விடைகளே இ.ஆ.க.





பாக்கெட் நாவல் பாணி க்ரைம் த்ரில்லர் கதை. கணேஷ், வசந்த், சுசீலா, பரத் என பாத்திரப்பெயர்கள் எல்லாம் துப்பறிவாளன்/ளினிகள். புத்திசாலித்தனமான திரைக் கதையமைப்பில் புதுமையான மேக்கிங்கில் சொல்லி இருக்கிறார் அறிமுக இயக்குநர் மு.மாறன்.

கோபம், குழப்பம், விரக்தி எனக் கலவையான உணர்வுகளைக் கச்சிதமாக வெளிப்படுத்தியிருக்கிறார் அருள்நிதி. மகிமா நம்பியாருக்கு வழக்கமான ஹீரோயின் கேரக்டர். அட்டகாசமாக வந்திருக்க வேண்டிய அஜ்மலின் பாத்திரம் ஏனோ அந்தப்பாத்திரத்தின் குழப்பமான பின்னணியால் பலவீனமடைகிறது. ஆனந்த்ராஜின் காமெடி கவுன்டர் சில இடங்களில் சிரிக்கவைக்கிறது. ஜான் விஜய்க்கு இன்னும் எத்தனை படத்தில் தான் இதேமாதிரியான கேரக்டரைக்கொடுப்பார்களோ, தேவுடா!

சாயா சிங், லெட்சுமி ராமகிருஷ்ணன், வித்யா பிரதீப், சுஜா வாருணி, 'ஆடுகளம்' நரேன், முருகதாஸ் எனப் படத்தின் பல கேரக்டர்கள், கொடுத்த வேலையைக் குறைவின்றி செய்திருக்கிறார்கள்.

பகல், இரவு, வெயில், மழை... அத்தனை அழகையும் கேமராவில் கடத்தியிருக்கிறார் ஒளிப்பதிவாளர், அரவிந்த் சிங். சாம் சி.எஸ்ஸின் பின்னணி இசை த்ரில்லர் படத்திற்கு அவசியமான மனநிலையை செட் செய்ய உதவியிருக்கிறது. முன்னும் பின்னுமாக மாறி மாறிப் பயணிக்கும் கதையை தெளிவாகக் கோத்திருக்கிறார். சான் லோகேஷ்.



க்ரைம் த்ரில்லர் கதைக்கு பொலிஸ் அதிகாரிகளின் தேவை மிக முக்கியம். ஹீரோவைத் துரத்தும் வேலையைத் தவிர, பொலிஸாருக்குக் கதையில் எந்த முக்கியத்துவமும் இல்லை. படத்தில் எல்லாமே எதிர்பாராமல்தான் நடக்கிறது. ஒரு திரைக் கதையில் இத்தனை 'எதிர்பாராமல்' இருந்தால் கதையின்




மீதான நம்பகத்தன்மை குறைந்து போய்விடாதா? கேரக்டர்கள் எல்லோரும் நினைத்த நேரத்தில் சந்தித்துக் கொள்ளும்படி, சென்னையின் பரப்பளவையும் சுருக்கியிருக்கிறார்கள்.

பாக்கெட் நாவல் கதையாகவே இருந்தாலும் இன்னும் யதார்த்தம் சேர்த்திருந்தால் கண்கள் அபாரமாய் ஒளிவீசியிருக்கும்.

# அ.தி.மு.கவின் பொதுச் செயலாளர் நான்தான்

# அதிர்ச்சியில் ஓ.பி.எஸ், ஈ.பி.எஸ்.



## பரபரப்பாகும் தமிழ் நாடு

அ.தி.மு.கவின் பொதுச் செயலாளராக ஆவதற்கான முஸ்தீபுகளில் முன்னாள் எம்.பியான கே.சி.பழனிச்சாமி இறங்கியிருப்பதால், ஓ.பி.எஸ் - ஈ.பி.எஸ் தரப்பும் தினகரன் தரப்பும் உறைந்துபோய் உள்ளன.

தினகரன்- திவாகரன் மோதலால் குஷியில் இருந்த ஓ.பி.எஸ் - ஈ.பி.எஸ் தரப்புக்கு கே.சி.பழனிச்சாமியின் 'மூவ்' அதிர்ச்சியை அளித்துள்ளது. எனவே, மீண்டும் அவரைக் கட்சிக்குள் கொண்டுவந்து ஆஃப் செய்துவிட நினைக்கிறது ஓ.பி.எஸ்- ஈ.பி.எஸ் தரப்பு. இன்னொரு புறம், கே.சி.பியைத் தங்கள் பக்கம் இழுத்து, எடப்பாடிக்கு செக் வைக்க நினைக்கிறது தினகரன் தரப்பு.

கே.சி.பியின் நெருங்கிய வட்டாரத்தில் பேசினோம். "காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காவிட்டால், மத்திய அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு அ.தி.மு.க. ஆதரவு கொடுக்கும் என்று டி.வி. விவாதம் ஒன்றில் கே.சி.பி பேசினார். ஓ.பி.எஸ்., ஈ.பி.எஸ் ஆகிய இருவரும் அதை மிகப் பெரிய குற்றமாகக் கருதினர். மோடிக்கு பயந்து, கே.சி.பியை கட்சியைவிட்டு நீக்குவதாக அறிவித்தனர். ஆனால், அதனால் எழுந்த பிரச்சினைகளை சமாளிக்கத் தெரியாமல் இப்போது தவிக்கிறார்கள்.

சசிகலாவை அ.தி.மு.கவின் பொதுச்செயலாளராக நியமித்த போதே, 'அ.தி.மு.க சட்டவிதிகளின்படி அது செல்லாது' என்று தேர்தல் ஆணையத்தில் புகார் மனு அளித்தவர் கே.சி.பழனிச்சாமி. அதைப் பார்த்துத்தான், 'சசிகலா நியமனம் செல்லாது' என்று தான் வெளியேற்றப்பட்ட பிறகு, தேர்தல் கமிஷனில் பெட்டிஷன் போட்டார் ஓ.பி.எஸ். இப்போதோ 'எங்களின் பொதுச் செயலாளர் நியமனம் செல்லும். அவர்களின் ஒருங்கிணைப்பாளர் நியமனம் செல்லாது' என்று சசிகலா தரப்பும், 'எங்க ளின் ஒருங்கிணைப்பாளர் நியமனம் செல்லும். அவர் களின் பொதுச்செயலாளர் நியமனம் செல்லாது' என ஓ.பி. எஸ் தரப்பும் தொண்டர்கள் காதில் பூச்சுற்றுகிறார்கள். ஆனால், சட்டத்தின் முன் எதுவும் எடுபடாது. முறைப்படி தேர்தல் நடத்தி, அதில் அடிப்படை உறுப்பினர்கள் வாக்களித்து தேர்வாகும் பொதுச் செயலாளருக்குத்தான், யாரையும் நீக்கவோ சேர்க்கவோ அதிகாரம் உண்டு. கே.சி.பியை நீக்க யாருக்கும் அதிகாரம் இல்லை.




பொதுச்செயலாளர் தேர்தலை நடத்துவதுதான் இப்போது கே.சி.பியின் ஒரே குறிக்கோள். டில்லி உயர் நீதிமன்றத்தில் நடந்துவரும் இரட்டை இலைச் சின்ன மேல்முறையீட்டு வழக்கில், பொதுச்செயலாளர் தேர்தலை நடத்தச் சொல்லி தினகரன் தரப்பு வாதாடி வருகிறது. அதை வேண்டாம் என்கிறது ஓ.பி.எஸ் தரப்பு. தேர்தல் ஆணையத்தில் இந்த விவகாரம் குறித்து எல்லோருக்கும் முன்பாக மனு செய்திருந்த கே.சி.பழனிச்சாமியை, இந்த மேல்முறையீட்டு வழக்கில் கழற்றிவிட்டுவிட்டார்கள். தன்னையும் அதில் சேர்க்குமாறு கே.சி.பி. இப்போது மனுகொடுத்துள்ளார். அவரும் அந்த வழக்கில் சேர்க்கப்படும் பட்சத்தில், 'அ.தி.மு.கவில் பொதுச்செயலாளர் பதவிக்குத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்' என்ற வாதம் வலுக்கும். இது தங்களுக்கு நெருக்கடியைக் கொடுக்கும் என்று பதறிப்போயுள்ளது ஓ.பி.எஸ் தரப்பு.

இதனால், கே.சி.பியை மே 7 ஆம் திகதி தன் வீட்டுக்கு அழைத்து ஓ.பி.எஸ் பேசினார். 'நடந்த எல்லாத்தையும் மறந்துடுங்க. மீண்டும் உங்களைக் கட்சியில் சேர்த்ததா அறிவிச்சுடுறேன். மனஸ்தாபம் இல்லாம கட்சிப்பணி செய்யுங்க. உங்களுக்கு சேர வேண்டியது வந்து சேரும்' என்று சொல்லியுள்ளார். அதற்கு கே.சி.பி. 'அதெல்லாம் இருக்கட்டுமுங்க என்னை எதுக்கு நீக்குனீங்கன்னு சொல்லுங்க'ன்னு கேட்டிருக்கார். 'முதல்வர்தான் நீக்கச்சொன்னார்' என்று எடப்பாடி தலையில் பழியைத் தூக்கிப் போட்டிருக்கிறார் ஓ.பி.எஸ்.

உடனே கே.சி.பி., 'என்னை நீக்கிய மறுநாளே, அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, தங்கமணி மற்றும் சேலம் இளங்கோவன் எல்லாம் அடுத்தடுத்து போன் பண்ணி 'எங்களைத் தப்பா நினைச்சுக்காதீங்க. இதுக்கும் முதல்வருக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. ஓ.பி.எஸ்-தான் எல்லாத்துக்கும் காரணம்'னு சொன்னாங்களே அது பொய்யா? என்று கேட்க, அதற்கு பதில் சொல்ல முடியாமல் திணறி விட்டார் ஓ.பி.எஸ். 'பழசையெல்லாம் விட்டிருங்க, நடக்கப்போறதைப் பத்தி பேசுவோம்' என்று சொல்லியிருக்கிறார் ஓ.பி.எஸ். அதற்கு, 'நான் மீண்டும் உங்களோட வர்றதைப் பத்திப் பிரச்சினை இல்லை. பொதுச்செயலாளர் தேர்தலை நடத்தறதுக்கான ஏற்பாடுகளை ஆரம்பிக்கணும். 15 பேர் கொண்ட வழிகாட்டுதல் குழுவை அமைக்க வேண்டும். அதில் ஓர் ஆளாக என்னை இணைக்க வேண்டும். இதுக்கு ஓ.கே-ன்னா நான் வர்றேன்' என நிபந்தனை விதித்துள்ளார்" என்றது கே.சி.பியின் நெருங்கிய வட்டாரம்.

"பொதுச்செயலாளர் தேர்தல் வைத்தால் எடப்பாடிக்கும், ஓ.பி. எஸ்-ஸுக்குமே தகராறு வெடிக்கும். தவிர, அவர்கள் இருவர மீதுமே கட்சியினர் மத்தியில் அதிருப்தி நிலவுகிறது. இந்தப் பக்கம் தினகரனால் போட்டியிட முடியாது. சசிகலா போட்டியிடலாம். ஆனால், அவர் மீது கட்சினருக்கு பெரிய அபிப்பிராயம் இல்லை. விதி இருந்தால் அ.தி.மு.கவின் அடுத்த பொதுச்செயலாளர் நான்தான்" என்று தன் நண்பர்களிடம் சொல்லி வருகிறாராம் கே.சி.பி.

இன்னொரு பக்கம் பெங்களூர் புகழேந்தி, தங்க தமிழ்ச்செல்வன் என பலர் மூலம் கே.சி.பியைத் தங்கள் பக்கம் இழுக்க தினகரன் தீவிர முயற்சி செய்கிறார்.

கே.சி.பழனிச்சாமியோ "பொதுச் செயலாளர் தேர்தலில் போட்டியிட நான் உட்பட ஒன்றரைக் கோடி தொண்டர்களுக்கும் உரிமை உள்ளது. எவ்வளவோ வழக்குகள் தன்மீது இருந்த போதும், கட்சியை ஜெயலலிதா காவு கொடுத்தது கிடையாது. 'மோடியா, இந்த லேடியா...பார்த்து விடலாம்' என்று துணிச்சலுடன் சவால்விட்டுப் பேசினார். அதனால்தான், அவருக்கு மக்கள் செல்வாக்கு குறையாமல் இருந்தது. இவர்களோ மோடி சொல்வதைத்தான் கேட்கிறார்கள். பி.ஜே.பி. தலைவர் ஒருவர் சொன்னார் என்பதற்காக, கட்சியிலிருந்து என்னை நீக்குகிறார்கள். இவர்கள் கட்சியையே காவு கொடுக்கத் துணிந்து விட்டார்கள்.

நான் எம்.ஜி.ஆர் காலத்திலிருந்து இந்தக் கட்சியில் இருக்கிறேன். எம்.ஜி.ஆர் வழியில் நின்று அ.தி.மு.கவைக் காப்பாற்றும் பொறுப்பு எனக்கு இருக்கிறது" என்கிறார்.

-ஜூனியர் விகடன்-

## படம் பார்த்து கதை சொல்க...



# facebook

# கோலமாவு

இங்க பாருங்க...நீங்க ப்ராடக்ட்டை வாங்கி ஒரு வருஷமாயிட்டுது. ஆமாங்க .... சொன்னோம்... டேர்ம்ஸ்சை அக்ரீமெண்ட்டுலே பாருங்க... என்ன... இல்லையா... எங்கோ வெச்சுட்டீங்களா.... அதுக்கும் நாங்க தான் பொறுப்புன்னு சொல்லிடப் போறீங்க... பாருங்க, இது இரு மல்டிநஷனல் கம்பெனி... வாக்கு கொடுத்தா தவற மாட்டோம். ஒரு வருஷத்திற்கு ஃப்ரீ சர்விஸ் வீட்டுக்கு வந்து செய்து கொடுப்போம்... அப்புறம் செய்வது எல்லாம் பெயிட் சர்விஸ் தான். என்ன... உங்களுக்கு வயசாயிடிச்சா... அதுக்கு நான் என்னங்க செய்ய முடியும்... யாரை யாவது துணைக்கு கூட்டி வாங்க.... நான் கம்பெனி வைஸ் பிறசிடெண்ட்.... இந்த விடயமெல்லாம் என் கையிலே இல்ல... யாரிடமோ நம்பர் வாங்கி போன் பண்ணிட்டீங்க. அதுனால பொறுமையா பதில் பேசுறேன்...

மிகவும் உயர்த்திய குரலில் அவன் பேசிக்கொண்டிருக்கும்போது அதை விட உயர்ந்த குரலில் மனைவி குரல் கொடுத்தாள்..

என்னங்க... வாசல்ல கோலமாவு போறது பாருங்க.... கொஞ்சம் வண்டியை நிப்பாட்டுங்க... சனி ஞாயிறு விட்டா ஆள் வரவேமாட்டான்.


போனை படக்கென்று ஆப் செய்துவிட்டு வாசலுக்கு விரைந்தான். ஏய்... கோலமாவு.. நில்லு. நில்லு..." மோட்டார்சைக்கிளில் முன்புறத்தில் லௌட் ஸ்பீக்கரில் கோலமாவு. கோலமாவு குரலை சத்தமாக வழிய விட்டபடி, ஜீன்ஸ் பாண்ட் ரிஷேட் சகிதம் கால்களின் இடுக்கில் கோலமாவு பையுடன் வாசலுக்கு வந்தது ஒரு வாலிபன். அவன் எதிர் பார்க்கவில்லை.

முகம் கூட எங்கேயோ பார்த்தார்போல் இருக்கிறதே...?

சார், ஒரு படியா இரண்டா? என்னை நினை வில்லையா சார்? ப்ரோக்ராமர் வேலைக்கு இண்டர்வ்யூ செய்து உங்க கம்பெனியிலே எடுத்தீங்களே... என்னை ப்ரிலியண்ட் போய்ன்னுகூட பாராட்டினீங்களே சட் என்று நினைவில் வந்தது.

அட...ஆமாம், அது சரி... நீ இப்போ வேலையிலே இல்லியா.. கோலமாவு விக்க கிளம்பிட்டே...?

இல்ல சார், வேலையிலேதான் இருக்கேன். நமக்கு சனி ஞாயிறு விடுமுறைதானே... அதான் ... இந்த வேலை... அவனுக்கு ஆச்சர்யமாக இருந்தது. மற்ற நிறுவனங்களைவிட அதிகம் கொடுப்பதாக அவன் கம்பெனிக்கு வெளியில் பெயருண்டு. அது போதவில்லையா? இந்த கோலமாவு விற்பனையில் அவனுக்கு என்ன கிடைத்து விடும்?



கேட்டான் சார் இது பணத்துக்காக செய்யலை...தாத்தா அப்புறம் அப்பான்னு இந்த ஏரியாவிலேதான் கோலமாவு வித்தாங்க....அது விட்டுப்போயிடக்கூடாதுல்ல..."

சரிப்பா.... பாதிவீட்டுலே கோலம் போடுவதைக்கூட நிறுத்திட்டாங்க.

சார், அந்த ஒண்ணு ரெண்டு வீட்டிலே என் தாத்தா அப்புறம் அப்பா, இப்ப நானு...எங்ககிட்டமட்டும்தான் மாவு வாங்குவாங்க...மண்ணு கலக்காம எங்க மாவுல தான் பளிச்சுனு கோலம் மங்களகரமா இருக்குதாம்.... அப்பாவோட ஆசை சார்.

நம்ம கஸ்டமருங்க... அவங்க சந்தோஷமா இருக்கணும்ன்னு.... ஆனால் அப்பா தாத்தா போல என்னால கூவ முடியலை அதான் வாய்ஸ் ரெகார்ட் செய்து ஸ்பீகர்லே போட்றேன்....

அவன் பேசிக்கொண்டே இருந்தான். ஒப்பந்தம் போடப்படாவிட்டாலும் கொடுக்கப்படும் இந்த கஸ்டமர் சாடிஸ்ஃபாக்ஷனுக்கு புது அர்த்தம் கற்பித்தபடி.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1418

Search for people, places and things   Nagendram   Home

### ஆதன்


என் வாழ்க்கையை நான் பார்த்துக் கொள்கிறேன் என பெற்றோரிடம் பேசாதீர்கள்!



உங்களால் அப்படிப் பேச முடிவதற்கான தன்னம்பிக்கை தந்தவர்கள் அவர்கள் தான்!

### தயாபரன்

உலகத்தின் பார்வையை உங்களின் பக்கம் திருப்ப வேண்டுமானால்




சாதாரண விடயங்களையும் அசாதாரணமான முறையில் செய்யுங்கள்...!

### ஞானேஸ்வரன்

வெற்றிக்குப் பின் உழைப்பதை நிறுத்தி விடாதீர்கள்...!



தோல்விக்குப் பின் முயற்சிப்பதை நிறுத்தி விடாதீகள்

### பிரணவன்

நேர்மையானவர் எங்கு சென்றாலும் பிரச்சினைதான்



ஏனென்றால் எல்லா இடங்களிலும் தவறுகள் நிறைந்திருக்கின்றன...!

### பிரதிப் குகதாஸ்

அழகில் மயங்கி காதலில் விழுந்து விடலாம்...



ஆனால்... கடைசி வரை வாழப்போவது குணத்தை வைத்துத்தான்...!

### ஸ்ரீரங்கன்

இறைவன் படைப்பில் இயல்பு கெடாமல் இருக்கும் பட்டியலில்...



இன்னமும் மாறாமல் இருப்பது குழந்தைகளின் சிரிப்பு மட்டும்தான்...!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 132

**கேள்வி:-** நான் 30 வயதுடைய முதலாவது சிசுவைத் தாங்கும் 3 மாதக் கர்ப்பிணிப் பெண் ஆவேன். எனக்கு 2 வாரங்களின் முன் பொக்குளிப்பான் நோய்த் (Chicken pox) தாக்கம் ஏற்பட்டது. இதனால் எனது சிசுவுக்குப் பாதிப்பு ஏற்படுமா?



**பதில்:-** பொக்குளிப்பான் (Chicken pox) நோயானது ஒருவருக்கு 2 படிநிலைகளில் ஏற்படலாம். முதன்மையான நோய்த்தொற்று (Primary infection) ஆனது Varicella zoster எனப்படும் வைரஸினால் ஏற்படுத்தப்படுகிறது. இது முறையாகச் சிகிச்சையளிக்கப்படாதவிடத்து தாயில் நோய்ப் பாதிப்புகளையும் சில வேளைகளில் மரணத்தையும் சிசுவில் Varicella Syndrome ஐயும் ஏற்படுத்தலாம்.

Varicella Zoster வைரஸ் ஆனது பொக்குளிப்பான் நோயாளி தும்மும்போதும், இருமும்போதும் வெளிப்படும் சுவாசப்பைச்சுரப்பு, கொப்புள நீரின் நேரடித் தொடுகை மூலமும் பரவுகிறது.

முதன்மையான தொற்றுக் காய்ச்சல், களைப்பு, கடியுடன் கூடிய தோல் அழற்சி, கொப்புளங்கள் ஆகிய அறிகுறிகளைக் கொண்டிருக்கும். இந்தத் தோல் அழற்சி தோன்றுவதற்கு 48 மணித்தியாலம் முன்பு தொடங்கி கொப்புளங்கள் மறையும்வரையான காலப்பகுதியில் தொற்றுகின்றது.

முதன்மையான தொற்றைத் தொடர்ந்து வைரஸ், நரம்புக் கணுக்களில் மறைந்து வாழ்கிறது. எமக்கு நிர்ப்பீடனக் குறைபாடு ஏற்படும் நேரத்தில் அது மீண்டும் தொற்றுதலை ஏற்படுத்தும். இது Herpes Zoster or shingles எனப்படும்.

பொக்குளிப்பான் நோயானது கர்ப்பிணித் தாய்மாரில் சுவாசப்பைத் தொற்று ஈரலழற்சி, மூளையழற்சி போன்ற பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடியது.

சிசுவில் Fetal Varicella Syndrome எனப்படும் தோல் அழற்சி, கண்பாதிப்பு, அங்கங்களின் குறைவிருத்தி, நரம்புக் குறைபாடுகள் கொண்ட நோய்ப் பாதிப்பை ஏற்படுத்தலாம். இந்தப் பாதிப்பு கர்ப்ப காலத்தில் 3 ஆம் கிழமை முதல் 28ஆம் கிழமை வரையான காலப்பகுதியில் வைரஸ்தொற்று ஏற்படும்போது அதிகளவில் ஏற்படுத்தப்படுகிறது.


சிசு பிறந்த பின்னர் கூட பொக்குளிப்பான் நோய் தாக்கலாம். வைரஸ் ஆனது தொப்புள் கொடி மூலமாக, பிறப்பு வழியூடாக அல்லது நோயாளியின் தொடுகையூடாகப் பரவலாம்.

பொக்குளிப்பான் நோயாளியிலிருந்து விலகியிருத்தல், நோயாளி தனிமைப்படுத்தப்படல் மூலம் நோய் தொற்றாது தவிர்க்கலாம்.

பொக்குளிப்பான் நோய் தொற்றினால் அல்லது தொற்றியுள்ளது எனச் சந்தேகித்தால் கர்ப்பிணிப் பெண்கள் உடனடியாக வைத்திய ஆலோசனையை நாட வேண்டும்.

நோயாளியிலிருந்து தூர விலகியிருந்து, தனிநபர் சுகாதாரம் பேணுதல் நோயைத் தவிர்க்க உதவும். கர்ப்பிணித் தாய் ஒருவர் நோய் தொற்றிய நிலையில் சுவாசப் பிரச்சினை, நரம்பியல் அறிகுறிகள், குருதிப்பெருக்கு, தோல் அழற்சி, மென்சவ்வு அழற்சி ஆகியன ஏற்படுமிடத்து வைத்தியசாலைப் பராமரிப்பு அவசியம். சிசுவுக்கு ஏற்படும் அங்கக்குறைபாடுகள், சிறிய தலை (Microcephaly) தலையினுள் நீர் சேர்தல் (Hydrocephalus) மூளை வளர்ச்சிக் குறைபாடு, இழையங்களில் கல்சியம் படிதல், வளர்ச்சிக் குறைபாடு போன்றவற்றை அல்ட்ரா சவுண்டு ஸ்கான் (Ultra sound scan) மூலம் கண்டறியலாம்.





பொக்குளிப்பான் வைரசுக்கு எதிரான மருந்து வகைகளை, தடுப்பூசிகளை வைத்திய ஆலோசனைப்படி பயன்படுத்தல், நோயுற்ற கர்ப்பிணித்தாய்மாரை நோய்ப் பாதிப்பிலிருந்து காப்பாற்றும் தாயிலிருந்து சிசுவுக்கு தொப்புள் கொடி மூலம் கடத்தப்படும் பிறபொருளெதிரிகள், சிசுவில் நோய்வராது தடுக்கக்கூடியன. பொக்குளிப்பான் நோய்த் தடுப்பாற்றல் கொண்டவர்களுக்கு மறுபடியும் நோய்த்தொற்று ஏற்படாது.

**வைத்திய கலாநிதி**
**DR.யோ.சிவகரன்**

---

**கேள்வி :-** நான் ஒரு 38 வயதான ஆசிரியர். எனக்கு நீரிழிவு நோயும் உயர் குருதியமுத்தமும் இருப்பதால் மருந்துகளை உள்ளெடுக்கின்றேன். சில வேளைகளில் மட்டும் மது அருந்துவதுடன் புகைப்பிடிக்கும் பழக்கமும் உண்டு. திருமணமாகி 5 வருடங்களாகியும் பிள்ளைச்செல்வமில்லை. உடலுறவின் போது ஆண்குறி விறைப்படையாத தன்மை காணப்படுகின்றது. உங்களின் அறிவுரையை எதிர்பார்க்கின்றேன்.

**பதில்:-** ஆண்குறி விறைப்படையும் செயற்றிறனின்மை (Erectile Dysfunction) என்பது உடலுறவின் போது ஆண்குறி விறைப்படைவதிலும் நீடிப்பதிலும் ஏற்படும் குறைபாடாகும். ஏறத்தாழ 5 வீதமான 40 வயதுக்குட்பட்ட சுகதேகி ஆண்கள் இதனால் பாதிக்கப்படுகின்றனர். வயது அதிகரிக்கப் பாதிக்கப்படும் வீதமும் அதிகரிக்கின்றது.

நீரிழிவு நோயானது ஆண்குறிக்குச் செல்லும் குருதிக்குழாய்களையும் நரம்புகளையும் பாதிப்பதுடன் ஆண்குறியின் விறைப்புத்தன்மைக்குக் காரணமான தெஸ்தெஸ்ரிரோன் (Testosterone) ஓமோனின் அளவையும் குறைக்கிறது. மேலும் நீரிழிவு நோயால் ஆண்குறியின் இழையங்களின் இழப்பு, கட்டமைப்பு மாற்றங்கள், கிருமித்தொற்று ஆகிய பாதிப்புகள் ஏற்படுவதால் விறைப்புத்தன்மை குறைவடைகிறது. அத்துடன் நீண்டகாலமாக நீரிழிவினாலும் அதன் நோய்ச் சிக்கல்களாலும், பாதிக்கப்படும் ஆண் மன அழுத்தம், பதகளிப்பு போன்ற மனவியல் குறைபாடுகளிற்குட்படும் போது ஆண்குறி விறைப்படையாத் தன்மை இன்னும் மோசமாவதுடன் உடலுறவில் நாட்டமின்மையும் ஏற்படும். உடற்பயிற்சியின்மை, உயர் குருதியமுக்கம், உடற்பருமன் அதிகரிப்பு ஆகியவை நீரிழிவுடன் கைகோர்த்துக்கொண்டு ஆண்குறி விறைப்படையாத் தன்மையையும் அதிகரிக்கும் காரணிகளாகும்.



உயர்குருதியமுக்கத்திற்குப் பாவிக்கப்படும் (Beta Blockers, thiazide) போன்ற மருந்துகள் Anti Histamines NSAIDS (வலி நிவாரணிகள்) மன அழுத்தத்திற்குப் பாவிக்கப்படும் மருந்துகள் என 200க்கும் மேற்பட்ட மருந்துகளின் நீண்டகாலப் பாவனை இப்பிரச்சினையை ஏற்படுத்துகிறது. மதுவைப் பயன்படுத்தலும் புகைப்பிடிப்பதும் (Alcohol, Nicotine) ஆண்குறியின் விறைப்படையும் தன்மையைக் குறைக்கின்றன. உடலுறவின்போது ஆண்குறி விறைப்படையாத தன்மை ஏற்படுகையில் விந்து பெண்ணின் சனனித் தொகுதியில் முறையாக விடப்படுவதில்லை. இதனால் பதகளிப்பு, உடலுறவில் நாட்டமின்மை, தாழ்வு மனப்பான்மை என்பன ஆணைத் தொற்றிக்கொள்கின்றன. இதுவே ஆணினுடைய கருக்கட்டும் ஆற்றல் குறைவிற்குக் காரணமாக அமைகின்றது. மேலும் சிறுநீரக வியாதிகள், நரம்புத் தொகுதி நோய், முன்னிற்கும் சுரப்பி புற்றுநோயும் சத்திர சிகிச்சையும், தைரொக்சின், புரோலக்ரின், தெஸ்தெஸ்ரிரோன் போன்ற ஓமோன்களின் சீரற்ற நிலைமை போன்றவையும் ஆண் குறி விறைப்பின்மைக்குரிய காரணிகளாக இனங்காணப்பட்டுள்ளன.

### இனி இப்பிரச்சினையை எவ்வாறு வெற்றிக்கொள்வதெனப் பார்க்கலாம்.

ஆண்குறி விறைப்படைவதில் செயற்றிறனின்மையுடையவர்கள் இப்பிரச்சினையை மறைத்து வைக்காது தமது பெண் துணையுடனும் வைத்தியருடனும் கலந்தாலோசித்தல் வேண்டும்.

புகைப்பிடித்தல், மதுபானம் அருந்துதல் போன்ற பழக்கங்களை முற்றாக நிறுத்துதல் வேண்டும். ஒவ்வொரு நாளும் ஒழுங்கான உடற்பயிற்சி 20-30 நிமிடங்கள் மேற்கொள்ளல் மிகுந்த பயனளிக்கும். மன அழுத்தத்தைக் குறைப்பதற்காக, உளவளத் துணையை நாடல், முறையான ஓய்வு, சமச்சீர் உணவு, போதுமான உறக்கம், மூச்சுப்பயிற்சி, தியானம் போன்றவை உதவும்.

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட ஆண்களில் 35 வீதத்துக்கு மேற்பட்டோர் ஆண்குறி விறைப்படையாத் தன்மையால் பாதிக்கப்படுகின்றனர். எனவே குருதியில் குளுக்கோஸ் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவேண்டும். ஒழுங்கான மருந்துப்பாவனையும் நீரிழிவால் ஏற்படும் சிக்கல்களை ஆரம்பத்திலேயே கண்டறிதலும் இந்தப் பிரச்சினையின் வீரியத்தைக் குறைக்கும்.

குருதியில் கொழுப்பின் அளவு, குருதியமுக்கம், உடல்நிலை ஆகியவற்றைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் வேண்டும். வைத்தியரின் ஆலோசனைப்படி ஆண்குறி விறைப்படையாத தன்மையை ஏற்படுத்தும் மருந்துகளுக்குப் பதிலாக வேறு மருந்துகளைப் பாவிக்கலாம்.

பாலியல் சிகிச்சையாளரிடம் (Sex Therapist) ஆலோசனை பெறுவதன் மூலம் பாலியல் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம். இன்றைய நவீன மருத்துவம் Silfenafil (Viagra) போன்ற மருந்து வகைகள், ஓமோன் வகைகள் உறிஞ்சற் பம்பிகள் (Vacuum Erection Devices) ஆண்குறியை விறைப்படையச் செய்வதற்கான ஊசி மருந்துகள், சத்திரசிகிச்சை முறைகள் போன்ற பல தெரிவுகளை வழங்குகின்றது. மேற்கூறிய தெரிவுகள் வைத்திய ஆலோசனையின்படியே செயற்படுத்தப்பட வேண்டும்.

**வைத்திய கலாநிதி**
**Dr.யோ.சிவாகரன்**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**